Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்




மலர் 11 | சௌமிய கார்த்திகை 16 | றம்ழான் 20 | (1-12-69) | திங்கட்கிழமை | இதழ் 291

ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானின் ஆசிச் செய்தி

# மக்கள் மனதைத் திருத்த நாவலர் கூறும் புதிய வழி

( விண்ணக நிருபர் திரு. முத்துகிருஷ்ணன் )

**சைவசமயாச்சாரிகளுள் ஐந்தாங்குரவராகிய யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் முகதி நிலையில் கைலாயத்திலிருந்து விண்ணுலகத் தொடர்புப் பேட்டி மூலமாக (இறந்தவர்கள் பேசும்பலகை) 23—11—69அன்று இந்தி பரப்ப மீரிகம என்ற இடத்தில் வைத்து தன்னுடைய குருபூசைத் தினமாகிய 1—12—69 அன்று வெளியிடுவதற்காக உலக மக்களுக்கு அருளிய விண்ணுலகத் தொடர்புபறறியவிளக்கஉரை.**



என் தினத்தன்று இறந்துபான நானே என்நாட்டு மக்களுக்கும் உலகமக்களுக்கும் ஓர் அறிவுரை நிகழ்த்துகிறேன்.

இந்த என்னுடைய தினத்தன்று உங்களுக்கு இதுவரை நான் சொல்லாத அதிஅற்புதவிஷயம் ஒன்றைச் சொல்லப்போகிறேன். அவ்வுலகில் வாழும்போது நான் சைவசமயத்தைப்பற்றி நன்றாகத் தெரிந்து வைத்திருப்பதாகத்தான் எண்ணினேன். ஆனல் இவ்வுலகுக்கு வந்தபின்தான் அது தவறு என்று தெரிந்தது. இவ்வுலகுக்கு வந்தபின்தான் எனக்கு சைவசமயத்தைப்பற்றி முழுவதும் தெரிந்துஇருக்கிறது. அதனுல் நீங்கள எல்லாரும் நினைத்துவிடாதீர்கள் இறந்தபின்தான் சைவ சமயத்தைப்பற்றி முழு விபரமும் தெரியும் என்று. அப்படி எல்லாம் நீங்கள் ஐயுற வேண்டாம். உங்களுக்கு அதற்குத்தான் ஆண்டவன் கருணைகூர்ந்து, இந்த இறந்தவர்களுடன் பேசும் முறையைத் தெரிவித்திருக்கிறுன். அதனுல் எங்களுக்கு நாங்கள் அவ்வுலகில் இருக்கும்போது தெரியாதவற்றை, இவ்வுலகுக்கு வந்தபின் அவற்றை தெரிந்து உங்களுக்கு எடுத்துச்சொல்ல முடிகிறது.

சைவ சமயத்தைப்பற்றியோ அல்லதுவேறுஎதைப் பற்றியோ சந்தேகம் இருந்தால் நேரே இங்கு வாருங்கள். நான் அதைத் தீர்த்து வைக்கத் தயாராக இருக்கிறேன்.

சமீபத்தில் எனக்கு நடந்த விழாவில் கலந்துகொள்ள உயர் திரு மதுரை ஆதீனம் திருப்பெருந்திரு திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமி அவர்கள் இலங்கைக்கு விஜயஞ் செய்திருந்தார்கள். அவர்கள் விஜயம் செய்த நேரம் பொன்னன நேரம். அவர்கள் இவ்விடம் விஜயஞ் செய்தநேரத்தின் பலன், ரேகை சாஸ்திரத்தில் மட்டுமே அதிக நம்பிக்கை கொண்டுள்ள திரு மாணிக்கவாசகம் அதற்கு சமமாக இதிலும்நம்பிக்கை வைத்து, பாவத்தில் மூழ்கியிருக்கும் உலகை அதிலிருந்து மீட்க,

(2-ம் பக்கம் பார்க்க)

# இன்று நள்ளிரவு வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம். திங்

இலங்கைபுகையிரத கார்ட்மார் சங்கமும், இலங்கை புகையிரத சாரதிகள் சங்கமும் இன்று நள்ளிரவு 12 மணிமுதல் வேலைநிறுத்தத்தில் குதிக்கின்றன. இந்த முடிவு புகையிரதநிர்வாகத்திற்கும் அரசாங்கத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது

பிரயாணிகளுக்கு இந்த வேலைநிறுத்தத்தினல் ஏற்படும் அசௌகரியங்களைப் பொறுக்குமாறும் டிசம்பர் 1-ம் தேதி இரவு முதல் புகையிரத பிரயாணங்களைத் தவிர்க்குமாறும் இச்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

### தபால்சேவை

புகையிரதப் பகுதியினரின் வேலைநிறுத்தம்பற்றி தங்களுக்குத் தெரியாதென்றும், தபால்சேவை வழக்கம்போலவே நடைபெறுமென்றும், தபால் கந்தோர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### பாதுகாவலர், சாரதிகள் வேண்டுகோள்

மாவிட்டபுரம், திங்கள்

''டிசம்பர் மாதம் 1-ம் திகதி இரவு பிரயாணம் செய்ய உத்தேசித்திருக்கும் பொதுமக்களை அவர்களின் பிரயாணங்களை ஒத்திவைக்கும்படி பொதுமக்களுக்கு புகையிரத பாதுகாவலர் சாரதிகள் சங்கம் பத்திரிகை மூலம் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது.

புகையிரத பாதுகாவலர் சங்கமும், சாரதிகள் சங்கமும் பொதுமக்களுக்கு பத்திரிகைகளூடாகவிடுத்துள்ள அறிக்கையொன்றில் டிசம்பர் மாதம் 1-ம் திகதி இரவு பிரயாணம் செய்ய உத்தேசித்திருக்கும் பொதுமக்களை அவர்களின் பிரயாணங்களை ஒத்தி வைக்கும்படி கோருவதுடன் தமது கோரிக்கைகள் கிடைத்து தாம் வேலைக்குத் திரும்பும்வரை ஏற்படும் அசௌகரியங்களைப் பொறுத்துக் கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### ஒருவர் சென்ருர்

யாழ்ப்பாணம், திங்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் வேலைநிறுத்தம் செய்துவரும், 15 ஆய்வுகூட தொழில் நுட்ப ஊழியர்களில் நேற்றுஒருவர்வேலைக்குத்திரும்பியுள்ளார். நேற்று முதல் முக்கிய பரிசோதனைகள் நண்பகல் 12 மணிவரை இங்குள்ள ஆய்வு கூடத்தில் செய்யப்பட்டுவருகிறது. 14 ஊழியர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 22 ஆய்வுகூட தொழில்நுட்ப ஊழியர்களில் ஒருவர் மட்டுமே வேலை செய்துவருகிருர். இலங்கை முழுவதும் சுமார் 500 ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர்.

வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெற்ருல் மற்றும் இரு ஆய்வுகூட தொழில் நுட்ப சங்கங்களும் வேலைநிறுத்தத்தில் குதிக்கலாமென வேலைநிறுத்த ஊழியர் ஒருவர் தெரிவித்தார்

சுகாதார அத்தியட்சகருடன் சங்க ஊழியர்கள் நேற்று பேச்சுவார்த்தை நடத்தியபோது ஊழியர்களின் பிரச்னைகள் தெரிந்திருப்பதாகவும், இவற்றை மந்திரியிடம் சமர்ப்பிப்பதாகவும், சுகாதார அத்தியட்சகர் தெரிவித்ததாக ஊழியர் சங்கஉறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

### நாவலர் ஊர்வலம்

யாழ்ப்பாணம், திங்கள்

சைவபரிபாலன சபையாரின் வழமையான நாவலர் குருபூசைவிழா நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இன்று நடைபெறும்.

திருச்செந்தூர்ப் புராண வெளியீடும் பத்து பஜனை சபைகள் பங்கு பற்றும் ஊர்வலமும் நடைபெறும்.

# கைத்தொழில் விருத்தி சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர்பெருமான் ஆசி உரை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆரம்பித்து விட்டார்கள். அவர்களுடைய திருக்குமாரத்தி செல்வி வித்தக விநாயக வடிவுக்கும் அதியற்புத உயர்ந்த சிறந்த புண்ணிய 'மீடியம்' சக்தி அமைந்து சாதாரணமாக இறந்தவர்களோடு மட்டுமஅன்றி, முக்தி நிலை அடைந்த பெரியசுவாமிகள், மகான்கள் எல்லோரும் அவள்மூலமாக சுலபமாக மகிழ்ச்சியுடனும் அதி விருப்பத்துடனும் பேசி வருகிறார்கள். இலங்கைக்கு மதுரை குருமகாசந்நிதானமவர்கள் விஜயஞ்செய்தபோது அவர்கள் உரையை மாணிக்கவாசகத்தின் அருந்தவப் புதல்வன் சிரஞ்சீவி முத்துக்கிருஷ்ணன் கேட்டு அதன்படி வீட்டில் பேசிப்பார்க்க தன் தங்கைக்கே உயர்ந்த மீடியம் சக்தி இருப்பதைத் தெரிந்துகொண்டு. தெரிந்துகொண்டதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் அதை அந்தச்சமயம் கொழும்பிலிருந்த தன் தந்தைக்கு போன்மூலம் தெரியப்படுத்த, திரு. மாணிக்கவாசகம் அவர்களும் தெரிந்துகொண்டதோடு மட்டுமல்லாமல் சுவாமிகளின் திருவாக்கைக் கடைப்பிடிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள். இன்று அவ்வுலகம் இருக்கும் நிலைமைக்கு இறந்தவர்களோடு பேசும் முறையைப்பற்றி அவசியம் பரப்ப வேண்டும். இல்லாவிட்டால் உலகம் உய்யாது!

இப்போது ஒரு கேள்வி எழும் சமயங்களைப்பற்றிய நூல்களைப்படித்து அதைப் பரப்பினாலும் மக்களைத் திருத்த முடியுமே, இந்த இறந்தவர்களோடு பேசும்முறை தேவையில்லையே என்று.

அதற்கு என்பதில், சமயங்களைப் பரப்புவோர் முதலில் அதைப்படித்துத் தெளிவாக உணர்ந்து பிறகு அதை மக்களுக்கு உபதேசித்து மக்களும் அதை உணர்ந்து, புரிந்து கடைப்பிடித்து திருந்துவதற்குள் பல யுகங்கள் கழிந்துவிடும். இதற்கு நான் சைவ சமயத்தைப்பற்றி நூல்கள் எழுதியிருப்பதே அத்தாட்சி. ஒரு நூறுபேர் இருக்குமிடத்தில் பத்துப்பேருக்குத்தான் அது தெரிந்திருக்கும். அதுவும் சரிவரப் புரிந்திருக்காது. இப்படிப்போனால் எப்போது சமயப்படிப்பை மட்டும் வைத்து மக்களைத் திருத்துவது?

ஆனால், மக்களை, இந்த இறந்தவர்களுடன் பேசும் முறைமூலம் உண்மைகளை எடுத்துச் சொல்லி திருத்த மிகவும் சொற்ப நேரம் போதும். அறிவுள்ளவர்களுக்கு விளங்க ஐந்து நிமிடம் போதும். அறிவுள்ளவர்களென்று நினைத்துக்கொண்டு ஆணவத்தோடு அர்த்தமில்லாமல் வாதிப்பவர்களுக்கு ஒருமணிநேரம் போதும். மற்றும் நியாயமாகக் கேட்கவேண்டிய கேள்விகளைக் கேட்பவர்களுக்கு அரைமணி நேரம் போதும் மற்றும் புரிந்துகொண்டு, விளங்கிக்கொண்டு சுயகௌரவத்திற்காக ஆணவத்தோடு உண்மையை ஒப்புக்கொள்ள மறுப்பவர்களுக்கு கீழே விழுந்து நமஸ்காரம் செய்து பணியவைக்க சுமார் இரண்டு மூன்று நாட்களாகும். ஏனென்றால் புரிந்தபின்னும் சுயகௌரவத்திற்காக ஒப்புக்கொள்ள மறுப்பவர்கள் அல்லவா? அவர்களை எப்படி மடக்கி உண்மையை ஒப்புக்கொள்ள வைக்க வேண்டும் என்றால் வாதித்துக்கொண்டே வரவேண்டும். உண்மையை அடுத்தவரை ஒப்புக்கொள்ள வைக்கப் போகிறவர் மிகவும் கவனமாகவும் நுணுக்கமாகவும் எதிராளியின் வாதத்தைக் கவனித்துக்கொண்டே வாதிக்கவேண்டும். உண்மையை உணர்ந்த பின்னும் சுயகௌரவத்திற்காக ஒத்துக்கொள்ள மறுப்பவர்கள் எளிதில் பேச்சில் கோட்டை விட்டு விடுவார்கள். அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டு மடக்க வேண்டும். இப்படியாக எப்பேர்ப்பட்ட வம்புக்காரர்களாக இருந்தாலும் இதன்மூலம் அவர்களுக்கு எப்படியும் உண்மையை உணர்த்த முடியும் என்று நான் உறுதிமொழி அளிக்கின்றேன். இந்த அரிய கைங்கரியத்தைச் செய்ய திரு. மாணிக்கவாசகம் மட்டும் காணாது ஏனென்றால் அவ்வுலகத்தில் அந்த அளவுக்கு நாத்திகம் நிரம்பி வழிகிறது. இதற்கு விண்ணுலகப் பெரியோர்கள்மட்டும் காணாது பூவுலகத்திலும் சில பெரியவர்கள் வேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ மதுரை குருமகாசந்நிதானம் அவர்கள் சைவ சமயத்தைப் பரப்பும் ஆலமரம். அதன் விழுதுகள் திரு. மாணிக்கவாசகம் முதலியோர் இன்னும் பல விழுதுகளை எதிர்பார்க்கிறோம் நம் விழுதாவதற்கு முதலில் இதைப்பற்றி நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டு மல்லவா? அதற்கு இங்கு வரவேண்டும். நான் என் ஈழநாட்டு மக்களுக்கும்சரி மற்ற மக்களுக்கும் சரி இங்கு வர அழைப்புவிடுக்கின்றேன். வம்புக்காரர்களுக்கு சவாலும் விடுக்கின்றேன்.

உங்கள் எல்லோருக்கும் பதில்சொல்ல இங்கு நான் மட்டுமா என்ன? ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸ சுவாமிகள், ஸ்ரீவிவேகானந்தசுவாமிகள், ஸ்ரீ விபுலானந்தசுவாமிகள், மகான் ஸ்ரீ திருவள்ளுவப்பெருமான், ஸ்ரீ பாம்பன் சுவாமிகள், பேரன்புக்கடல் அமெரிக்க ஜனாதிபதி (தற்சமய ஆவியுலக ஜனாதிபதி) உயர்திரு ஜான் எப். கென்னடி அவர்கள், இப்படி இன்னும் பலர் இருக்கின்றோம்.

அரசியலைப்பற்றி தெரிய வேண்டுமா? வாருங்கள் செல்வி வித்தகம் இருக்கும் இடமான மீரிகமத்திற்கு உங்கள் அரசியலைப்பற்றிய சந்தேகங்கள் இங்கு உங்கள் அபிமானத்திற்குரிய அரசியல் தலைவர்கள் திரு மகாத்மாஜி, திரு. நேருஜி, திரு. அண்ணாதுரை, திரு. ஜாகீர் உசேன் இப்படி இன்னும் பலரிடம் கேட்டுத் தெளிவடைந்து போகலாம். நான் நிச்சயமாகக் கூறுவேன் அங்கு வந்து பணிவுடன் எங்களுடன் பேசிவிட்டுப் போகும் மக்களின் மனம் தெளிந்த நீரோடைபோல் இருக்கும் என்று. அநேகமாக மக்கள் மனதுஎல்லாமே உலக விஷயங்களில் தலையிடும் முன்னால் அமைதியான நதியாகத்தான் இருக்கிறது. உலக விஷயங்களில் தலையிட்டபின் அந்த அமைதியான நதியில் வெள்ளம் பெருக்கெடுத்ததுபோல்ஆகி விடுகிறது. நான் இப்படி சொல்வதனால் யாரும் நினைக்கவேண்டாம். நான் உலக விஷயங்களிலேயே தலையிட வேண்டாம் என்று சொல்வதாக. அவ்விஷயங்களிலும் தலையிட்டுஅவற்றையும் தெரிந்துவைத்திருக்க வேண்டும். அதே நேரத்தில் மனதையும் கலங்கவிடக் கூடாது. வெள்ளம்பெருக்கு எடுக்கவிடக்கூடாது. அணைகட்டித்தடுக்கவேண்டும். அப்படி அணைகட்டித் தடுப்பதற்கு இறந்தவர்களோடு பேசும் முறையானஇதுதான் சிறந்தவழி. அப்போது விஷயங்களும் தெரியும். நம் மனமான நதியும் அமைதியாக இருக்கும். நிறைகுடம் தளும்பாதல்லவா? குறைகுடம் கூத்தாடும், வெறும் குடம் தளும்பாது.

அதேபோல் மக்களில் நான் சொல்லியிருக்கும் மாதிரி எல்லாவற்றையும் தெரிந்து நிறைகுடமாக இருப்பர் சில மக்கள். சிலர் ஒன்றுமே அறியாததனால் எதையுமே ஆராயப்போக மாட்டார்கள். சிலர் இருக்கிறார்கள், எல்லாமே தெரிந்தமாதிரிக் காட்டிக் கொண்டு அரைகுறையாகத் தெரிந்த அரைக் குடங்கள்.

ஓர் அன்பர் எமக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அவர் நான் சொன்ன அரைகுடம். மனமான நதியைக் கலங்க வைத்திருப்பவர். அதைத் தெளிய வைக்க நான் இன்னொரு உரை நிகழ்த்தவேண்டியிருக்கும். அக்கடிதத்தில் பணிவு இல்லை, மரியாதை இல்லை, அன்பு இல்லை. அதிகப் பிரசங்கித்தனமும், ஆணவமும், அகம்பாவமும், அறிவின்மையும் நிறைந்து வழிகிறது. அக்கடிதத்தை அவர் புத்திசாலித்தனமாக எழுதியிருப்பதாக நினைத்திருக்கிறார். அதை பின்னால் நானே தெளிவுபடுத்துவேன். என் ஈழநாட்டு மக்கள் மீண்டும் என் உரை ஒன்றை 'ஈழநாடி'ல் விரைவில் பார்ப்பீர்கள். இந்த என் தினத்திலிருந்தாவது மக்கள் பலர் இறந்தவர்களுடன் பேச ஆரம்பிக்கட்டும் என ஆசிர்வதிக்கிறேன்.

இன்னும் சில நாட்களுக்குள் விண்ணுலகோருடன் மண்ணுலகோர் தொடர்பு கொள்ளும் அரிய உண்மை மிகவும் பிரசித்தி பெற்றுவிடும். அப்படிப்பட்ட அதியற்புத நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 'ஈழநாடு' பேப்பருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த உரையை இத்துடன் நிறைவுபடுத்திக்கொள்கிறேன்.

[இதில் ஒரு வார்த்தையும் கூட்டியோ குறைக்கவோ கூடாதென்று கட்டளை பிறந்ததால் இதை அப்படியே இங்கு பிரசுரித்திருக்கிறோம்]

திருச்சிற்றம்பலம்-

## விநோதப் பழக்கம்

இயற்கையின் பிரிவுக்கேற்ப உலக மாந்தரின் பழக்கங்களும் மாறியிருப்பது கண்கூடு. ஒவ்வொரு நாடும் இனத்தால், மொழியால் மாறுபட்டிருப்பதைப் போல பழக்கங்களும் மாறியுள்ளன.


அந்தந்த நாட்டில் பெயரிடும் வழக்கம் சாதாரணமானதுதான் எனினும் அவ்வழக்கத்திலும் சில வியப்புத்தரும் பழக்கங்கள் உள்ளன.

மலேஷியாவிலும், ஆபிரிக்காவிலும் குழந்தை பிறந்தவுடன் அங்குள்ள மக்கள் அதன்முன் பல பெயர்களைக் கொண்ட நீண்ட பட்டியலைப் படிப்பார்கள். ஏதாவது ஒரு பெயரைக் கேட்டவுடன் அக்குழந்தை கத்தினாலோ அல்லது சிரித்தாலோ அப்பெயரே அதற்குச் சூட்டப்படுமாம்.


மலேயாவில் இன்னொரு பழக்கமும் உண்டு. அங்குள்ள சில பூர்வீகக் குடிகள் பல பெயர்களைச் சிறுசிறு மரத்துண்டுகளில் எழுதி குழந்தையின் முன் நீட்டியவுடன், அது எதைத் தொடுகிறதோ, அதுவே குழந்தையின் பெயர்.

இதைவிட விசித்திரம் செவ்விந்தியர் கையாளும்முறை. அங்கு நிலவும் பெயர்கள் மிகவிநோதமாக இருக்குமாம். [illegible] 'உட்கார்ந்திருக்கும் காளை' 'பாயும்மான்' ஆகியவை உதாரணப் பெயர்கள். இதற்குக் காரணம், குழந்தை பிறந்தவுடன் அதன் தந்தை முதலில் எந்தக் காட்சியைப் பார்க்கின்றாரோ அதுவே குழந்தையின் பெயராகிவிடும்

மற்றுமோர் விநோதம்; எஸ்கிமோக்கள் இருக்கிறார்களே, அவர்களுடைய உறவினர்களோ, அல்லது நண்பரோ கர்ப்பிணியின் வயிற்றில் கையை வைத்து தமக்குப் பிடித்தமான பெயரைக் கூறுவர். குழந்தை பிறந்தவுடன் அப்பெயரைச் சூட்டி விடுவார்கள். ஆணாயிருப்பினும் பெண்ணாயிருப்பினும் அதே பெயர் தான்.



ஐடியல் - ஐலன்ட் நிற்றிங் இன்டஸ்றீஸில் நைலோன் ஸ்கேட், நைலோன் ரீ சேட், நைலோன் சுவற்ரேஸ் தயாரிக்கும் பகுதியின் ஒரு பகுதியில் பெண்கள் ரீ சேட்ஸ் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளார்கள். செல்வி ராணி ரீ சேட்டின் தரத்தைப் பரிசோதித்துக்கொண்டிருக்கிறார்.



கால்மேஸ் உற்பத்தி நடந்துகொண்டிருக்கிறது. இடது பக்கத்தில் மேற்பார்வையாளர் செல்வி ராணியும், வலது பக்கத்தில் நிர்வாக அதிபரும் வேலையைப் பார்வையிடுகின்றனர். கால்மேஸ் உற்பத்தித்தொழிற்சாலையின் ஒரு பகுதியையே இப்படம் காட்டுகிறது.




ஐடியல்-ஐலண்ட் நிற்றிங் இன்டஸ்றிஸ் உரிமையாளர் திரு. நிக்கிலாஸ் யோசேப் தமது காரியாலயத்தில் வேலையில் ஈடுபட்டிருக்கிறார் தொழிற்சாலையைப்பற்றிய கட்டுரை 18-ம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

படப்பிடிப்பு— ஏ. வி. எம்.

### சக்கரவர்த்தியாவது மேல்

உலகமெல்லாம் கட்டியாளும்ஒரு அரசனாய்இருப்பதை காட்டிலும், ஆண் மகனாகிய நீ ஒரு பெண்ணின் மேன்மையான அன்பு நிறைந்த இதயத்தின் சக்கரவர்த்தியாக இருப்பது மேல்.

—இங்கர்சால்

### திருடர் அதிகம்!

உலகில் இன்று தலைசிறந்த நகரமாய்த் திகழ்வது நியுயோர்க், இங்கு திருடர் தொல்லையும் அதிகம். எனவே இங்குள்ள வீடுகளுக்குமின்சாரத்தினால் இயங்கும்கதவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கதவுகளை உள்ளேயிருந்துமட்டும் திறக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவர மூலப் பொருள்கள் தரும் கைத்தொழில் வாய்ப்பு

கனிப்பொருட்களைமட்டு மன்றி தாவரப் பொருட்களை மூலப் பொருள்களாகக்கொண்டு பல் வேறு கைத்தொழில்களை நிறுவலாம் தவிடு, எள்ளு, நிலக்கடலை, சோயா, அவரை, ஆமணக்கு, மென்புல், பருத்திவிதை, சிறுசணல், வாழைத் தண்டு. புகையிலைவிதை, இலுப்பை விதை, மரவள்ளிக்கிழங்கு, எலுமிச்சை, தோடை. திராட்சை, நெல்லி, புகையிலை, தென்னை, கரும்பு, பனை, கவைநார், காய்கறிவகைகள், பழங்கள், மாங்கொட்டை, வாழைக்குலைத்தண்டுமுதலியவற்றிலிருந்து புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கக் கூடிய சாத்தியக்கூறு வடகிழக்குப் பகுதிகளில் உண்டு.

**எள்ளு;** இதிலிருந்துதாவர எண்ணெய், சவர்க்காரம், வண்ணப்பொருட்கள், வாசனைத்திரவியங்கள், கால்நடையுணவு, ஆகியவற்றை உற்பத்தி செய்யலாம்.

**நிலக்கடலை:** இத்தாவரப் பொருளிலிருந்து 45 வீதம் எண்ணெய், சவர்க்காரம், வண்ணப்பொருட்கள், வாசனைத்திரவியங்கள் முதலியன உற்பத்தி செய்யலாம்.

**சோயாஅவரை:** 13 தொடக்கம் 20 வீதம் தாவர எண்ணெய், வானிஷ், பெயின்ற், அச்சுமை ஆகியவற்றின் உலர்ச்சிப் பொருளாகவும் உற்பத்தி செய்யலாம்

**ஆமணக்கு:** இதிலிருந்து எண்ணெய் தயாரிப்பதோடு மருந்து வகைக்கு உபயோகப் படுத்தவும், பூச்சுமை தயாரிப்பதற்கு உலர்பொருளாகவும், சவர்க்காரம், கால்நடைஉணவு, உரம் ஆகியன தயாரிக்கவும் பயன்படுத்தலாம்.

**மென்புல்லு:** சவர்க்காரம், வண்ணப்பொருட்கள், வாசனைத் திரவியங்கள் ஆகியன உற்பத்தி செய்வதற்கு இப் புல்லைப் பெரிதும் பயன்படுத்தலாம்.

**பருத்திவிதை:** இதிலிருந்து எண்ணெய், கால்நடை உணவு உரம் ஆகியன தயாரிக்கலாம்.

**சிறுசணல்:** இதை மூலப் பொருள்களாகக் கொண்டு எண்ணெய், பூச்சுமை, சவர்க்காரம், கால்நடையுணவு முதலியன தயாரிக்கலாம்

**தா. நடராஜா**

**புகையிலைவிதை:** சவர்க்காரம், எண்ணெய் தயாரிப்பதற்குப் பயன்படுத்தலாம்.

**இலுப்பைவிதை:** எண்ணெய், கால்நடையுணவு தயாரிக்க இது மிகச் சிறந்த மூலப்பொருளாகும்.

**மரவள்ளிக்கிழங்கு:** குளுக்கோஸ், சவ்வரிசி, பசை, கால்நடையுணவு தயாரிக்கலாம்

**எலுமிச்சை:** எலுமிச்சம் பழத்திலிருந்து சுவையான ஊறுகாய், பழரசம் தயாரித்து நன்மைபெறலாம்.

**தோடை:** இனிமையானபழரசம் தயாரிக்க இது சிறந்த தொன்றாகும்,

**திராட்சை:** விலையுயர்ந்த வைன் குடிவகை இப்பழத்திலிருந்தே மேலைநாட்டவர்கள் தயாரிக்கிறார்கள். நம் பிரதேசங்களில் கிடைக்கும் இப் பழங்களைக் கொண்டும் இப்பானம் தயாரிக்கலாம்.

**நெல்லி;** சத்துமிக்கபழரசம் தயாரிக்க உதவும்.

**புகையிலை:** சுருட்டு, பீடி, சிகரெட், ஆகியவற்றை இதைக்கொண்டு தயாரிக்கலாம்.

**தென்னை:** கள்ளுச்சாராயம், தும்பு, கயிறு போன்ற பலவகைத் தயாரிப்புகளுக்கு இது உகந்ததொன்றாகும்.

**கரும்பு:** சீனி, மதுபானம் ஆகியன தயாரிக்கலாம்.

**பனை:** பனங்கள்ளில் இருந்து சாராயம், கருப்பட்டி ஆகியனவும், பனம் தும்பிலிருந்து பிரஷ் முதலியனவும், மட்டையிலிருந்து கடதாசியும், பனங்கழியிலிருந்து ஜாம் சாக்கிலேட், விட்டமின வில்லைகள் ஆகியனவும் தயாரிக்கலாம்

**சணல்நார்:** இது சாக்குகள் தயாரிக்கமிகச் சிறந்ததொரு மூலப்பொருளாகும்.

**பழங்கள்-காய்கறிகள்:** இவற்றைப் பதனிட்டு தகரங்களில் அடைக்கலாம்.

**மாங்கொட்டை:** இதிலிருந்து மண்ணெண்ணெய் தயாரிக்கலாம்.

**வாழைக்குலைத்தண்டு:** கயிறு, பை, துணி ஆகியவற்றிற்கு இம்மூலப்பொருள் பயன்படுத்தப்படலாம்.

மேலே குறிப்பிட்ட தாவரப்பொருட்களிற்பல இன்று கழிவுபொருட்களாக வீசப் படுவது யாவரும் அறிந்ததே. இவைகளைப் பயன் படுத்தி மேலே குறிப்பிட்ட உற்பத்திப்பொருள்களை உற்பத்தியைதாங்கழிவுப் பொருள்களான மூலப் பொருளில் விலைமதிப்பற பயனையடையலாம்.

## இடதுகை

நார்வே நாட்டைச் சேர்ந்தவர்கள் பிரான்சிசூலி ஜூலியா தம்பதிகள். இவர்கள் இரண்டுபேருக்கும் இடதுகை கிடையாது இவர்களுக்கு மொத்தம் எட்டு குழந்தைகள். இந்த எட்டு குழந்தைகளுக்கும் இடதுகைகளே இல்லையாம்.

## வடபகுதி எண்ணெய்ஊற்றுக்கள்

சமீபத்தில் இலங்கைக்கு விஜயஞ்செய்திருந்த பிரெஞ் ஆராய்ச்சியாளர்கள் நாட்டின் வடபகுதியில் எண்ணெய் ஊற்றுக்கள் இருப்பதாகக் கண்டு பிடித்துள்ளனர். வடமாகாணத்தில் தாழையடியிலிருந்து செம்பியன்பற்று வரையும் உள்ள பிரதேசங்களில் நிலத்தினடியில் 12,000 அடியின்கீழ் எண்ணெய் ஊற்றுக்கள் இருப்பதாக பிரெஞ்சு ஆராய்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்த ஊற்றுக்கள் தென்னிந்தியக்கரையில் இருக்கும் எண்ணெய் ஊற்றுக்களுடன் தொடர்புகொண்டதாயிருக்குமென மேலும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இவர்களின் ஆராய்ச்சி பூரண வெற்றியடைந்தால், இக்கிணறுகளிலிருந்து கிடைக்கும் எண்ணெய்மூலம் வருடாவருடம் இரண்டரைக் கோடி ரூபய் இலாபம் கிடைக்குமென்றும், 1கோடி 20லட்சம் ரூபாய் வெளிநாட்டுச் செலாவணியை மீதப்படுத்தலாமென்றும் எதிர்பார்க்கப் படுகிறது. ஆரம்பத்தில் ஆறுகிணறுகள் தோண்டப்படுமென அறியப்படுகிறது. பெற்றோலியம் கூட்டுத் ஸ்தாபனத்திற்கு, இத்திட்டம் சம்பந்தமான வேலைகளுக்கு 35 லட்சம் ரூபாய் ஆசிய அபிவிருத்தி வங்கி கொடுக்க முன்வந்துள்ளது. கைத்தொழில் வளர்ச்சிக்குத் தேவைப் படும் பெருந்தொகை பெட்ரோலியக் கனிப் பொருட்கள் வடபகுதியின் பூமிக்கடியில் இருக்கின்றன.

## கனகலிங்கம் சுருட்டுத்தொழிற்சாலை

கனகலிங்கம் சுருட்டுகளுக்கு, புகை பிடிப்பவர்கள் மத்தியில் ஒரு தனி மதிப்புண்டு 1901-ம் ஆண்டு திரு. வே. கனகலிங்கம்பிள்ளையால் தொடக்கப் பெற்ற இச்சுருட்டுத் தயாரிக்கும் தொழிற்சாலை அவரின் மறைவுக்குப்பின் அவரது மகன் திரு. வே. க. இராசலிங்கத்தால் இப்பொழுது நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் திரு. கனகலிங்கம்பிள்ளை காலத்திலும் சரி, திரு. இராசலிங்கம் காலத்திலும் சரி என்றுமே கனகலிங்கம் சுருட்டுகள் தம் காரம், மணம், குணம் ஆகிய தன்மைகளை இழந்துவிடாது தன்னிகரற்றே விளங்கிவருகிறது.

அதற்கான சில காரணம் இதோ:-

இவர்கள் யாழ்ப்பாணம், கண்டி, தம்பன்கடவை, பச்சிலைப்பள்ளி ஆகிய எந்த இனப் புகையிலையானாலும், அவற்றில் நல்ல முறையில் செய்கை பண்ணப்பட்டுப் பதப்படுத்திய சிறந்த புகையிலையையே சுருட்டுக்கென கொள்முதல் செய்கிறார்கள். சுருட்டுச் சுற்றுதல், சுருட்டு வெட்டுதல், சுருட்டு அடுக்குதல் ஆகியவைகளெல்லாம் அநேகமாக முதலாளியின்

[19ம் பக்கம் பார்க்க]



கையில் எடுத்துச் செல்லக்கூடிய புதிய தெளிப்புக்கருவியொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பட்டரியினால் இயங்கும் இக்கருவியை எளிதாக இயக்கலாம் இதன் விலை ஐந்து பவுண்களாகும் பயிர் பாதுகாப்புத் திட்டத்தில் பயிர்கொல்லி கிருகளிலிருந்து பயிர்வகைகளைப் பாதுகாக்கும் கிநாசினி மருந்துகளைத் தெளிப்பதற்கு அரிய சா மாக இது கருதப்படுகிறது.

இக்கருவிக்கு அபிவிருத்தியடைந்துவரும் ந இருக்கும் கிராக்கியை முதலில் அறிந்தே யாக்கப்படுகிறது. புதிதாகக் கண்டுபிட பட்டரியினால் இயங்கும் தெளிப்புக் கரு எளிதாகக் கையிலேந்தி, பயிர்நிலத்தி நாசினி தெளிக்கிறார் ஒரு பெண்மன

## நாவலர் அம்மானை

அருள் உருளும் நல்லைநகர் அயில்வேற் பெருமானர்
திருவொழுகும் காட்சியொளிர் நாவலன்காண் அம்மானை
திருவொழுகும் காட்சியொளிர் நாவலரே யாமாயின்
அருமைமிகு வானவரும் அண்மினரோ அம்மானை
அருமைமிகு வானவரும் அண்மினரே யாமாயின்
இருமைமிகு சைவவெள்ளம் வீங்கியதே அம்மானை.

பாவலரும் நாவலரும் பாடிவந்த செந்தமிழை
ஓவாதினி துணர்ந்த உத்தமன்காண் அம்மானை
ஓவாதினி துணர்ந்த உத்தமனே யாமாயின்
வேவாத் தமிழ் பயந்த நாவலன்காண் அம்மானை
வேவாத் தமிழ்பயந்த நாவலனே யாமாயின்
மூவாத்தமிழ் உலகின் நாவலன்காண் அம்மானை.

தூயவெண் ணீறும் துதைந்தநின் கண்டிகையும்
மாய இருள் நீவித்தம் மாட்சிசேர் அம்மானை
மாயஇருள் நீவித்தம் மாட்சிசேர் ஆமாயின்
காயந்தனை எடுத்த காட்சியர்தாம் அம்மானை
காயந்தனை எடுத்த காட்சியரே யாமாயின்
தாயன்புடை யான்காண் நாவலன்காண் அம்மானை.

அஞ்சாத நெஞ்சும் அருள்சேர்நின் கண்ணொளியும்
எஞ்சாத செஞ்சொல் எழில்உடையான் அம்மானை
எஞ்சாத செஞ்சொல் எழின்உடையான் ஆமாயின்
விஞ்சாத நாற்பொருளும் வித்தகன்காண் அம்மானை
விஞ்சாத நாற்பொருளும் வித்தகனே யாமாயின்
துஞ்சாத பாதமதே நாவலன்காண் அம்மானை.

சீராரும் சம்பந்தன் தன்னருளே என்றுமிகப்
பேராரும் நல்லைநகர்ப் பெருக்குடையான் அம்மானை
பேராரும் நல்லைநகர்ப் பெருக்குடையான் ஆமாயின்
பாராரும் பண்புகள்சேர் நாவலன்காண் அம்மானை
பாராரும் பண்புகள்சேர் நாவலன் காணுமாயின்
நாராரும் நற்பணிகள் நாவலன்காண் அம்மானை.

மறைச்சிலம் படியார்கள் மாண்புறவே மாட்சிமைகள்
மறைச்சிலம் பொலிகள் எல்லாம் மங்குல்மிசை அம்மானை
மறைச்சிலம் பொலிகள் எல்லாம் மங்குல்மிசை யாமாயின்
இறைச்சிலம் பொலிகள் எல்லாம் நாவலன்காண் அம்மானை
இறைச்சிலம் பொலிகள் எல்லாம் நாவலன்காணுமாயின்
இறையடியே எந்நாளும் நாவலன்காண் அம்மானை.

— வி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணக் குடாநாட்டின்

# தொழில் வளர்ச்சியின்மைக்கு மக்கள் மனப்பான்மையே காரணம்

கைத்தொழிலில் முன்னேற்றமடைந்த உலகநாடுகளோடு ஒப்பிடும்போது இலங்கையின் மூலப்பொருள் வளம் மிகக் குறைவானதாகவே காணப்படுகிறது. குறிப்பாக யாழ் குடாவில் கைத்தொழில் அபிவிருத்திக்கு ஏற்ற மூலப் பொருள்கள் குறைவாகவே காணப்படுகின்றன. யாழ்குடாநாட்டில் சுண்ணக்கல், உப்பு ஆகிய இரு கனிப்பொருள்களுமே கைத்தொழிலுக்குப் பயன்படுத்தத்தக்க அளவில் உள்ளன.

### உப்பும் சீமெந்தும்

மேற்கூறிய இரு மூலப் பொருள்களையும் பயன்படுத்தி உப்பு உற்பத்தி, சீமெந்து உற்பத்தி ஆகிய இரு தொழில்களும் யாழ்குடாநாட்டில் பிரதான தொழில்களாக நடைபெறுகின்றன. சீமெந்து, உப்பு ஆகிய இரண்டையும் பெருமளவில் உற்பத்தி செய்வதற்கேற்ற சுண்ணக்கல், கடல்நீர் ஆகியன இங்கு காணப்பட்ட பொழுதும் உற்பத்தி குறைவாகவே காணப்படுகிறது எனவே இத்தொழில்களை விஸ்தரித்து மேலும் விருத்தி செய்தல் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவுவதாகும்.

காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலையில் இன்று அரசாங்கம் அக்கறைகாட்டி அது விஸ்தரிக்கப்பட்டுவருதல் குறிப்பிடத்தக்கதொன்றாகும். உப்பு சீமெந்து தொழில்களோடு மட்டும் நின்றுவிடாது இப்பிரதான தொழில்களை அடிப்படையாகக்கொண்ட சில இணைத் தொழில்களையும் விருத்தி செய்யலாம். உதாரணமாகப் பரந்தனில் நிறுவப்பட்டுள்ள இரசாயனத்தொழிற்சாலை ஆனையிறவு உப்பு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இவ்விரசாயனத் தொழிற்சாலையில் இன்று ...ளோபின், கோஸ்டிக்சோடா ஆகியனவே உற்பத்தி செய்யப்படுகின்றன,

### இரசாயனத்தொழிற்சாலை நிறுவப்பட்டதன் நோக்கம்

இரசாயனத்தொழிற்சாலை நிறுவப்பட்டதன் முககிய நோக்கம் செயற்கைஉரம், டி. டி. ரி. முதலிய பொருள்களையும் உற்பத்திசெய்வதேயாகும். அடிக்கடி மலேரியாவால் பாதிக்கப்படுவதும், விவசாயத்தை முக்கியமாகக் கொண்டதுமான நம்நாட்டைப் பொறுத்தவரையில் இப்பொருள்கள் அத்தியாவசியமானவை. இத்தொழிற்சாலையை அரசாங்கம் மேலும் விஸ்தரித்தால் மருந்து வகைகள், பற்பசை போன்ற பல பொருட்களையும் உற்பத்திசெய்து அன்னிய செலாவணியை மீதப்படுத்தலாம். எனவே வட பகுதியில் உள்ள சீமெந்துத் தொழில், உப்புத் தொழில், இரசாயனத்தொழில் ஆகியவற்றை மேலும் விருத்தி செய்ய அதனோடு தொடர்புடைய பல இணைத்தொழில்களை நிறுவவேண்டும். இவ்விணைத்தொழில்களை நிறுவுவதன்மூலம் எமக்குத்தேவையான பல பொருள்களை உற்பத்தி செய்வது மட்டுமன்றி நாட்டின் தீர்வுகாணவியலாத பெரும் பிரச்னையாகிய வேலையில்லாப் பிரச்னைக்கும் ஓரளவு தீர்வுகாணலாம்.

### மீன்பிடித் தொழிலும் அதன் வளர்ச்சியும்

மேற்கூறிய கைத்தொழில்களைவிட யாழ்ப்பாணப் பகுதியில் விருத்தியடைந்துவரும் தொழில்களுள் மீன்பிடித் தொழிலும் ஒன்று. இத்தொழில் இதுகாலவரை வளர்ச்சியடையாமைக்குக் காரணம் இப்பகுதியில் சமூகக்கட்டுப்பாடு அதிகமாக இருந்ததேயாகும். குறிப்பிட்ட ஒரு பகுதியினரே இத்தொழிலில் ஈடுபட்டுள்ளதோடு அவர்கள் வறியவர்களாகவும் உள்ளதால் மீன் பிடிப்பதற்குக் கையாளும் முறைகளும் பிற்போக்கானவைகளாக உள்ளன. சமீபகாலத்தில் அரசாங்க கடற்றொழில் பகுதியினர் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு அவர்கள் தொழில் முன்னேற்றத்திற்கான சில வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். யந்திரப்படகுகள்,

**கே. ஜி.**

நைலோன் மீன்பிடி வலைகள் போன்றவற்றைப் பெறுவதற்கு அரசு ஓரளவு பண வசதி செய்து வருகிறது. இக் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அத்தொழிலில் பயிற்சியளிக்க பயிற்சிக் கல்லூரிகள் நிறுவியுள்ளதோடு அரசாங்கம் பயிற்சி உத்தியோகத்தர்களையும் நியமித்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் மீன் முதலியவற்றை விற்கவும் வசதி செய்து கொடுக்கப் பட்டுள்ளது. அரசு மேற்கொண்டுள்ள மேற்படி முயற்சியால் இன்று இத் தொழிலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகிறது. முன்னேற்றம் எவ்வாறிருப்பினும் தொன்று தொட்டு இருந்து வந்த சமூகக் கட்டுப்பாட்டில் பெரும் மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. குறித்த ஒருவகுப்பினருக்கே இத் தொழில் என்ற எண்ணம் நீங்கி யப்பான் முதலிய நாடுகள் போன்று மீன் பிடித் தொழிலில் விருத்தியேற்பட மற்ற வர்க்கத்தினரும் ஈடுபட வேண்டும்.

யாழ்ப்பாணப் பகுதியைச் சூழவுள்ள கண்டமேடை மிக விஸ்தீரணமானது. ஏறக்குறைய 1000 சதுரமைல் விஸ்தீரணமான இப்பகுதியில் பெரிய யந்திரப் படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடித்தொழிலை அபிவிருத்தி செய்யலாம். நாட்டின் மீன் பிடித் தொழிலுக்கு கந்த பகுதிகளில் ஒன்றுன பேதுறு மேடை யாழ்ப்பாணத்திலேயே உள்ளது. படகுகள் அளிப்பது மட்டுமன்றி ஊர் காவற்றுறை, பருத்தித் துறை, காங்கேசன் துறை போன்ற துறைமுகங்களையும் புனர்விருத்தி செய்தல், தகரங்களில் மீன்களை அடைக்க தொழிற்சாலையை வட பகுதியில் நிறுவுதல், கருவாடு செய்வதற்குத் தகுந்த முறைகளைப் பயிற்றுவித்தல், இவற்றுக்கான பண வசதிகளைச் செய்தல் போன்றவை இத் தொழில் வளர்ச்சிக்கு அரசு மேற்கொள்ள வேண்டியவையாகும்.

### சிறு தொழில்கள்

மேலே குறிப்பிட்ட பிரதான தொழில்களை விருத்தி செய்வதோடு சிறிய அளவில் மற்றும் சில தொழில்களையும் உருவாக்கினுல் அரசு பொருளாதார-சமூகப் பிரச்னைகள் பலவற்றிற்குத் தீர்வு காணலாம். கிராமக் கைத்தொழில் இங்கு வெகு குறைவு. சுருட்டுத் தொழில் ஒன்றே பிரதான கிராமத் தொழிலாக இன்று உள்ளது. நெசவுத் தொழில், கயிற்றுத்தொழில், வெங்காயக்கூடு பின்னல் ஆகிய தொழில்களும் சமீபகாலத்தில் ஓரளவு உருவாகி வளர்ச்சியடைந்துள்ளன. சென்ற சில வருடங்களில் அரசாங்கம் இறக்குமதிக் கட்டுப்பாடு விதித்ததினுல் விளையாட்டுப்பொருட்கள், அலுமினியப் பாத்திரங்கள், சவர்க்காரம், இனிப்புப் பண்டங்கள், விசுக்கோத்து ஆகியன உற்பத்தி செய்யும் தொழில்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்தகைய தொழில்களுக்கான மூலப்பொருட்கள் இங்கு குறைவு. எனினும் ஆரம்பிக்கப்பட்ட இத் தொழிலுக்கு அரசாங்கம் உதவி செய்து மேலும் விரு

(14-ம் பக்கம் பார்க்க)


## பத்தாண்டு சேவை புரிந்த பைனல் 'ரேணிங் வேக்ஸ்'

யாழ் நகரில் 1958-ம் ஆண்டு முதன் முதலாகத் தொடங்கிய முதலாவது 'ரேணிங்' சென்டர் தங்களுடையதுதான் என்று மகிழ்ச்சியுடன் கூறிய அதன் அதிபர் திரு. எம். எஸ். மூர்த்தி தமது அனுபவங்களைக் கூறியபொழுது எத்தனையோ இடையூறுகளுக்கிடையில் எதிர் நீச்சல் போட்டு இயங்கிவரும் எமது ஸ்தாபனத்தில் சகலவிதமான கடைச்சல் வேலைகளும், வெல்டிங் வேலைகளும், வார்ப்பு வேலைகளும் தம்மிடமுள்ள நிபுணத்துவம் வாய்ந்த தொழிலாளர்களால் சிறந்த முறையில் செய்துகொடுக்கப்படுகிறது.

எம்மிடம்தற்போதுமூன்று வெல்டிங் மெஷினும், ஒரு எலெக்ரிக் வெல்டிங் மெஷினும், ஒரு கேஸ் வெல்டிங் மெஷினும், பல துணை மெஷின்களும் கொண்ட எமது ஸ்தாபனத்தில் பல தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். 1970-ம் ஆண்டு பல மெஷின்கள் தருவிக்கவிருக்கிறேம். அவைகள் வந்த பின்னர் இன்னும் பல தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதுடன், பொதுமக்களின் தேவைகளைக் குறைந்த செலவில், குறைந்த நேரத்தில், சிறந்த முறையில் செய்து கொடுப்போமெனவும் உறுதி கூறுகிறேம்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் பல உதிரிப் பாகங்களை நாங்களே தயாரித்து பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், வெளிநாட்டுச் செலாவணியையும் மிச்சப் படுத்துகிறேம் என்ருர். கார்களுக்குத் தேவையான டிக்கி பிணைச்சல் கப் ஆணி, பெண்ட், லொறிகளுக்குத் தேவையான கவுஸிங் செயின்ட், கப் ஆணி; டிராக்டர்களுக்குத் தேவையான கின்பின், புஷ்கள், ஓயில் கப்ளிங்; கிச், நிலம் உழும் தொழு. மில்களுக்குத் தேவையான பெயரிங், மோட்டர் புள்ளிகள் செய்தல். இயந்திரப் படகுகளுக்குத் தேவையான புரபிளர், லான்ட் ஆணி. சாப்ட், புஷ். வாட்டர் பம்புகளுக்குத் தேவையான புட்வேல்வ், கப்ளின், நிப்பிள், பம்கேஸ், பேன் என்பவற்றையும் நாம் உற்பத்தி செய்கிறேமென்றும் அவர் கூறினர்.


## எமது சொந்த தயாரிப்புகள்!




1. ரக்டர் ஆமச்சர் கேஸ்
2. ஹோஸ் பைப் பென்ட்
3. டிக்கி பிணைச்சல்
4. புட்வேல்ஸ்
5. அவுட் மோட்டர் பிரப்பிளர்
6. றைஸ் மில் பெயரிங்
7. ரக்டர் ஹைட்ரோலிக் கப்ளின்

இவை அனைத்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும்


சகலவிதமான கடைச்சல்—வெல்டிங் வேலைகளும் செய்துகொடுக்கப்படும்.

**பைனல் ரேணிங் வேக்ஸ்**

103, கஸ்தூரியார் வீதி, போன்: 7140 யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா எப்போ வருவாள்?



அம்மாவைக் காணேமே அம்மா எப்போ வருவாள்? இருட்டிக் கொண்டு வருகிறது. ஆறு மணியாகப்போகிறதே. அம்மா படுமோசம். நேரகாலத்துக்குவந்துசேரத் தெரியாதா என்ன? நான் அவவுக்காகக காத்துக் கொண்டிருப்பது அப்படியா மறந்துவிடும்?

இதோ மழைவேறுகொட்டத் தொடங்கிவிட்டது. கொட்டட்டும், கொட்டட்டும். வெள்ளம்வரவேண்டும் என்றுதான் எனக்கும்ஆசை. கட்டாயம் வெள்ளம்வர வேண்டும் ஏன் தெரியுமா?- இருங்கள் அக்கா என்ன செய்கிறள் என்று பார்த்து விட்டுச்சொல்லிவிடுகிறேன். அக்கா காதில் விழுந்தால் ஏசுவா.

அக்கா ஜன்னலோரத்தில் ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு கவலையேஇல்லாதவளைப்போல உட்கார்ந்திருக்கிறளே. அக்கா புத்தகத்தைப் படிக்கவில்லை அம்மாவைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறள் என்பது எனக்கா தெரியாது? ஏதோ தான் தைரியமாக இருப்பதாகப் பாவனை பண்ணுகிறள். நான் சின்னவனும். எனக்காக அக்கா பெரிய தைரியசாலியாக இருக்கப் போகிறளா? அம்மாவுக்கு நாங்களிருவருமே சின்னவர்கள்தானே?

அம்மாவை நினைத்தாலே எனக்குக்கோபம், கோபமாக வருகிறது. எங்களுக்காகத் துன்பப்படத் தொடங்கினதால்தானே இந்த நிலைமை.

0 0 0

எங்கள் பசியைப் போக்குவதற்காக எங்கெங்கோ வேலைக்குப் போகத்தொடங்கினள். நாங்கள் சொல்லிப் பார்த்தோம். 'இப்படிப் போக வேண்டாம்' என்று. பொழுதுபட்டபின்னராவது வீட்டிலிருக்கும்படி அழாக் குறையாகக் கேட்டேன். எது சொன்னலும் 'எல்லாம் உங்களுக்காகத்தானே ராஜா' என்று சிரித்துக் கொண்டே சொல்லிவிடுவாள். அந்தச் சிரிப்புக்கு மட்டும் குறைவில்லை.

அப்பா இருந்திருந்தாலாவது...ம்! அவர்தான் எங்களுக்காக உலகத்திலுள்ள எல்லாத்துன்பங்களையும் அனுபவித்தாரே. இன்னமும் எங்களோடு இருந்திருக்கலாம் என்று நினைப்பதே பாவம்.

ஒரு சின்ன அச்சுக்கூடத்தில் அப்பா கொம்பாஷிடராக வேலைசெய்தார். சம்பளம் மாதம் அறுபதுரூபாய் மட்டும்தான்.

அப்போது பெரியக்காவும் எங்களோடேயே இருந்தா. அறுபது ரூபாயில் அம்மா, அப்பா, பெரியக்கா, சின்னக்கா, நான் ஆக ஐந்து பேர் வாழமுயற்சித்தோம். எங்களுக்காக அப்பாவும் அம்மாவும் பட்டினிகிடந்த நாட்களை நினைத்துப்பார்த்தால் நெஞ்சில்முள் செருகுவது போலிருக்கிறது.

சம்பளத்தை அப்படியே அம்மாவிடம் கொடுத்து விடுவார் அப்பா. அம்மா அதை மிகவும் அவதானத்தோடு செலவழிப்பா. எறும்பூரக் கற்குழியும் என்பார்களே அப்படித்தான். என்றாலும் அறுபதுரூபாய் தண்ணீரைப்போல எப்படிச் செலவாகிறது என்பது யாருக்கும் தெரியாது.

சிறிது காலத்தில் அப்பாவுக்கு ஒழுங்காகச் சம்பளம் கிடைப்பதில்லை. அச்சுக்கூடத்தில் வருமானம் குறைந்துவிட்டதென்று அவ்வப்போது இருபதோ, முப்பதோ தந்தார்கள். பலசரக்குக்கடனே கட்டமுடியவில்லை. இருந்தாலும் எங்களைப் பள்ளியிலிருந்துவிலக்கவும் விரும்பவில்லை. பள்ளிச் செலவும் ஒரு பக்கம் நெருக்கியதால் எங்கள் நிலையைஅளவிட்டுச்சொல்ல முடியாது. எத்தனையோ நாட்கள் சம்பல்கூட இல்லாமல் வெறும்பாண் மட்டும் சாப்பிட்டிருக்கிறேம். பல இரவுகள் அம்மா, அக்கா எல்லாரும் வயிற்றில் ஈரத்துணியைச் சுற்றிக்கொண்டு படுத்துவிடுவார்கள்.

படுக்கையில் அம்மா கண்ணீர் விட்டபடியே இருப்பா. எப்போதும் நான் அம்மாவுடன்தான் படுப்பேன். அப்போதெல்லாம் எண்ணெய்ப்பசையேறிய அம்மாவின் தலையணை கண்ணீரால் நனைந்து போயிருப்பதைப் பார்க்கும்போது, அந்தத் தலையணையை மறுபக்கம் புரட்டிப் போடவேண்டும்; அம்மாவின் கண்ணீரைத் துடைக்க வேண்டும் எனத் தோன்றும். ஆனால் நினைப்பதைப்போல என்னல் செய்ய முடிவதில்லை. அப்பாவின் துன்பங்களையும். எங்கள் குடும்பத்தின் நிலையையும் நினைத்துக் கொண்டேயிருப்பேன். தன்மனத்தாங்கலில் அம்மா தனக்குள் என்னென்னவோ பிதற்றுவா. அம்மாவின் அந்தச் சுமையை என்னல் தாங்க மாட்டாமல், அவவைக்கட்டிக்கொண்டு தேம்பி அழுதுவிடுவேன். அம்மா துடித்துப் பதறி 'என்னடா கண்ணு கனவு கண்டாயா?' என்று அணைத்துக்கொள்வா.

ஒவ்வொரு நாளும் பிரச்னைகள் கூடிக் கொண்டே போனதால் அப்பா பல வேலைகளையும் செய்யத் தொடங்கினர். அச்சுக்கூடத்துக்குப் போவார், யாருக்காவது வயலில் தண்ணீர் இறைக்கப்போவார். சூடடிக்கப் போவார். தேங்காய் வண்டிக்காரனேடு சந்தைக்குப் போவார். இப்படி எத்தனையோ. என்ன தான் செய்தாலும் பணத்தைக் காண்பதென்றல் பன்றி பிறை பார்த்ததைப் போலத்தான்.

அன்றிரவு அப்பா மகிழ்ச்சியோடு வந்தார். ஒரு சினிமாத் தியேட்டரிலும் வேலை கிடைத்திருப்பதாகச் சொன்னர். நான் பூரிப்போடு 'அப்பா என்னைப் படத்திற்குக் கூட்டிப்போகிறீர்களா?' எனக் கேட்டேன். அவர் தலையை மட்டும் பெரிதாக ஆட்டினர்.

அப்பாவுக்குத் தியேட்டரில் கிடைத்தது விளம்பரம் ஒட்டும் வேலைதான். புதுப்படங்கள் வந்தால் போஸ்டர்களைச் சுருட்டி எடுத்துக்கொண்டு ஒரு பழைய சைக்கிளில் பசைவாளியையும் கொழுவியபடி இரவோடிரவாகப் போய் ஒட்டிவிட்டு வருவார். அந்த விளம்பரங்களை ஒட்டாவிட்டால் என்ன படம் ஓடுகிறதெனத் தெரியாது. அந்த விளம்பரங்களைப் பார்த்துவிட்டுத்தான் தியேட்டர் நிறையச் சனம் கூடுகிறது. ஆனல் அந்த வேலையை நள்ளிரவிலும் போய்ச்செய்யும் அப்பாவிற்குக் கிடைத்ததோ ரூபா ஒன்று அல்லது ஒன்றரை தான். 'இந்த ஒரு ரூபாய்க்காகச் சாமம் சாமமாகத் திரியவேண்டுமா அப்பா?' என்று அக்கா கேட்டால் வீட்டில் சும்மாதானேம்மா இருக்கிறேன்... அந்த நேரத்தில போய்வருவதில் என்ன கஷ்டமிருக்கு?' என்பார். 'சும்மா இருப்பதால்தான் போகிறீர்களா?' என்று கேட்க யாருக்கும் வாய் வராது.

அப்பாதியேட்டரில் வேலைக்குப் போனதும் நல்லது தான். அதனல் எங்கள் குடிசையின் சுவர்களில் சினிமாப்படங்களை ஒட்டி வைத்திருக்கின்றேம். இந்தப்படங்களிலுள்ள பெரிய பங்களா, அரண்மனை, மாளிகை ஏல்லாம் எனக்கு மிகவும் பிடிக்கும். அவற்றையே பார்த்துக்கொண்டிருப்பேன். வகுப்பில் பாஸ்கரன் ஒருநாள் தான் படம் பார்த்ததாகச் சொன்னன். நான் நண்பர்களிடம் 'குடிசைக்குள்ளே மாளிகை இருக்கும் பார்த்ததுண்டா?' எனக் கேட்டேன். அவர்கள் அது எப்படி முடியும் என ஆச்சரியப்பட்டார்கள். அவர்களை அழைத்து வந்து எங்களின் குடிசையையும் உள்ளே ஒட்டியிருந்த படங்களையும் காட்டினேன். எல்லோரும் ஓஹோ எனச் சிரித்தோம். சுந்தரம், 'இந்த மாளிகையில் யாரிருக்கிறர்கள் பார்ப்போம்' என்றவாறு ஒரு போஸ்டரைத் தூக்கிப் பார்த்தான். அங்கே அந்தப் போஸ்டர் மறைத்துக் கொண்டிருந்த பெரிய பொத்தல் 'ஓ' என்று கொண்டிருந்தது. அதைக்கண்டு அவன் 'இங்கே பார்த்தீர்களா, மாளிகைக்குள்ளே ஒரு சுரங்கமிருக்குது' என்றன். மீண்டும் எல்லோரும் சிரித்தோம். அதற்குள்ளே அக்கா வந்து விட்டாள்.

என்ன நடந்தாலும் எங்கள் மூவரையும் படிக்க வைக்கவேண்டுமென்ற இலட்சியத்தோடு அம்மாவும் அப்பாவும் இருந்தார்கள். அதனல் நாங்களும் தினமும் பள்ளிக்குப்போய் மிகவும் கெட்டித்தனமாகப் படித்தோம்.

எங்களின் ஆடைகள் கல்லிலே அடித்து அடித்துத் தோய்த்ததால் நைந்து போகத் தொடங்கின. அந்த ஆடைகளுக்கு மட்டும் வாயிருந்தால், பாவம் ஒவ்வொருநாளும் ஒரு நாரைவிடுதூது பாடியிருக்கும். உடைகள் பீத்தலானபோது புதுப் பிரச்னைகள் தலையெடுத்தன. அக்காமாரும் சமாளித்துக் கொண்டு அந்தக் கவுன்களோடு பள்ளிக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். அவற்றுக்கும் இனி முடியாது என்ற அந்திமக்காலம் வந்துவிட்டது. கீழே பென்சில் விழுந்தால்கூட இருவரும் குனிந்து எடுப்பதில்லையாம். குனிந்தால் கவுன் பட்டென்று நாராய்ப் பிளந்துவிடும் என்ற பயம்தான். அம்மா தன் பாவாடையை வெட்டி ஒரு கவுன் தைத்துக் கொடுத்தா. அந்த ஒரே சட்டையை அக்காமார் இருவரும் மாறிமாறி அணிந்துகொண்டு பள்ளிக்குப் போனர்கள். பெரியக்கா போனல் சின்னக்கா வீட்டிலிருப்பா சின்னக்கா போனல் பெரியக்கா போக மாட்டா. அந்த ஒரு சட்டையும்கூட அவர்களின் நிலைகண்டு வாய்பிளந்து சிரிக்கத் தொடங்கிற்று. கல்வி குறைந்தாலும் ஆடை குறைந்தாலும் ஒன்றுதானும்; அரை மனிதன் தானே. இந்த வாசலிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தாலும் எத்தனையோ பேர் நாகரிகமாக அரைகுறை ஆடைகளோடு போவது தெரியும். இரண்டு அக்காக்களும் ஒருவிதத்திலாவது அரைமனிதர்களுக்கும் மேலாக இருக்க விரும்பினர்கள். எங்களுக்கெல்லாம் கல்வியை விட ஆடைதானே அத்தியாவசியமானது. அக்காமாரிருவரையும் பள்ளியிலிருந்து நிறுத்தி விட்டார்கள். என்னை மாத்திரம் நிறுத்தவில்லை. பீத்தல்தான் என்றாலும் எனது முரட்டுக் கால்சட்டைத் துணிகள் என்னேடு இழுபறிப்பட்டு ஈடு கொடுத்தன. சேர்ட்டுக்கள் தான் 'விட்டேனு பார்' என்று மல்லுக்கு நின்றன.

அப்பா இரவுபகலாகஓடித் திரிந்தார். அவரின் தாரகமந்திரம் வேலை - வேலை — வேலை என்பதுதான். மழை, வெயில் எதுவும் அவரை என்னவும் செய்யவில்லை. எங்களையும்தான். குடிசைக்குள் வெயில்வரும் அதே போல மழையும் கூடவரும். எங்களின் குடிசையைச்சுற்றி நிற்கும் ஆடு, மாடுகளுக்கு காய்ச்சல், தடிமல், இருமல் என்று வராததைப் போலவே எங்களுக்கும் வரவில்லை. அது ஓர் ஆச்சரியம் தான்.

பெரியக்காவையும் சின்னக்காவையும் பார்க்கப் பார்க்க அம்மாவுக்கும் அப்பாவுக்கும் புதிய கவலைகள் பற்றிக்கொண்டன. ஒருநாள் இரண்டுபேரும் குளிக்கப்போயிருந்தபோது அப்பாவும், அம்மாவும் பேசிக் கொண்டதிலிருந்துதான் அது எனக்குத் தெரியும். 'இதுகளிரண்டும் இப்படி வளர்ந்துவிட்டதைப் பார்த்தால் நெருப்பை வயிற்றில் கட்டிக்கொண்டிருக்க வேண்டியிருக்கே ... ... யார் கையில் பிடித்துக் கொடுப்பது?...'' என அம்மா கேட்டதற்கு அப்பா தந்த பதில் ஒரு நீண்ட பெருமூச்சுத் தான்.

அப்பாவிடம் சொல்லிக் கேட்டு தியேட்டர்முதலாளி வீட்டில் அம்மா எடுபிடி வேலைகள் செய்துவந்தா. முதல்மாதம் இருபது ரூபாய் தந்தார்கள். அதில் பத்து

(12-ம் பக்கம் பார்க்க)

— எம். கே. ராஜன் —

'ஈழநாடு' பத்தாண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட இலக்கியப்போட்டியில் பாராட்டுப் பெறும் சிறுகதைகளில் இதுவுமொன்று.


ஈழத்தின் பண்பை நாட்ட 'ஈழநாடு'
தமிழக தனத்தை ஈட்ட 'தம்பி அன் கோ'

## தம்பி அன் கோ.,

284, K. K. S. ரேட், வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம்

நிரந்தர சேமிப்புக்கு கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.


| | | |
|---|---|---|
| 1 வருடத்திற்கு | — | வருடம் 10 சத வீதம் |
| 2 வருடத்திற்கு | — | வருடம் 11 சத வீதம் |
| 3 வருடத்திற்கு | — | வருடம் 12 சத வீதம் |
| ரூ. 10,000/-க்கு மேல் | — | வருடம் 12 சத வீதம் |

மேற்குறித்த நிரந்தர சேமிப்பை எப்பொழுதும் 30 நாள் அறிவித்தலில் வருடம் 8 சத வீத வட்டியுடன் எடுக்கலாம்.

வட்டி ஒவ்வொரு வருடமும் கொடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திராகாந்திக்கு மகாத்மா ஆசி



## "ஆண்டவனைத் தொழுங்கள்; மதுவை விலக்குங்கள்"



### காந்தி நூற்றுண்டு ஜெயந்தியில் மகாத்மாவின் உரை

( நமது விண்ணுலக நிருபர் )

சென்ற 2-10-69-ல் தமது நூற்றுண்டு ஜயந்தி விழாவன்று, மகாத்மாஜி அவர்கள், மீரிகமையிலே இறந்தவர் பேசும் பலகை மூலம் உலக மக்களுக்கு அன்பருளாகி உரை விடுத்துள்ளார்.

''உங்களுக்கு நான் இன்று நேரில் சொல்லும் புத்திமதி என்னவென்ருல், மதுவிலக்கைக் கடைப்பிடியுங்கள் என்பதும் பொய்கூறக்கூடாதென்பதும், ஆண்டவனைத்தொழுங்கள் என்பதும் செயற்கைக் குடும்பக்கட்டுப்பாட்டைச் செய்யாதீர்கள் என்பதும்தான்.''

''சுதந்திரம் வாங்கிக்கொடுத்த காங்கிரஸ்கட்சியை அதோடு நிறுத்திவிட்டு, வேறொன்று ஆரம்பிக்கவேண்டுமென்று அப்போதே கூறியிருந்தேன். என் பேச்சைக் கேட்காததன் பலன் இன்று இந்தியா இருக்கும் நிலையிலே தெரிகிறது என்ருர்'' —மகாத்மாகாந்தி

விழாவுக்குத் தலைமை வகித்த அமெரிக்க ஜனதிபதி ஜோன். எப்.கென்னடி கூறியதாவது:

இப்போது பாரதத்தின் சுதந்திர புருஷர், அகிம்சா மூர்த்தி, சத்தியத்தின் நிழல், உண்மையின் மைந்தன், அன்புத் தெய்வம், ஸ்ரீலஸ்ரீ மகாத்மாஜி அவர்கள் தன் நூற்றுண்டு விழாவுக்குத் தானே, இறந்தவர்கள் பேசும் பலகை மூலமாக உலகத்துக்கு நன்மை பயக்கக் கூடிய ஒரு அதியற்புத அன்பருளாசி உரை நிகழ்த்துவார்கள்.

### மகாத்மாவின் அருளுரை

சபையோர்களே,

என் நூற்றுண்டு விழாவை உலகமெல்லாம் கொண்டாடும் இந்நேரத்தில் இறந்துபோன நானே உரை நிகழ்த்துகிறேன்!—என் நூற்றுண்டு விழாவைப் பற்றி!

உலகமெங்கும் எனக்கு நூற்றுண்டு விழாவைக் கொண்டாடினலும் நான் நேரில் விருந்து சாப்பிட்டு, பேசி, உரையும் நிகழ்த்தும் இந்த எளிமையான வீட்டில் தான் எனக்கு இருப்பதில் மிகவும் விருப்பமாக இருக்கிறது.

இந்த இறந்தவர்கள் பேசும் முறையைப்பற்றி நம் பாரத நாட்டில் ஒவ்வொரு குடிமகனும் தெரிந்து வைத்திருந்தால் என் நூற்றுண்டு விழா இன்னும் எவ்வளவு சிறப்பாக அமைந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

என் நூற்றுண்டு விழா நடக்கும் இந்நேரந்தில் மதுவிலக்கை எடுத்துவிடவேண்டுமென்று சில பேச்சுக்கள் கிளம்பியிருக்கின்றன.

எனக்கு நூற்றுண்டு விழா கொண்டாடுவதில்மட்டும் அர்த்தமில்லை நான் சொன்னவற்றையும் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும். பேருக்கு சங்கற்பம் செய்வதிலும் அர்த்தமில்லை, என் சிலைக்குப் பூச்சூட்டுவதிலும் அர்த்தமில்லை. மகாத்மாவின் மணிமொழிகள் என்று போடுவதிலும் அர்த்தமில்லை. அவைகளை அப்படியே கடைப்பிடிக்கவேண்டும். அங்குதான் விஷயமே இருக்கிறது. அதற்குத்தான் அர்த்தமுண்டு.

மதுவிலக்கை எடுப்பது அறிவீனம். பாழாய்ப்போகிற இந்த மது இன்றைய மனிதன் ஒழுக்கம் கெட்டு நடப்பதற்கு அவனை எத்தனிக்கச் செய்கிறது. அதனலும் இன்று ஜனத்தொகை நாட்டில் பாதிக்குமேல் கூடுகிறது. அது இன்றைய மனிதனைத் தீயவழிகளில் போகச்செய்கிறது. அது ஆறறிவுள்ள மனிதனை ஐந்தறிவுள்ளதாக்குகிறது. மனிதன் மதுவைக் குடித்தால் மாது தெருவில் போக முடியாது. இருதயத்தைப் பழுதடையச் செய்கிறது. அப்படிப்பட்ட மதுவை குடிக்கக்கூடாது என்று அரசாங்கம் மதுவிலக்குச் சட்டத்தை ஓரளவுக்குச் செயற்படுத்திவருகிறது.

மதுவிலக்கை ஆதரிப்பவன் நான். அப்படி இருக்கும்போது என் நூற்றுண்டு விழாவிலேயா மதுவிலக்கை எடுத்துவிட வேண்டுமென்று பேச்சுக் கிளம்பியிருக்கிறது? எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. எனக்கு நூற்றுண்டு விழா கொண்டாடும் என் நாட்டு மக்களை நான் அன்போடு கேட்டுக்கொள்வது, எனக்கு விழா கொண்டாடுவதோடுமட்டும் நிறுத்திக் கொள்ளாமல், என் சொற்களையும் கடைப்பிடித்து நல்லபாதையில் செல்ல வேண்டுமென்பதுதான். அன்று நம் நாட்டுக்குச் சுதந்திரம் எவ்வளவு தேவையாக இருந்ததோ அதைவிட இன்று நம் நாட்டிற்கு தெய்வ பக்தியும் மதுவிலக்கும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது.

என் நெருங்கிய நண்பர் ஸ்ரீ ராஜாஜி அவர்களுடைய சொல்லை ஓரளவாவது நம் பாரதம் கடைப்பிடித்தால் அது உய்யுமே. அவர்களுடைய கருத்தை வாரா வாரம் போட்டுவரும் 'கல்கி' பத்திரிகையையும் 'சுவராஜ்யா' என்ற பத்திரிகையையும் நான் ஆதரிக்கிறேன். நான் ஆதரித்து மட்டும் காணுது. இவ்வுலகமே ஆதரிக்கவேண்டிய சஞ்சிகைகள் அவை.

இன்று என் நூற்றுண்டு விழாவுக்காகச் சில மக்கள் எடுத்துக்கொண்ட சங்கற்பத்தை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தச் சங்கற்பத்தோடு உலக மக்கள் எல்லோரும் இப்படி சங்கற்பம் செய்திருந்தால் என் மனம் அளவுகடந்த மகிழ்ச்சி அடைந்திருக்கும். எப்படியென்ருல்,

''நாம் இன்றிலிருந்து செயற்கைக் குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி பேசுவதில்லை, அதைச் செய்வதுமில்லை, செய்பவர்களையும் தடுப்போம்'' என்று

### இந்திய அரசியல் நிலைமை

அதோடு இன்று இந்தியாவில் அரசியல் நிலைமைகள் ஒன்றும் சரியில்லை. நான் அங்கு இருக்கும்போது சொல்லியிருந்தேன், சுதந்திரம் வாங்கிக் கொடுத்த காங்கிரஸ்கட்சியை அதோடு நிறுத்திவிட்டு, வேறொன்று ஆரம்பிக்க வேண்டுமென்று.

என் சொல்லைக் கேட்காததன் பலன் இன்று இந்தியா இருக்கும் நிலைமையிலேயே தெரிகிறது.

இப்படிப்பட்ட இந்த இக்கட்டான நேரத்தில் செல்வி வித்தகத்தின் கட்டுரையின் மூலமாக, இந்த இறந்தவர்களுடன் பேசுவதைப்பற்றி உலகமெங்கும் சீக்கிரமாகப் பரவி விட்டால் அரசியல் தலைவர்களும் [illegible] நாங்கள் [illegible] இறந்துவிட்டாலும் இவ்வுலகிலிருந்து எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிருேம் என்ற உண்மை தெரிந்தால் அரசியல் தலைவர்களும் எங்களுடன் பேசி நாட்டைச் செழிக்கச் செய்யலாம் அல்லவா? அவ்வுலகில் நாங்கள் இறந்தவுடனேயே நாம் அங்கு வைத்திருக்கும் முக்கியமான சட்டங்களை உடனேயே எடுத்து விடுவதை இது ஓரளவாவது குறைக்கும் அல்லவா?

இன்று உலகமெங்கும் நடத்தப்படும் என் நூற்றுண்டு விழாவில் கலந்து கொண்ட அநேகம் பேர் பெயருக்கு நான் சொன்னவைகளில் இரண்டு மூன்றை மட்டும் ஞாபகப்படுத்திக் கொண்டு அதோடு எல்லாமே முடிந்துவிட்டதென்று நினைத்துச் சும்மா இருந்துவிடுகிருர்கள்.

இன்று இவ்வுலகத்தில் எங்கும் நடந்திராத, நினைக்க முடியாத, ஆச்சரியம்தரக் கூடியதாக, அதியற்புதமான ஒரு நிகழ்ச்சி இவ்வுலகத்தின் ஒருபகுதியான இலங்கையில், ஓர் ஊரான மீரிகாமத்தில் எங்கோ ஒரு சிறு மூலையில் ஒரு பகுதியில் நடக்கிறது.

யாருக்கும் எளிதில் கிடைக்காத பாக்கியம், அதுதான் இறந்துபோன நானே என் நூற்றுண்டுவிழாவுக்கு உரை நிகழ்த்தும் அற்புதம். இது எல்லோருக்கும் ஆச்சரியத்தைத் தரக்கூடியது வியப்பளிக்கக்கூடியது, சிந்தனையைத் தூண்டிவிடுவது.

உலகமெங்கும் என் நூற்றுண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் மக்களுக்கு என் அளவுகடந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுக்கு நான் இன்று நேரில் சொல்லும் புத்திமதி என்னவென்ருல் மதுவிலக்கைக் கடைப்பிடியுங்கள் என்பதும், பொய் கூறக்கூடாது என்பதும், ஆண்டவனைத் தொழுங்கள் என்பதும், செயற்கைக் குடும்பக் கட்டுப்பாட்டைச் செய்யாதீர்கள் என்பதும்தான்.

திருவள்ளுவரின் திருக்குறள்களைக் கடைப்பிடித்தாலே நாட்டில் ஜனத்தொகை குறையும். ஸ்ரீலஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ச சுவாமிகளும், சாரதாதேவி அம்மையார் அவர்களும், ''தம்பதிகளே, சகோதரர்களைப்போல் வாழவேண்டும்'' என்று அன்று சொன்னர்கள். அதை உலக மக்கள் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும். அப்படி உலக மக்கள் ஒவ்வொருவரும் வாழ்ந்தால் உலகத்தில்

[7ம் பக்கம் பார்க்க]

## எதிர்கால நன்மை எது?

—புலவர் ம. பார்வதிநாதசிவம்—

இன்பமொடு துன்பமிவை இரண்டும் வாழும்
இவ்வுலகில் தர்மநெறி விழைந்து வாழ்ந்த
நன்மனவர் ஒருவர்சில நாட்கு முன்னர்
நம்மூர்க்கு வந்திட்டார்! நம்மைப் பார்த்தே
''அன்புடையீர்! எதிர்கால நன்மைக்காக
அவனியில்நீர் எதைப் புரிந்தீர்? என்றே கேட்டார்.
அன்னவர்தம் கேள்விக்கு விடையே யாக
அங்குநின்றே பலவுரைத்தோம்! அவற்றைக்
கேண்மின்!

''வங்கியிலே பணம் வைத்தோம்! என்றும் இன்னும்
வயற்காணி பல வைத்தோம்! என்றும் ஆலைப்
பங்கினிலே பல வைத்தோம்! என்றும் மாடி
பலகொண்ட கட்டிடங்கள் வைத்தோம்! என்றும்
தங்க நகை பல வைத்தோம்! என்றும் இன்னும்
தக்க பல பொருள் வைத்தோம்!'' என்றும் மேலும்
அங்குநின்றே பல சொன்னேம்! ஒருவன் மட்டும்
அவற்றிற்கு மாருக ஒன்றைச் சொன்னன்!

',பசித்தோர்க்குச் சோறிட்டேன்! படிப்பை நாடும்
பாலகர்க்கு நூலளித்தேன்! தமிழின் மாண்பை
இசைத்தோர்க்குப் பொருள் கொடுத்தேன்! கல்வி
வாழும்
இடங்களெலாம் உயர்வதற்கு நன்மைசெய்தேன்!
திசைத்தோறும் நன்மைகளைச் செய்தேனன்றிச்
சிறியேற்கு நன்மைசெய மறந்தேன்!' என்ன
அசைத்தாரே நன்மனவர் கையை ''நீதான்
அவனியிலே நினக்கு நன்மை செய்தாய்!'' என்ருர்.


"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ காவ்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்
போன்: 330


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிங்களக் கலையுலகம் தமிழரை மதிக்கிறது!

## யாழ்ப்பாணத்தில் சமகால வெளியீடாக திரையிடப்பட்டுள்ள 'பாராவலலு'



'பாராவலலு'வில் நடித்துள்ள தமிழ் நடிகர் ஜெயகாந்த்

முதல் தடவையாகச் சிங்களப்படமொன்று சமகால வெளியீடாக யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ளது: கலைஞர்களுக்குள் தமிழர் சிங்களவர் என்று வேறுபாடு கிடையாது என்று சொல்வது போல, தமிழ் நடிகர் ஒருவரையும் சேர்த்துக்கொண்டு 'பாராவலலு' என்ற அருமையான சிங்களப் படத்தை வெளியிட்டிருக்கிறார் சிம்மன் மறவன் கொட.

புரட்சி நடிகர் போன்று ஈழத்தில் தனக்கென ஒரு ரசிகர் கூட்டத்தை வைத்துக்கொண்டு, புதுமையும் புரட்சியும் செய்து முன்னேற்றப் பாதையில் சிங்களப் படவுலகில் முடிசூடா மன்னனாகப் பவனி வந்துகொண்டிருக்கும் காமினி பொன்சேகா இப்படத்தில் கதாநாயகனாக நடித்துள்ளார்.

அடக்கமாக நடித்து, அருமையான நடிப்பால் பெயர் வாங்குகிறார், கதாநாயகி அனுலா கருணதிலக.

சிங்களப் படவுலகில் தமிழர்களுக்கு இடமில்லையா என்ற கேள்விக்கு இடம் வைக்காமல், சிறந்த கலைஞர்களென்றால், நாமும் மதிப்போம் என்று கூறிக்கொண்டு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட ரி. நமசிவாயம் (ஜெயகாந்த்) என்ற இளைஞரை இப்படத்தில் நடிக்க வைத்து, அவருக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள், சிங்களத் தயாரிப்பாளர்கள்!

தமிழ் நாடக உலகில் தனக்கென ஒரு தனிப் பாதையை வகுத்துக்கொண்டு, தனக்கே உரிய நடிப்பால், தனக்கென்றோர் இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கும் திரு. நமசிவாயம் இப்படத்தில் நான்கு காட்சிகளில்மட்டும் தோன்றியபோதிலும் சிறப்பாக நடித்திருக்கிறார்.

ஈழத்தில் தரமான சிங்கள நடிகர்கள் பலர் நடித்திருக்கிறார்கள்: ஜோ அபயவிக்கிரம, பியதாச குணசேகரா, ருக்மணி தேவி, ஜேசிகா விக்கிரமசிங்கா, மாலினி பொன்சேகா, எடி ஜெயமான்ன, தலதா குணசேகரா ஆகியோரும் நடித்திருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் 'மனோகரா' தியேட்டரில் இப்போது ஓடிக்கொண்டிருக்கும் இப்படத்தை சுதாஜ் மஸ்கொரலா டைரக்ட் செய்திருக்கிறார். அருமையான டைரக்‌ஷன்! அவரே திரைக்கதை வசனத்தையும் எழுதியுள்ளார். படப்பிடிப்பை திரு. டி. பி. நிகால்சிங்கா செய்துள்ளார்.

தமிழர்களை மதித்துள்ள இப்படத்தை ஒவ்வொரு தமிழரும் நிச்சயம் பார்க்க வேண்டும்.

—மேகலா

# கலைஞரின் நச்சுக்கோப்பை

## நாடக விமர்சனம்

சென்ற 8-11-69 சனிக்கிழமை மாலை உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் சுன்னகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடந்த கலைஞர் மு. கருணாநிதியின் 'நச்சுக் கோப்பை' நாடகம் சமூக சீர்திருத்தத்தைவலியுறுத்துவது மட்டுமல்லாமல் சாதிவெறியர்களுக்கு சாட்டையடி கொடுத்திருப்பதுபோலவும் அமைந்திருந்தது.

பாத்திர அமைப்பில் மாற்றம் செய்திருக்கலாம். ஏகாம்பரமாக நடிப்பவர் வில்லனாக நடித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். பிராமணராக நடித்த 'ரவி' எல்லோர் பாராட்டையும் பெற்றிருக்கிறார்.

பழனியப்பனாக நடித்த தனபாலசிங்கம் உருவத்தில் குட்டையானாலும் நடிப்பில் உயர்ந்து நிற்கிறார். வசன உச்சரிப்பு மெச்சத்தக்கது.

அழகப்பனாகத் தோன்றிய சந்திரசேகர் மேடைக்குப் புதியவர் என்றாலும் நடிப்பில் இரசிகர்களின் அப்ளாசைப் பெறுகிறார். சில இடங்களில் அவர் சிறு கோணங்கிச் சேஷ்டைகள் செய்வதைத் தவிர்த்தால் அவருக்கு நல்ல எதிர்காலம் இருக்கும்.

கதாநாயகி சாந்தாவாகத் தோன்றிய விலாசினிதேவியின் நடிப்புப் பிரமாதம்!

சாந்தாவின் அப்பாவாகத் தோன்றிய சண்முகம் வசனத்தில் தடுமாறுவது எதற்காக?

பழனியப்பனின் நண்பனாக (பிற்பகுதியில்) வரும் நடிகர் ''பவனின்'' வளர்ச்சி அதிக தூரத்திலில்லை.

குறைகள் சில இருப்பினும் சலிப்பின்றி நாடகத்தைப் பார்க்கக்கூடியவாறு சுறுசுறுப்புடன் பணியாற்றிய டைரக்டரும், உதவி டைரக்டரும் பாராட்டுக்குரியவர்கள். மேலும் இந்நாடகத்தை மக்களுக்கு அளித்த நிர்வாகி 'தேவனை' நாம் பாராட்ட வேண்டும்.

—சி. கணேஷ்.

# இரட்டை வேடத்தில் நடிகர் திலகம்

''புந்தி மந்துலு'' என்ற தெலுங்குப் படத்தின் கதையைத் தழுவி தயாரிக்கப்படும் படமொன்றில் சிவாஜி கணேசன் இரட்டைவேடங்களில் நடிக்கிறார்.


கோவில் பூசாரியாகவும், மனம்போனபோக்கில் ஜாலி பண்ணும் மைனர் வேடத்தையும் ஏற்று நடிக்கும் சிவாஜி கணேசனுடன் ஜோடியாக கே.ஆர்.விஜயா நடிக்கிறார்.

ராசி மூவீசாரால் தயாரிக்கப்படும் இப்படத்தின் நெறிப்படுத்தலை பி. மாதவன் கவனிக்கிறார். அந்தரம்

ஒளிப்பதிவை ஏற்க, கே.வி. மகாதேவன் இசை அமைக்கிறார்.

# கலை அரங்கம்

தயாரிப்பு: 'மேகலா'



## சிவகாமி சிரித்தாள்

தோட்டக்காரி புகழ் வி. எஸ். கிருஷ்ணகுமார் எழுதிய 'சிவகாமி சிரித்தாள்' என்ற சமூக நாடகம் வெகு விரைவில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கொழும்பு 'நாமகள் மன்றம்' அளிக்கும் இந்த நாடகத்தில் பல முன்னணி நடிகர்கள் நடிக்கவிருக்கின்றனர்.

(வெள்ளவத்தை நிருபர்)

## நாகேஷ் பாடுகிறார்

நாகேஷ் தனது சொந்தக் குரலில் பாடுகிறார். அவர்பாடலைத் தொடர்ந்து சுந்தரராஜன், முத்துராமன், ஸ்ரீகாந்த், வி. கோபாலகிருஷ்ணன், நடிகைகள் ராகினி, ராஜசுலோசனா ஆகியோரும் சொந்தக் குரலில் பாடுகின்றனர். இவ்வாறு இவர்கள் அனைவரும் சேர்ந்துபாடும் பாட்டு, ஏ. வி. எம் ஸ்ருடியோவில் அண்மையில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. வாலி எழுதிய இப்பாடல் அருள் பிலிம்ஸாரின் நவக்கிரகம்' படத்தில் இடம் பெறுகிறது.

# எம். ஜி. ஆரின் இணைந்த கைகள்!

வெள்ளி விழாப்படமான 'அடிமைப்பெண்'ணை அடுத்து மிகப் பிரமாண்டமானமுறையில் எம்.ஜி.ஆர். தயாரித்து வெளியிட இருக்கும் கலர்ப்படம் ''இணைந்த கைகள்.''

எம். ஜி. ஆர். ஜெயலலிதா ஜோடி சேர்ந்து நடிக்கும் இப்படத்தில் கல்லூரி மாணவி புதுமுகம் மஞ்சுளா முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

நம்பியார், அசோகன், நாகேஷ், தங்கவேலு, கீதாஞ்சலி ஆகியோரும் நடிக்கிறார்கள். ரவீந்தர் கதைக்கு சொர்ணம் வசனம் எழுதுகிறார். சாணக்கியா நெறிப்படுத்துகிறார்.

ஈரான் நாட்டிலுள்ள டெஹ்ரான், பாக்தாத் ஆகிய நகரங்களிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இந்தப் படத்தின் வெளிப்புறக் காட்சிகள் படமாக்கப்படவிருக்கின்றன. படத்தின் கதை முஸ்லிம் சமய கலாச்சாரத்தை ஒத்திருப்பதால் படம் தத்ரூபமாக இருக்க வேண்டுமென்பதற்காக வே முஸ்லிம் நாடான ஈரானில் படமாக்கப்படுகிறது.

அரபு நாட்டில் படப்பிடிப்பு நடக்கும் முதல் தமிழ்ப்படம் ''இணைந்த கைகள்.''

## இந்திரா ... .....

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

ஜனத்தொகையைப் பற்றி கவலைப்படவேண்டிய அவசியமே இருக்காது.

செல்வி வித்தகத்தின் கட்டுரை என் நூற்றாண்டு விழாவுக்குள் பிரசுரமாகாவிட்டாலும் அது விரைவில் பிரசுரமாகி உலக மக்களுக்கு நன்மைகள் செய்யும்.

### இந்திராவுக்கு ஆசி

என் நூற்றாண்டு விழா கொண்டாடும் இன்று உலக மக்களுக்குப் பல புத்திமதிகளையும் ஓர் அரிய உண்மையையும் தெரிவித்துவிட்டு பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு என் ஆசீர்வாதத்தையும் தெரிவித்துக்கொண்டு, உலக மக்களுக்கும் என் ஆசீர்வாதத்தையும் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய இந்த நூற்றாண்டு விழா உரையை இனிது முடித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

பாரதத்தாய்க்கு என் வணக்கம்.

ஜெய்ஹிந்த்.

ராம் ராம் ராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலைச் சவடால்

ஒரு சின்ன உபகதை.

ஙெகு காலத்துக்கு முன் அதாவது இலங்கையின் பூர்வ குடிமக்கள் ஒட்டகங்களை கட்டிமேய்த்து வந்த காலத்தில், திருக்கோணமலையில் நிலாவெளிப்பக்கமாகப் புல் மேய்ந்துகொண்டுநின்ற ஓர் ஒட்டகம் தன் நெட்டைக் கழுத்தை ஒருக்கால்முன்னே நீட்டியதாம். அம்மாத்திரத்தே அதன் தலை யாழ்ப்பாணத்திலுள்ள மாவிட்டபுரம் வெற்றிலைத் தோட்டம் ஒன்றுக்குள் நுழைந்துவிட்டது. தலையை மேலும் கீழுமாக ஆட்டி முருக்கங்குழையுடன் வெற்றிலைத்தழைகளையும் மொசமொசவென்று அது கடித்துத் தின்னத் தொடங்கவே, வெற்றிலைத் தோட்டத்துக்குள் சருகு பொறுக்கிக்கொண்டு நின்ற தோட்டக்கார ஆச்சி, தடி எடுத்து அதன் மூஞ்சியிலே

## பசுந்துளிர்

படபடவென்று அடித்துக் கலைத்தாளாம். ஒட்டகம் அசையவில்லை. மேலே இன்னும் தலையை நீட்டிக் கொழுந்துகளை முழுதாக வாய்க்குள்சுருட்டிவைக்கலாயிற்று. தோட்டக்கார ஆச்சி இந்த விநோதமான பிராணியின் கொடுமையைப்பார்த்து சலக்கமடைந்து குய்யோ முறையோ என்றுகூக் குரலிட்டவளாக ஒருதடவை அது தலையைத் தாழ்த்திய போது அதன் கழுத்திலே எட்டிப்பிடித்தாள். இதற்குள்ளே, அக்கம்பக்கத்துத் தோட்டங்களிலிருந்து ஆட்கள் திரண்டுவரும் ஆரவாரம் கேட்கவே. ஒட்டகம் சட்டென்று தன் கழுத்தை வளைத்து பின்வாங்கிற்று. அந்த மாத்திரத்தே ஒட்டகத்தின் கழுத்தைப்பிடித்துத் தொங்கிய ஆச்சியும் திருக்கோணமலை நிலாவெளி போய்ச் சேர்ந்தாளாம். அதன்பின் அவள் யாழ்ப்பாணத்துக்கேதிரும்பவில்லையாம். ஒட்டகமும் அதன்பின் ஒருபோதும் தன் கழுத்தை வடக்கே நீட்டத் துணிவதில்லை.

இந்த உபகதை வெற்றிலைக்குப் புகழ்பெற்ற மாவிட்டபுரத்துக் குடிமக்கள் மத்தியில் இன்றைக்கும் வழங்கி வருகிறது. அக்கரைச்சீமையிலிருந்து கல்யாணம், கோவில்திருவிழாத் தேவைகளுக்கு வெற்றிலை, வாழை இலை வாங்கிக்கொண்டு போகத் தோணி பிடித்துக்கொண்டு ஆட்கள் வந்துபோனதுபற்றியும் அக்கரையிலிருந்து மீன்பிடிக்க வந்தோர் இக்கரையில் நெல் குற்றும் சத்தம்கேட்டு இக்கரையிலும் ஏதோ ஊர்மனை இருப்பதாக அனுமானித்துக்கொண்டு திரும்பிப் போய் தங்கள் பெண்கள் குழந்தைகளுக்குத் தேவதை நாட்டுக்கதை சொல்லியது பற்றியும் இவ்வூரவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வார்கள்.

இவ்வூர்வெற்றிலைத்தோட்டங்களைப் பார்ப்பதற்கென்று சில காலத்துக்கு முன்னதாக குண்டசாலை கமப்பண்ணைப் பயிற்சி நிலையத்திலிருந்து பெண்களும் ஆண்களும்கூட்டமாக வந்து ஒவ்வொரு வெற்றிலைத் தோட்டமாக நுழைந்து வெளியேறியதைப் பார்த்த போதுதான் எனக்கு இவ்வூரில் வழங்கிவரும் இந்தப் பழைய பாட்டிக் கதையும் நினைவோடிற்று.

வெற்றிலைத் தோட்டத்தைச் சும்மா பார்த்தால் மட்டும் போதுமா? வெற்றிலைச்செய்கைபற்றி அவர்களுக்கு வேண்டிய விபரங்களைத் தெரிவிப்பதற்கும் அனுபவஞானமுள்ள ஒருவர் கிடைக்க வேண்டுமல்லவா? அதற்குத்தக்க ஆள் கடைசியாக அவர்கள் சென்ற வெற்றிலைத் தோட்டத்தில் அகப்பட்டார். படித்தவாலிபர் அவர். படித்துவிட்டு உத்தியோகம் பார்க்கப்பிரியப்படாமல் கோவிலின் வடக்குவீதியை அடுத்துள்ள தமது தகப்பனார் தோட்டத்தில்வெற்றிலையும்வாழையும் நாட்டி மிக்க இலாப நயங்கண்டு பல காலமாக கமத்தொழில் செய்துவருகிறார். கிழக்குவீதி மூத்தார் கதிரவேலுவின் மகன்தான்அவர். கதிரமலையான் என்பது அவர் பெயராம். தோட்டத்தில் மட்டுமன்றி பொதுக்கூட்டத்திலும். அதாவது மேடையிலும்பேசவல்லவர்.

தேடிவந்தவர்களுக்கு வெற்றிலைச் செய்கைமுறைகளை ஆதியோடந்தமாக விளக்கிக் கூறினர். குண்டசாலைப் பிள்ளைகள் விரிவுரையாளர்முன் நின்று குறிப்பெடுத்து எழுதுவதுபோல அவர் கூறியதை அப்படியே கேட்டு எழுதினர்கள்.

வெற்றிலைப்பயிர்ச் செய்கை எல்லா ஊரிலும் ஒரே மாதிரியாக நடைபெறுவதில்லை. கிழக்கு மாகாணத்து வெற்றிலைச்செய்கைக்கும் யாழ்ப்பாணத்து வெற்றிலைச்செய்கைக்கும் செய்கை முறையில் எவ்வளவோ வேறுபாடு உண்டு. கிழக்கு மாகாணத்தில் மணலைக்கூட்டி மேடிட்டு அதிலே காட்டுக்குச்சிகளை ஊன்றி அவற்றின்மேல் கொடிகளை வளரவிடுவார்கள். பெரும் பகுதியும் ஆற்றங்கரையை அடுத்துள்ளஊர்களில் அங்கு வெற்றிலை பயிரிடுவதால் அந்த ஆற்ருேர மண்வளத்துக்கு அவ்வளவு பக்குவம் போதும். ஆனல் யாழ்ப்பாண நாட்டில் - பிரதானமாக மாவிட்டபுரத்திலும் அதைச்சூழ்ந்த கிராமங்களிலும் வெற்றிலைச்செய்கைக்குப் பக்குவமும் பராமரிப்பும் 'கனக்க' நடைபெறுகின்றன. அதற்கேற்றுற்போல இவ்வூர் வெற்றிலைக்கும் சந்தையிலே ஒரு தனி 'மானம்' உண்டு

முகலில் நாலுபக்கமும் சுற்றிவர இறுக்கமானவேலி போட்டுவிட்டுத்தான் கொழுந்துத்தோட்டவேலைக்குத் தொடங்குவார்கள். இங்கெல்லாம் வெற்றிலைக் கொடி படருவது மூள் முருங்கை என்ற கல்யாண முருங்கை மரத்தில். ஒவ்வொரு கொடியோடும் சேர்த்து நாட்டப்படும் முருங்கைத்தடியும் கூடவே செழித்து வளரும். முருக்கங்குழை ஆடு மாடுகளுக்கு நல்ல தீனியாவதால் அவற்றிற்கும் சேர்த்து தண்ணீர் இறைப்பது வீண்போவதில்லை. உபகதையில் வரும் ஒட்டகத்தின் வாய்க்குஎட்டியதுபோல நம்மூர் ஆடுமாடுகளுக்கு முருக்கங்குழை எட்டாத உயரமாக வளர்ந்து தொங்கிப்போய் விடுவதால் அவற்றைநீளத்தடிகொண்டு இலையிலையாக ஒடித்துத்தான் போடுவார்கள் வெற்றிலைத்தோட்டத்தை நிரம்பத்துப்பரவாக வைத்திருப்பார்கள், ஒரு சருகு காண முடியாது. காக்காய் குருவி எச்சமிடாதபடி இரவிரவாகக் காவலிருப்பார்கள். தீட்டுக்காரர், துடக்குக்காரர் கண்டபடி தோட்டத்துக்குள்ளே நுழைந்துவிடாதபடி ஆசாரம் காப்பார்கள். நாளும் வேளையும் பார்த்து கொழுந்து நாற்று நடுகிறுர்கள்: சிமெந்துத் தொழிற்சாலை ஒன்றுவந்து அக்கம்பக்கமாக அண்மித்துள்ள தோட்டந் துரவுகளெங்கும் புழுதியையும் தூசையும் வாரி இறைத்து இலைகுழைகளின் பசுமையை மாசுபடுத்திவிடுவது என்னவோ உண்மைதான். தொழிற்சாலை கல் அகழ்ந்த நிலப்பரப்பு வருங்காலத்தில் வெற்றிலை, வாழை, புகையிலைப் பயிர்ச்செய்கைக்கு வாய்ப்பாக அமையும் என்ற நம்பிக்கையோ என்னவோ தொழிற்சாலை கிளப்பும் புழுதியை கழுவித் துப்பரவு செய்துகொண்டு பொறுமையாக இருக்கிறுர்கள்.

சந்தைகூடும் நாட்களில் சத்தைவிற்பனைக்கு வெற்றிலை கொண்டுபோவதற்கு இளம்பெண்கள் விடியற்

## மணிப்புறவம்

காலை எழுந்து கொடிகளில் இலைபறிக்கும் காட்சி கண்குளிரும் கிராமியக்காட்சியாகத் தோன்றும். பறித்த இலைகளை வீட்டுக்குக் கொண்டுசென்று பலபேராகக் கூடியிருந்து இனம் இனமாகத் தேர்ந்தெடுத்து அடுக்கி கட்டுக்கட்டாகக் கட்டி அதன்பின் ஆண்கள் தலைச்சுமை வண்டில்சுமையாக சந்தைக்கு எடுத்துப் போவார்கள். வெற்றிலைப் பயிர்ச்செய்கை இத்தனைகவனசிரத்தையாக மாவிட்டபுரத்திலும் அதன் சுற்றயல் கிராமங்களிலும் நடைபெறுவதனல்போலும் இவ்வூர்களில் கமக்குடிமக்களின் இல்லங்களில் வெற்றிலைச்செல்வம் ஈட்டிய லட்சுமி கடாட்சம் நிறைந்துபொலிகிறது. வெற்றிலை போட்டுக்கொண்

டாலே முகத்துக்...
கும் பேச்சில்,
ஒரு புதிய உற்சாக...
பேர் மத்தியில் ...
லிணக்க நல்லுற...
பான்மையும் ஏற்...
லவா? பழைய நா...
றைக்கும்கூடத்தா...
லையைவைக்காத ச...
கள் தமிழ்மக்கள் ...
யில் அரிதுஎன்றே ...
லாம். பழம்பாக்குட...
றிலை சுவாமி சந்...
ே ாகிறது. நிச்ச...
மாக மணமக்களை...
சேர்த்துகல்யாண...
ணயிக்கும் வெற்றி...
யாணப்பந்தலுக்கு ...
கால் நாட்டியது ...
புதுத் தம்பதிகளி...
சந்திப்புவரை நின்...
னம் கொட்டி கு...
கிறது. 'வெற்றி...
குச் சிவக்குதில்லை-...
உன் நினைவால்'...
கொஞ்சுகிறுள் ...
காதலி. வெற்றில...
டங்களை தமிழ் ...
மாடும் முற்று...
கள்-வெற்றிலைச் ...
எண்ணை காய்ச்ச...

0 0

"பிள்ளை ஒரு பி...
றிலை கையிலைகொ...
மன். இவ்வளவுதா...
விட்டு வெறுங்...
போகலாமா?" அ...
பர்தான் அவ...
பேசிக்கொண்டே ...
ஒரு கைப்பிடியள...
ந்து வெற்றிலையை...
ஒடித்...ின் கையி...
ரூர். அவரது அன்ப...
முகம் மலரச்சிரித்...
செலுத்தி அதனை ...
கொண்ட அவள், ...
வோரமாக உச்சி...
பொறுமையாக அ...
காக காத்துநின்ற...
நோக்கி விரையும் ...
வத்தோழியுடன் ...
கொள்ளுகிறுள்

அவர்கள் உதடு...
பேறி அழகூட்ட...
பாக்கு, சுண்ணாம்...
டும் வேணுமே. ...
இரண்டுமில்லா ம...
வெறும் துளிர்வெற...
மென்றுலே அப்பெ...

‘ஈழநாடு’ 10வது ஆண்டு நிறைவையொட்டிநடாத்தப்பெற்ற இலக்கியப் போட்டியில்ரூபா 500-00 பரிசு பெற்ற காவியம்.




### அதிர்ச்சியுற்றுன்

பொங்கிடும் குருதிச் சேற்றில்
புதைந்துயி ருச லாட
மங்கையும் வருந்தும் போது
மன்னவ ஞேடி வந்து
அங்குள நிலைமை யாவு
மறிந்தனன் அதிர்ச்சி யுற்றுச்
செங்கரும் பனையாள் தன்னைச்
சேர்த்தணைத் தரற்ற லாஞன்.

தோழியும் நீயு மாகத்
துரயளம் நாட்டைக் காத்து
வாளுக்கே இரையாய்ப் போன
வருத்தத்தைச் சகிப்ப ஞேயான்
ஆழிசூழ் வையம் போற்றும்
அரும்பெருஞ் செயலைச் செய்த
ஈழத்தின் மணிகாள் எம்மை
ஏன்பிரிந் தேகிச் சென்றீர்.

வன்னியன் மாட்டிக் சொண்டான்
வஞ்சமே புரிந்த என்தன்
அண்ணனும் மாட்டிக் சொண்டான்
அயோக்கிய ரான பூனைக்
கணங்களும் மாட்டிக் கொண்டார்
சுயவரை ஒழித்து விட்டோம்
மண்ணையே காத்த தெய்வ
மலர்களே மறைந்த தேஞே.

என்தனின் இதயக் சோயில்
இருக்கிற தெய்வ மேயான்
உன்தனைப் பிரிந்தெவ் வாறு
உலகினில் வாழ வல்லேன்
தந்தையின் சதியிற் சிக்கித்
தாரணி மீது வீழ்ந்த
சுந்தர வதனு இந்தத்
துயரத்தை மறப்ப தெப்போ.

மெய்யெலாம் நடுங்கும்; மன்னன்
விழியெலாம் சோரி கொட்டும்
கையெலாம் துடிது டிக்கும்
கவினெலாம் ஒளிம ழுங்கும்
வையகம் சுழலும் நீல
வானமும் இருண்டு தோன்றும்
ஐயகோ விதியோ என்றே
அறிவற்ற மரம்போற் சாயும்.

நேத்திரம் நெருப்பைக் கக்கும்
நெஞ்செலாம் குமுறி நிற்கும்
நாத்தடு மாறும் வார்த்தை
நடுக்குறும் நஞ்சர் மீது
ஆத்திரம் பொங்கும் இந்த
அநீதியும் முறையோ என்கும்
தோத்திரம் செய்யும்; மன்னன்
துன்பத்தை அளக்க லாமோ.

### தெய்வ...

என்றிவன் புலம்பும் போது
ஏந்திழை மயக்கம் நீ...
அன்புள்ள அரசே என்தன்
ஆவியை நிகர்த்த வே...
இன்றுன்னைப் பிரியும் நேர...
இரந்திந்த வரங்கள் ...
ஒன்றுமே மறுத்தி டாமல்
உவந்தளித் திடுதல் ...

குற்றமே செய்த பேர்கள்
குவலய மீதில் மீண்...
நற்குண சீல ராகி
நடப்பது முண்டு;
கொற்றவ எனது தந்தை
கொடியவன் எனினு...
பெற்றவன் ஆ...க யா...
பிழைபொறுத் தருள...

ஏழையேன் தந்தை செய்த
இப்பிழை தன்னை ...
வாழுமென் சுற்றத் தாரை
வருத்திட வேண்டாம்
வீழுமிவ் வுடலை யெண்ணி
வேதனைப் படவும் ...
ஊழினை வெல்வா ரில்லை
உண்மையீ துணர்ந்து...

சாவினைத் தடுப்பார் இந்த
தாரணி மீதில் இல்...
பாவியேன் மட்டு மென்ன
பாரினில் விதிவி லக்...
யாவையும் கனவாய் எண்...
ஆட்சியை நடத்தி ...
தேவையைப் பூர்த்தி செய்...
செகமெலாம் உன்னை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்துக்கு ஓர் அழ
ச்சில், செயலில்
உற்சாகமும் நாலு
தியில் ஒரு நல்
நல்லுறவு மனப்
ம் ஏற்படுகிறதல்
ழய நாளில்-இன்
டத்தான்வெற்றி
க்காத சுபகாரியங்
மக்கள் வாழ்க்கை
என்றே சொல்ல
பாக்குடன் வெற்
மி சந்நிதிவரை
நிச்சயதாம்பூல
மக்களை சோடி
யாணங்களை நிர்
வெற்றிலை, கல்
தலுக்கு கன்னிக்
டியது முதலாக
பதிகளின் முதற்
ரை நின்று சோப
ட்டி குலவி மகிழ்
வெற்றிலை பாக்
திலலை-மச்சானே
னவால்' என்று
ருள் ஆசைக்
வெற்றிலைத் தோட்
மிழ் வைத்தியர்
ற்றுகையிடுவார்
றிலைச் சாற்று
காய்ச்சுவதற்கு...

0 0

ஒரு பிடி வெற்
றிலைகொண்டுபோ
வளவு தூரம்வந்து
வெறுங்கையுடன்
ா?'' அந்த வாலி
அவர்களுடன்
ண்டே பறித்த
பிடியளவு கொழு
றிலையை மாணவி
ன் கையில் வைக்கி
து அன்பளிப்புக்கு
ரச்சிரித்து துதி
அதனை ஏற்றுக்
அவள், தெரு
உச்சிவெயிலில்
யாக அவர்களுக்
துநின்ற வாகனம்
ரையும் சகமாண
யுடன் சேர்ந்து
ருள்

உதடுகள் சிவப்
கூட்டி இன்னும்
ண்ணும்பு இரண்
ணுமே. இந்த
ல்லாமல் கூட
ளிர்வெற்றிலையை
அப்பெண்களின்

மென்மையான மாந்தளிர் உதடுகளில் சிவப்பு ரோஜா மலரும், கண்டீரோ!

0 0 0

படித்துவிட்டு மற்றொருவருக்குக்கீழ் உத்தியோகம், வேலைபார்க்கப் பிடிக்காமல் சுதந்திரமான கமத்தொழிலில் ஈடுபடும் வாலிபர்கள் மாவிட்டபுரம் கதிரமலையானைப்போல எல்லா ஊர்களிலும் எக்காலத்திலும் இருந்தார்கள் -அபூர்வமாக இத்தகைய இலட்சிய வாலிபர்களை, படித்துவிட்டுவேலைபார்க்கும்கிராமத்துப்பெண்களும் பட்டணத்தில்பிறந்து வளர்ந்த நாகரிகப்பெண்களும் மனம் விரும்பி முன்வந்து கல்யாணம் செய்துகொண்ட சம்பவங்கள்கூட நடைபெற்றிருக்கின்றன அளவெட்டி ஊரில் படித்துப்பயிற்சிபெற்ற ஓர் ஆசிரியப்பெண்மணி கிராமச்சங்க மெம்பராயிருந்த தோட்டக்காரர் கந்தையாவை விவாகம் செய்துகொண்டதும் சிங்கப்பூர்உத்தியோக குடும்பத்துப் பெண் கப்பல் ஏறி கடல் கடந்து ஊர்தேடி வந்து காத்திருந்து உறவு முறையான தோட்டக்கார அத்தானுக்கு மணமாலைசூடியதும் நமது காலத்தில் அரசாங்க உத்தியோகத்தரின் செல்வாக்கு ஓங்கிய வட்டாரங்களிலேயே நடைபெற்றிருக்கின்றன கொழும்பு சென்று கால்சட்டைக்குள்புகுந்துகிளார்க்காகவும் காசுக் கணக்காளராகவும் பல வேலைகள் பார்த்து கொழும்புச் சீவியத்தையும் நாற்காலி உத்தியோகத்தையும் வெறுத்து ஊர்திரும்பிய முத்தையா என்றகமக்காரக் குடும்பத்து வாலிபர் புகையிலைப் பாத்திகளில் கன்றுகளைபிடுங்கிக்கொண்டு நிற்பார். ஊருக்கு விடுமுறையில் வந்திருக்கும் பழைய நாள் பள்ளி நண்பர்கள் யாராவது அத்தருணம் அவ்வழியாக வரநேர்ந்தால் குனிந்த தலை நிமிர மளமளவென்று அவர்களுடனே இங்கிலீஷ் பேசி கொழும்

[12ம் பக்கம் பார்க்க]

கனவும் பலனும்—[2]

# மனக் கோளாறுகளா, அல்லது எதிர்கால சூசகங்களா?

ஒருவர் படுக்கையில் சாய்ந்து, தலையணையில் தலை வைத்துக் கண்களை மூடியவுடன் நித்திரை போய்விடுவதில்லை. சிறிதுநேரம் அவருடைய புறமனமானது தொழிற்பட்டுக் கொண்டிருக்கும். அன்றைய தினம் நடந்த சம்பவங்களைப் பற்றியும் நாளை நடக்கப்போகும் சம்பவங்களைப் பற்றியும் திட்டங்கள் போட்டுக் கொண்டிருப்பார். கலங்கிய நீரில் நிழல்கள் விழுவது போல கட்டுக் கோப்பில்லாத நினைவுகள் வந்து மறைந்து கொண்டே போகும். சிறிது நேரம் செல்ல வெளியுலகுக்கும், கனவுலகுக்கும் இடையில் மயக்கமான ஓர் அரைத் தூக்கம் வரும். இதைக் கோழித்தூக்கம் என்றும் சொல்வதுண்டு. இன்றும் சரியான தூக்கம் வரவில்லை. ஒரு தடாகத்தின் மேற்பரப்பில் மிதந்து கொண்டிருப்பவரை ஒக்கும் இந்தநிலை.

திடீரென்று நீருக்குள் அமிழ்ந்தி விடுவார். நிறைத் தூக்கம் வந்துவிடும். சுமார் அரைமணிநேரம் இந்த நிலையில் இருந்தபிறகு மறுபடியும் மேல்தளத்துக்கு மிதந்து வருவார். முதலாவது கனவு அப்பொழுது தான் தோற்றப்படும். பத்து நிமிடம் கழித்து மீண்டும் அடித்தளத்துக்குப் போய் ஆழ்ந்த துயில் கொளவார். மூன்றுவது மணி நேரத்தில். இன்னொரு முறை மேல்தளத்திற்கு வந்து சுமார் இருபது நிமிடங்கள் கனவுலகத்தில் சஞ்சரிப்பார். இப்படியே ஓர் இரவில் ஒருவர் நாலைந்து தடவைகள் ஆழ்ந்து உறங்குவதும் கனவு காண்பதுமாக மாறி மாறி இருப்பார். கடைசிமுறையாக அவர் மேல்தளத்திற்கு வந்து கனவு கண்டு கொண்டிருக்கும்போதே விழித்து விடுவார்.

மாணவர்கள், தொழிலாளிகள், குடிப்பெண்கள், பிச்சைக்காரர் முதலிய பலவித நிலையிலுள்ள வர்களை அழைத்து, தூங்கவைத்து, அவர்கள் தூங்கும்போது என்னவிதமாகக் கனு காண்கிருர்களென்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்து பார்த்தனர். அவர்களுடைய தலைக்கும் கண்களுக்கும் மார்புக்கும் நுண்ணிய கம்பிகலைப் பூட்டி இதயத் துடிப்பையும், கண் துடிப்பையும், மூளைத் துடிப்பையும் கவனித்தனர்.

ஒருவர் கனவு காணும்போது சகல அவயவங்களும் அசைவின்றி சோர்ந்துபோயிருக்கும். கண்விழிகள்மட்டும் மேலும் கீழுமாகச் சுழன்று துடித்துக் கொண்டிருக்கும். இப்படி கண்துடிப்பு ஏற்படும் சமயம் அதை அவதானித்துக்கொண்டிருந்த விஞ்ஞானி கனவு கண்டவரை எழுப்பி அவரது கனவின் விபரத்தை உடனே நாடாவில் பதிவு செய்துவிட்டு மறுபடியும் அவரைத் தூங்க விடுவார்.

**வி என். பி.**

இந்த ஆராய்ச்சிகளின் விளைவாக அவர்கள் கண்டு பிடித்த சில உண்மைகள் பின்வருமாறு:

சிலர் கனவு காண்பதே இல்லை என்பது பொய். ஒவ்வொருவரும் ஒவ்வோர் இரவும் கனவு காண்கிருர்கள். சிலருக்கு அதுதெரிவதில்லை. சாதாரணமனிதன் ஒருவன் எட்டுமணிநேரம் தூங்கினுல் சராசரி இரண்டு மணிநேரம் விட்டுவிட்டு கனவுகாண்கிருன். ஒரு கனவு ஏழெட்டு நிமிடம் முதல் அரைமணி நேரம்வரை நீடிக்கும்.

மனக் குளறுபடியினுலோ உணர்ச்சி மேலீடுகளினுலோ மட்டும்கனவுகள் வருவதில்லை. இவற்றல் கனவுகளின் விருத்தாந்தம் வேறுபடலாமே ஒழிய கனவுகள் சாதாரண நேரங்களிலும் உண்டாகும் கனவு காண்பது இயற்கையான ஒரு சம்பவம்.

கனவுகள் ஒரு நிழற்படம் போல திடீரெனத் தோன்றி திடீரென மறைந்து விடுகின்றன என்பதும் பொய். நிஜ வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சி எவ்வளவுநேரம் நடக்கிறதோ அதுபோலவே கனவு காணும்போதும் நடக்கும்.

கனவு காணும்போது ஒருவர் அங்கும் இங்கும் புரண்டு, கை கால் முதலிய அவயவங்களை அசைப்பார் என்பது தவறு. அதற்கு மாருக கனவு நிலையிலிருக்கும் ஒருவருடைய கண்விழிகள் மட்டுமே துடிக்கும். மற்ற உறுப்புகள் யாவும் அசைவின்றி இருக்கும்.

ஆண்களைவிட பெண்கள் அதிகமாக கனவு காண்பார்கள் என்பதும், கலையுள்ளம் படைத்தவர்களும்உணர்ச்சி வசப்பட்டவர்களும் சாதாரண மனிதர்களைவிட அதிகம் கனவு காண்பார்கள் என்பதும் தவறு. ஏனென்றல் கனவு காண்பதற்கும் மனநிலைக்கும் தொடர்பு கிடையாது. ஆணே பெண்ணே எல்லோருமே கனவுகாண்பார்கள். ஆனால் கற்பனையும் உணர்ச்சிவீரியமும் உள்ளவர்களுடைய கனவுகளின் விருத்தாந்தம் அவரவர்களுடைய விருப்பு வெறுப்புகள் ஆசாபாசங்களுக்கேற்ப கருத்துபொதிந்தவையாயிருக்கும்.

இப்படியெல்லாம் கனவு காண்பதைப்பற்றி ஆராய்ச்சிகளை நடத்தி சில உண்மைகளை கண்டுபிடித்தபோதிலும், கனவுகளின் மூலகாரணத்தைப்பற்றியும் அவற்றின் பலன்களைப் பற்றியும் தற்கால விஞ்ஞானிகளிடையே அபிப்பிராயம்வேறுபடுகிறது. மனிதனுடைய நிறைவேருத ஆசைகளே கனவுகளாகத் தோன்றி 'சப்கொன்ஸஸ்' என்ற உள்மனத்தை திருப்திப்படுத்துகின்றன என்றுமனோதத்துவ ரீதியாக ஆராய்கிறவர்கள் கூறுகிருர்கள். எதிர்காலத்தில் நடக்கப்போகும் சம்பவங்களை சூசகமாககாட்டுபவைதான் கனவுகள் என்று சாஸ்திரங்களை நம்புகிறவர்கள் கருதுகிருர்கள்.

தமிழ் இலக்கியங்களில் வந்த கனவுகள் எல்லாம் வரப்போகும் சம்பவங்களை அப்படியே தத்ரூபமாகக் காட்டின. அவை போலன்றி எதிர்கால நிகழ்ச்சிகளை குறியீடுகள் மூலம்காட்டுபவைதான் கனவுகள் என்றும் ஓர் அபிப்பிராயம் நிலவுகிறது. பஞ்சாங்கங்களில் காணப்படும் 'கனவின் பலன்' இந்த ரீதியிலேயே கூறப்பட்டிருக்கிறது.

...னாள்

போது
க்கம் நீங்கி
என்தன்
ந்த வேந்தே
ம் நேரம்
ங்கள் கேட்பேன்
டாமல்
ருதல் வேண்டும்.

பேர்கள்
ல் மீண்டும்

ண்டு; காதற்
தந்தை
எனினும் என்னைப்
யாலே
த் தருளல் வேண்டும்.

செய்த
ன்னை வைத்து
தாரை
வண்டாம்; வீணில்
யெண்ணி
டவும் வேண்டாம்
ரில்லை
துணர்ந்து கொள்வாய்.

ர் இந்தத்
ல் இல்லை
மென்ன
திவி லக்கோ
ய் எண்ணி
டத்தி நாட்டின்
தி செய்வாய்
உன்னை வாழ்த்தும்.

செய்வதொன் றறியா வேந்தன்
சேயிழை தன்னை நோக்கித்
தையலே வரங்கள் தந்தேன்
சத்தியம் என்றே கூறிப்
பெய்தசெங் குருதி யாலே
பெரியதோர் திலக மிட்டுக்
கையகத் திருத்தி நைந்து
கசிந்துளம் உருக லானன்.

முறுவலும் இதழிற் பூக்க
முகத்திலோர் ஒளியும் வீசச்
சிறுநுதல் மீது முத்தாய்ச்
சிந்திய வேர்வை மின்ன
இறுகவே மன்னன் கையை
ஏந்திழை பிடித்த வண்ணம்
இறப்பதன் முன்னர் அப்பா
எங்குளார் அழையு மென்ருள்.

தற்கொலை அவனும் செய்த
சம்பவம் அறியா மங்கை
கொற்றவ! தந்தை யெங்கே
கூப்பிடு என்றே வேண்டச்
சொற்றடு மாறி மன்னன்
சொல்லொணுத் துயர மெய்தச்
சற்றயல் நின்றேன் உண்மை
சாற்றினன் தைய லாட்கே.

இறந்தனன் தந்தை யென்றே
இயம்பிடு முன்ன தாகத்
துறந்தனள் ஆவி; அந்தோ
தூயவள் மறைந்து விட்டாள்
மறந்தனள் மகித லத்தை
மக்களால் மறக்க வொண்ணுள்
பறந்தனள் எனினும் நாட்டுப்
பற்றினுல் தெய்வ மானுள்.

## சங்கிலி ஆட்சி சிறந்தது

நங்கையின் வாழ்க்கை முடிந்தது - அந்த
நாளுமோ சென்று மடிந்தது
செங்கதிர் நீட்டியே ஆதவன் – கீழைத்
திக்கில் எழுந்து மலர்ந்தனன்.

நந்திக் கொடியும் உயர்ந்தது - யாழ்
நங்கை மூகமும் மலர்ந்தது
சங்கிலி ஆட்சி சிறந்தது - அதைத்
தாரணி யெங்கும் புகழ்ந்தது.

## வாழ்த்து

வாழிய பைந்தமிழ் வாழிய யாழகம்
வாழிய ஈழ நன் ஞடு
வாழிய நல்லறம் வாழிய பல்கலை
வாழிய வையகம் வாழி.

[முற்றும்]



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# விண்வெளியில் தண்ணீரை ஊற்றமுடியுமா?

விண்வெளியில் நீரைக் கொட்டினுல் அது எவ்வாறு விழும்? நிலத்தில் விழுவது போலத் தாரையாக விழுமா அல்லது என்ன நடக்கும் என்பதுபற்றிஆராய்வோம்,

புவியீர்ப்பு விசையில்லாத விண்வெளியில் நீரைக் கொட்டினுல் பூமியில் விழுவதுபோலத் தாரையாக விழாது. அத்துடன் பாத்திரத்திலிருந்து நீரை எளிதிற் கொட்டவும் முடியாது. பாத்திரத்தினடியில் பலமாகத் தட்டினுல் தண்ணீர் ஒருகட்டிபோன்று வெளியே விழும். இவ்வாறு ஒவ்வொரு தடவையும் தட்டும் பொழுது சிறியதும் பெரியதுமான நீர்க்கட்டிகள் பாத்திரத்திலிருந்து வெளியேறுவதைக் காண முடிகிறது. பாத்திரத்திலிருந்து கட்டியாக வெளியேறும் நீரை மற்ருெரு பாத்திரத்திற் பிடித்தாலும்கூட தண்ணீர்க்கட்டி பாத்திரத்தில் நிற்காது. பாத்திரச் சுவர் வழியாக ஊர்ந்து ஏறிச் சுவற்றன் வெளிப்புறத்திலும் வழுக்கிச் சென்றுவிடும்.

### காரணம் என்ன?

பூமியில் தண்ணீரின்மீது இரண்டு விசைகள் உள்ளன. புவி ஈர்ப்பு விசை ஒன்று. மற்ருென்று மூலக்கூறுப் பிணைப்புவிசை. பூமியில் வைத்து நாம் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றினுல், அப்பொழுது தண்ணீர் பாத்திரத்தின் உருவத்தையடையும். பின்னர் தண்ணீரைக் கீழே கொட்டும்போதும் அது தாரையாக விழுகிறது.

ஆனுல் எடையற்ற விண்வெளியில் புவிஈர்ப்பு விசை இல்லை. மூலக் கூறுகளுக்கு இடையேயுள்ள பிணைப்பு விசை மட்டுமே உள்ளது. எடையற்ற நிலையில் மூலக் கூறுப்பிணைப்புவிசை காரணமாகத் தண்ணீர் எந்தப் பருமனையும் கொண்ட திவலையாக மாறி தட்டிக்கொட்டும்பொழுது பலவகைப் பருமன்களைக் கொண்ட திரள்களாகக் கீழே விழுகின்றன.

### நனைத்தல் தன்மையும் விண்வெளியும்

திரவத்திற்கு 'நனைத்தல் (Wetting) என்ற ஒரு பண்பு உண்டு. பாதரசத்தைக் கண்ணுடிக் குழாயில் எடுத்தால் அது குழாயை நனைக்காது. ஆனுல் நீர் கண்ணுடிக்குழாயை நனைக்கும். விண்வெளியில் ஈர்ப்புவிசை இல்லையாதலால் தண்ணீர் தடையின்றி பாத்திரத்தின் சுவற்றை நனைத்துச்சென்று வெளிப்புறமாகவும், கீழ் நோக்கி வழுக்கியும் சென்று விடுகிறது. எண்ணெய்ப் பசை அல்லது கொழுப்புப் படலத்தை பாத்திரத்தின் வெளிப்புறத்தில் பூசினுல், நீர் பாத்திரத்தின் உள்ளேயே தங்கியிருக்கும்.

# அம்புலி யாத்திரைக்கு செலவிட்ட நேரங்கள்

விண்வெளி யாத்திரை ஆரம்பத்திலிருந்து அமெரிக்க, விண்வெளிக் கலங்கள் விண்வெளியில் சஞ்சரித்த காலத்தையும், நேரத்தையும் தொகுத்து அனுப்பியுள்ளார். அனலைதீவு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவியான செல்வி ரோகினி செல்லையா அமெரிக்காவின் ஜெமினி 7, அப்பல்லோ 7 ஆகிய இரு விண்வெளிக் கப்பல்களுக்கு அடுத்ததாக அம்புலியில் மனிதவர்க்கத்தின் 3-வது, நான்காவது பிரதிநிதிகளை இறக்கிய அப்பலோ 12 அதிகநேரம் விண்வெளியில் பறந்தசாதனையை நிலைநாட்டியுள்ளதாக அவர் தொகுத்துக் கூறுகிறுர்.

| விண்கலத்தின் பெயர் | பூமியிலிருந்து புறப்பட்ட திகதி | விண்வெளியில் செலவிட்ட நேரம் |
|---|---|---|
| I ஜெமினி 7 | 1965 டிசம்பர் | 330 மணி 35 நிமி |
| II அப்பலோ 7 | 1968 அக்டோபர் | 260 பணி 9 நிமி |
| III அப்பலோ 12 | 1969 நவம்பர் 14 | 244 மணி 42 நிமி |
| IV அப்பலோ 9 | 1969 மார்ச் | 241 மணி 1 நிமி |
| V அப்பலோ 11 | 1969 ஜூலை | 195 மணி 18 நிமி |
| VI அப்பலோ 10 | 1669 மே | 192 மணி 3 நிமி |
| VII ஜெமினி 5 | 1965 ஆகஸ்ட் | 190 மணி 56 நிமி |
| VIII வாஷ்டாக் 5 (ரஷ்யா) | 1965 ஜூன் | 119 மணி 6 நிமி |

(ரஷ்யாவைப் பொறுத்தவரை இதுவே நீண்டகால விண்வெளிப் பயணம் என்று கூறப்படுகிறது).

உருவகக்கதை

# இரைக்கு இரை

இரவுநேரம். அந்த வீட்டின் மின்விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அங்குள்ளோர் ஏதோ காரியத்தில் ஈடுபட்டிருந்தனர். வெள்ளையடிக்கப்பட்ட சுவரில் வெளிச்சத்தைக் கண்டதும் ஒரு சிறிய பூச்சி தனக்கு ஏதேனும் இரை கிடைக்கலாம் என்ற நம்பிக்கையில் அங்குமிங்கும் உலவிக்கொண்டிருந்தது.

மின் வெளிச்சத்தைக் கண்ட பல்லிகள் சில அங்கு தமக்கு ஏதேனும் இரை கிடைக்கும் என்றநம்பிக்கையில் அந்தச் சுவரில் வந்து கூடின. அப்போது அச்சுவரில் உலவிக் கொண்டிருந்த அந்தப் பூச்சியை ஒரு பல்லி கண்டுவிட்டது. உடனே மெதுவாகப் பதுங்கிப் பதுங்கிப் பூச்சிக்குக்கிட்டச் சென்றது.

அதுவும் தன்னைப்போல் ஒரு ஜீவன் என்றெண்ணி பூச்சியும் வாளாவிருந்துவிட்டது. சந்தர்ப்பம் கிடைத்த பல்லி பாய்ந்து கௌவியது பூச்சியை. இதைப்பார்த்துக் கொண்டிருந்த சுவர் தனக்குத்தானே சொல்லிக் கொண்டது:''இதுதான் உலகம். வாழ்க்கையே இப்படித்தான்''.

— கந்தரோடை
கா. சதானந்தன்

## புதிய தொடர் கதை

மாணவ வாசகர்களுக்கு ஒரு நல்விருந்து. ஈழநாடு மாணவர் மலரில் தொடர்ந்து பல நவீன மர்மக் கதைகளைப்படைத்து மகிழ்வித்த க. கனகலிங்கம் (இதயழகன்) மீண்டும் புதியதொரு தொடர் கதையை 'மாணவர் மலரில்' விரைவில் அளிக்கவிருக்கின்றுர்.

ஆகாயக் கோட்டை, வஞ்சிமாலை ஆகிய இவரது கதைகளை மாணவர்மலர் வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

## விசித்திர விளம்பரம்

தேவை

வெற்றிலைபோடுவது, சிகரெட், பீடி, சுருட்டுப் புகைத்தல் என்பவற்றில் நன்கு அனுபவமுள்ளவர்கள் பாடசாலைகளில் இவற்றைப் பயிற்றுவிப்பதற்குத் தேவை. நவீன முறைகளைக் கையாள்பவர்கள் விரும்பத் தக்கது.

(விளம்பரம் அல்ல)

தயாரிப்பு: இ. பே.

புகைக்கப் புகைக்க
இறுதிவரை இன்பமளிப்பவை

கனகலிங்கம் சுருட்டுக்கள்

இழுக்க இழுக்க
இறுதிவரை சுகானந்தம் தருபவை

கனகலிங்கம் சுருட்டுக்கள்

காரம், மணம், குணம்
ஒருங்கே நிறைந்தது!
அனைவரும் கேட்டுவாங்குவது!

கனகலிங்கம் சுருட்டுக்களே!

தயாரிப்பாளர்கள்:

வி. கனகலிங்கம்பிள்ளை அன் சன்,

17, சென் ஜோன்ஸ் ரோட் :. கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 'பாஷன்' என்னும் பெயரில்

# தாய்க் குலத்தின் தவறு

எதற்கெடுத்தாலும் கண்டிப்பதும் அளவுக்கு மீறிய கட்டுப்பாடும்தடையுத்தரவுகளும்தான் சிறுவர்களை விரும்பத் தகாதவர்களோடு நட்புக்கொள்ளவும், சிறு பிராயத்திலேயே திருட்டுத் தொழிலைச் செய்யவும் தூண்டுகின்றன. குழந்தைகளைக் குறைகூறிக்கொண்டேஇருப்பதால் ஏற்படும் இந்த அனர்த்தத்தை கண்டிப்பாகப் பெற்றோர்கள் குறிப்பாகத் தாய்மார்கள் தவிர்க்க வேண்டும்.

நத்தார் பண்டிகை நெருங்குகிறது. இதற்கான ஆயத்தங்களைக் கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி பிற சமயத்தவர்களும் செய்துகொண்டிருக்கிறார்கள். இப்பண்டிகையைக் குதூகலமாகக் கொண்டாடச் சிறுவர்கள் விரும்புவது பட்சணங்களிலும் பார்க்க விளையாட்டுப் பொருட்களையே என்பது யாவரும் அறிந்த உண்மை.

பெற்றோர்களும் விளையாட்டுப் பொருட்களைத் தமது குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்கத் தவறமாட்டார்கள். ஆனால் அப்பொம்மைகளை வைத்துப் பூரணமாக அனுபவிக்கத் தங்கள் குழந்தைகளை விடுகிறார்களா என்பது கேள்வி. சில வீடுகளில் கடந்த 4 அல்லது 5 வருடத்துக்கு மேற்பட்ட பண்டிகைகளுக்கு வாங்கிய பொம்மைகள் இன்றும் அழகாக கண்ணாடி அலுமாரிகளில் யாவருக்கும் தெரியத்தக்க வகையில் வீட்டின் நடு 'ஹாலில்' வைக்கப்பட்டு காட்சிப் பொருள்களாகின்றன. இது ஒரு 'பாஷ'னாகிவிட்டது. இந்த பாழாய்ப்போன 'பாஷனால்' பல வீடுகளில் குழந்தைகள் விளையாட்டுப் பொருட்களையிட்டு ஏக்கமுடையவர்களாக அவற்றை எறிந்து உடைத்து அவற்றோடு அளவளாவி கொஞ்சிக்குலவி விளையாடத் தவிக்கிறார்கள். இத்தகைய நிலையைப் அநேகமான இல்லங்களில் காணலாம். இதுதாய்மார்கள் விடும் பெருந் தவறாகும்.

**அறிவுவளர்ச்சிக்கு பயன்படும் விளையாட்டுப்பொருட்கள்**

எனவே தாய்மார்கள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்தவேண்டும். தம் தம் சிறார்களுக்கென வாங்கும் விளையாட்டுப் பொருள்களை அவர்களிடம் கொடுத்துவிடவேண்டும். இவ் இவ்விளையாட்டுப் பொருள்கள் உங்கள் குழந்தைகளுக்கு விளையாட மட்டுமன்றி

— கே. ஜி. —

அவர்களின் அறிவுவளர்ச்சிக்கும், மனவளர்ச்சிக்கும் பேருதவியளிக்கின்றன. தாயின் செயல்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் சிறுமி தனக்கு அளிக்கப்பட்ட சிறு சிறு விளையாட்டுப் பாத்திரங்களில் தானும் மண் சோறுகறி ஆக்கி மற்றச் சிறுவர்களுக்கும் அதைப்பகிர்ந்தளித்து விளையாடுவதன் மூலம் சோறுஎன்றால் என்ன? அதற்குக் கறியவசியமா, அதைத்தாய் பரிமாறுவது போல் மற்றவர்களுக்கும் பரிமாறவேண்டும் என்ற பெரிய விடயங்களையெல்லாம் சிறுவிளையாட்டின் மூலம் கற்றுவிடுகிறாள். அவளுக்கென வாங்கிய அழகிய அச்சிறு பாத்திரங்களை கண்ணுக்குக் காட்சிப் பொருளாக கண்ணாடி அலுமாரிக்குள் பூட்டிவிட்டால் மேற்கூறிய அரிய விஷயங்களை யாரும் கற்றுக் கொடுக்காமலே குழந்தை கற்கும் விஷயங்களை தாய் தடைசெய்தவளாகமாட்டாளா? இதேபோன்று அழகிய பொம்மைகள்என்றால் சிறுவர்களிலும் பார்க்க சிறுமிகளுக்கு உயிர். சில தாய்மார்கள் விலையுயர்ந்த அழகிய பொம்மைகளை வாங்கி குழந்தைகளுக்குஎட்டாத உயரமான இடத்தில் வைத்துவிடுவார்கள். அல்லது மேற்கூறியதுபோன்று கண்ணாடி அலுமாரிக்கு காட்சிப் பொருளாக்கிவிடுவார்கள். இவ்வளவும் செய்ததோடு நின்றுவிடாது அதைக் கேட்டு அடம்பிடிக்கும்குழந்தையைக் கட்டுப்படுத்தவும், ஏன் அடிக்கவும், வையவும் தயங்கமாட்டார்கள். இதனால் மலர்போன்ற குழந்தையுள்ளம் ஏக்கமடைவதோடு, தாயில்லாதவேளையில் அதை எப்படியாவது களவாக எடுத்துத் தன் அயற்சிறுவர்களுக்குக்காட்டி மகிழத் துடிக்கிறது. சிலவேளைகளில் அவ்வாறு திருட்டு வேலைகளைச் செய்தும்விடுகிறது. இதனால் கள்ளம் கபடமற்ற குழந்தை மனதில் இளமையில் கள்ளம் குடிகொண்டு விடுகிறது. இதை நிபுணர்களும் எடுத்துக் காட்டியுள்ளனர்.

**சுலபமாகக் கல்விகற்க உதவும்**

ஆகவே அறிவை வளர்ப்பதற்கு ஏதுவாகவிருக்கும்அப்பொம்மைகளைச் சிறுவர் கையில் கொடுத்துவிடவும். சிறுமிகளாயின் அப்பொம்மைகளுக்குத் தங்களுக்குத் தங்கள்தாய் என்ன பணிவிடைகளைச் செய்கிறாளோ அவற்றையெல்லாம் அவர்களும் செய்து மகிழ்வார்கள். இவ்விளையாட்டின் மூலம் பெற்ற அனுபவத்தால் சிறு வயதிலேயே தங்கள் தாயின் உதவியின்றி உடையணியவும், தலைவாரவும், பொட்டிடவும் தங்களைத் துப்பரவாக வைத்துக்கொள்ளவும் கற்றுவிடுகிறார்கள். இவர்கள்போன்றே சிறுவர்களும் ஆகாய விமானம், புகையிரதம், கார், சைக்கிள், இசைக் கருவிகள் போன்று செய்யப்பட்ட விளையாட்டுப் பொருள்கள் தங்களுக்குக் கிடைத்ததும் அவைகளை உடைத்தோ கழற்றியோ அவை என்னென்ன மாதிரி இணைந்துள்ளன, எப்படிஓடுகின்றன, எத்தனை சில்லுகள் உள்ளன என்பனபோன்ற இன்னோரன்ன பல விடயங்களையெல்லாம் தாமாகவே தம் சிறிய மூளையில் வரவழைத்து அத்தோடு நின்றுவிடாமல் தம் பெற்றோருக்கும் அதுபற்றி தம்மழலையில் சொற்பொழிவு நிகழ்த்தும் குட்டிப் பொறியியலாளராகி விடுகிறார்கள்.


**'ஷோகேஸ் பாஷன்'**

எனவே 'ஷோகேஸ் பாஷன்' என்ற பெயரில் கண்ணுக்கு அழகு தருகிறது, விருந்தினருக்கு தனது அழகுக்கலையை எடுத்துக் காட்டுகிறது என நினைத்துக் கொண்டு சில தாய்மார்கள் குழந்தைகளைக் கட்டுப்படுத்தி, அடக்கி அவர்களுக்கென வாங்கும் பொருட்களை அடைத்து அழகு பார்ப்பார்களானால் தம்குழந்தைகள் தாங்களாகவே மேற்கூறிய விளையாட்டுக் கருவிகளைக்கொண்டு அடையும் அரிய அறிவைத் தடைசெய்யும் முட்டுக்கட்டைகள் ஆகிறார்கள்.

**வீட்டு மிருகங்களோடு விளையாட அனுமதி**

விளையாட்டுப் பொருள்களை மட்டுமன்றி தம் வீட்டில் வளர்க்கும் நாய், பூனை போன்ற மிருகங்களைக்கூடத் தம் குழந்தைகளை தொடவிடாது அவைமூலம் குழந்தைகளைப் பயப்படுத்திக் காரியம் சாதிக்கும் தாய்மார்களும் உளர். இது முற்றிலும் தவறானதொரு செயலாகும். இம்மிருகங்களுக்கு குழந்தைகளை நண்பர்களாக்கவேண்டுமேயன்றி எதிரிகளாக்கக்கூடாது. எதிரிகளாக்கினால் பயங்கரமான விளைவுகளை பெற்றோர் எதிர்நோக்கவேண்டிவரும். நண்பர்களாக்கினால் குழந்தைகள் அம்மிருகங்களைத் துன்புறுத்தாது அவைகளை அணைத்து விளையாடுவதோடு, சிறு வயதிலேயே பிராணிகளிடத்து அன்பு செலுத்தவும்கற்றுக்கொள்வார்கள்.

ஆகவே சிறுவயதில் விளையாட்டுப் பொருள்கள் மூலமாகவும் வீட்டு மிருகங்கள் மூலமாகவும் குழந்தைகள் பெறும் அறிவாற்றலையும் பண்பையும், கட்டுப்பாடு, தண்டனை முதலியவற்றால் தடைசெய்யத் தாய்மார்கள் எத்தனிக்கக்கூடாது.



## குடும்பச் சுடர்

தயாரிப்பு: குணம்

## தாலாட்டுப்பாடும் இயந்திரம்

தொட்டிலில் படுத்திருக்கும் குழந்தை அழுதால் தொட்டிலை மெதுவாக ஆட்டுவதுடன் தாலாட்டுப்பாடும் அதிசய இயந்திரம் ஜேர்மன் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. குழந்தை அழத் தொடங்கியதும் அதன் சத்தம் இந்த இயந்திரத்தை இயக்கத் தொடங்குகிறது. இதனுடன் இணைந்த சிறிய மோட்டார் தொட்டிலை மெதுவாக ஆட்டுகிறது.

அதேசமயத்தில் மற்றொரு விளக்கு எரிந்து, அதில் பொருத்தப்பட்டுள்ள ரேடியோவில் இருந்து இனிய தாலாட்டுப்பாட்டு ஒலிக்கிறது. தொட்டில் ஆட்டுவதும், தாலாட்டுப் பாடுவதும் 3 நிமிட நேரம் நீடிக்கும். பின்னர் தானாக நின்றுவிடும் குழந்தை தொடர்ந்து அழுதால் இயந்திரம் மீண்டும் தாலாட்டுப் பாடும்.

சமையல் பகுதி

## 'பொலஸ்'

பொலஸ் என்பது பிஞ்சு பலாக்காய்களைக் கொண்டு தயாரிக்கும் ஒரு சுவை மிகுந்த கறியாகும். இக்கறியைச் சிங்களவர்கள் விசேஷமான முறையில் என்ன கறியென்று அறியமுடியாத முறையில் தயாரிப்பர், அவர்கள் தயாரிக்கும் முறையை நீங்களும் அறிந்துகொள்ளுங்கள்.

**தேவையான பொருட்கள்:**

நன்றாக முற்றியதுமல்லாத பிஞ்சுமல்லாத சுளைகள் சிறிதளவு வந்துள்ள பிஞ்சுப்பலாக்காய்.

- தேங்காய்ப்பால்.
- மிளகாய்த்தூள்.
- சரக்குத்தூள்
- ஏலக்காய்
- கறிவேப்பிலை
- றம்பை
- வெங்காயம்
- புளி
- மஞ்சள்தூள்
- உப்பு

**செய்யும்முறை**

பலாக்காயின் தோலைச் சீவி சிறு துண்டுகளாக வெட்டித் தண்ணீரில் போடவும். பின் அத்துண்டுகளின் தோல் சீவிய பாகத்தில் கத்தியால் சிறு சிறு கீறுகளாகக் கீறவேண்டும். இவ்வாறு செய்வதனால் கீறிய பாகங்களினுள் கறியின் கூட்டுப்போய் நல்ல சுவையைக் கொடுக்கும். பின் இத் துண்டுகளைச் சட்டியில் போட்டு முதல் பிழிந்த பாலையும், இரண்டாந் தடவை பிழிந்தெடுத்த பாலையும் பலாக்காய் துண்டுகளை மூடுமளவுக்கு விட்டு மிளகாய்த்தூள், மஞ்சட்தூள், உப்பு சரக்குத்தூள், வெங்காயம் முதலியவற்றுடன் மற்ற வாசனைப் பொருட்களையும் போட்டு அடுப்பில் வைத்து எரிக்கவேண்டும். கறி கொதித்து நன்றாக அவிந்ததும் நெருப்பைக்குறைத்து அளவான சூட்டில் நன்றாகக் கறியை இறுகவிடவும். இதன்பின்னர் இறுகியவுடன் பெருஞ்சீரக வாசனைத்தூளை அளவாக எடுத்துத் தூவிக் கறியைக்கிளறி இறக்கவும். கடுகு பெருஞ்சீரகத்தை எண்ணெயில் பொரித்து இக் கறிக்குள் போட்டுக் கலந்தால் அதன் சுவை மேலும் இரட்டிப்பாகும்.

முப்பது ஆண்டுகளுக்கு மேல்
தங்க, வைரநகைகள்
வியாபாரத்தில்
முன்னணியில் நிற்கும்
சிறந்தநாணயமுள்ள ஸ்தாபனம்
ராணி ஆபரண மாளிகை
224, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
நவீன - நாகரிக அமைப்புள்ள
தங்க வைர நகைகளைப் பெறுவதற்கு
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
மனேஜர்: A. KARAPUTUGALA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாய்க்கு இரு பாவாடைகள் வாங்கிவந்தார் அப்பா.

முதலாளி வீட்டார் மிகவும் நல்லவர்கள் என்று அம்மா சொன்னு. ஒருநாள் நானும் அம்மாவுடன் அங்கே போனேன். அடேயப்பா! அதுதான் எவ்வளவு பெரிய பங்களா! வண்ண வண்ண திரைச்சீலைகள். அழகழகான தள்பாடங்கள், பலவிதமான பூக்கண்டுகள், எத்தனை அழகு! ஹாலில் பெரிய பெரிய படங்களைத் தூக்கியிருந்தார்கள், அவற்றில் ஒன்று எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எங்கள் குடிசையைப் போலவே இருந்ததால்தான் அதில் எனக்கு விருப்பம். அந்தக் குடிசையை ஒரு பெரிய பங்களாவில் காண முடிந்ததால் படத்திலேயே ஒரு ஆசை. இல்லையானுல்... ...எங்களின் அசிங்கமான குடிலில் எனக்கேகூடத்தான் விருப்பமில்லை. ஆனுல் எனக்கொரு ஆச்சரியம். நாங்கள்தான் அழகான பங்களா படத்தைக் கண்டால் குடிசையில் ஒட்டி வைக்கிறேம்: பங்களாவிலுள்ளவர்களென்னடாவென்றல் குடிசையின் படத்தைப் பிரேம்போட்டு வைத்திருக்கிறர்களே. அழகுக்காகவா? குடிசையிலும் அழகா? பங்களாவின் சுவரில் குடிசையும் அழகாகத்தானே இருக்கும்.

அம்மா தினமும் வேலைக்குப் போய்வந்தா. ஆனுல் அப்பா? ... அவரை அச்சுக்கூடத்திலிருந்து விலக்கிவிட்டார்கள். அவர் தினமும் ஏதாவது கூலிவேலைக்குப் போய் ஐம்பதுசதம், ஒரு ரூபாயோடுவருவார். அப்பாவின் உடம்பு மிகமோசமாக மெலிந்துவிட்டது.

அன்றைக்கு 'எல்லோரும் வேதத்தில் சேர்ந்து விடுவோமா?' என்று அம்மா கேட்டா. அப்பா பதற்றத்துடன் 'ஏன்? ஏன்' என்ருர். ''முதலாளி வீட்டில் சொல்கிருர்கள் வேதத்தில் சேர்ந்தால் கோவிலில் உதவி செய்வார்களாம்; சுவாமியாரிடம் சொல்லி ஒரு நல்ல வேலையும் தேடிக்கொள்ளலாமாம்'' என்று அம்மா சொன்ஞ.

'சே! பரம்பரையாயிருந்துவந்த மதம் மாறலாமா?

'நம் பெருமையில் பரம்பரைக் கௌரவம்தான் ஒரு கேடா?'

'எனக்கென்னவோ இது நல்லதாப் படவில்லை'.

'இந்தத் தரித்திர வாழ்க்கை மட்டும் நல்லதாகப் படுகிறதாக்கும் — குழந்தைகளையும் சிஷ்ரர்மாரோட விட்டா, தையல்பழக்கி ஒன்ருே ரெண்டோ தருவார்களாம்...'

மதம்மாறுகிற பிரச்னையில் இப்படியே தினமும் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் வாக்குவாதம் நடந்தது. இரண்டு மாதங்களுக்குமதிகமாகச்சண்டைபிடித்துவிட்டு கடைசியில் கிறிஸ்தவர்களாக மாற முடிவு செய்தார்கள். தியேட்டர் முதலாளி கிறிஸ்தவர் என்பதால் அவர்களே எல்லோரையும் சுவாமியாரிடம் கூட்டிக்கொண்டு போய் ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

எங்களெல்லோருக்கும் சமயபாடங்களைப் படிக்கப் படிக்க கிறிஸ்து மதத்தில் பற்றுண்டாயிற்று.

நாங்கள் ஞானஸ்நானம் பெற்ருேம். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்கோவிலுக்குப் போனேம்; தேவநற்கருணை பெற்ருேம்.

அந்தச் சற்பிரசாதத்தில் தேவன் ஆத்துமத்தோடும், சரீரத்தோடும் இருக்கிருர் என்று 'மதர்' சொல்லியிருக்கிரு. சற்பிரசாத அப்பத்தைச் சுவாமியார் தரும்போது அதை நாக்கை நீட்டி ஏந்தி அப்படியே உதடுகளாற் பொத்திக்கொண்டு, கடிக்காமல் உமிழ்நீராலேயே கரைத்து விழுங்கும் போதுதான் எவ்வளவு சுகமாகவும் பூரிப்பாகவுமிருக்கும். அந்தவேளையில் இயேசுநாதர் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்ற போது அவர் சிரசின்மீது ஒருபிழம்பின்உருவில்இறங்கி வந்த தூய ஆவியைப் போல ஒன்று நம் உள்ளமெலாம் நிறைந்து நாமே பிரகாசிப்பதைப்போல ஒரு அமைதி நிறைந்த சாந்தம் நிலவுமே. அப்போது கடவுள் நம் இருதயத்துக்குள்ளே எழுந்தருளுகின்ருராம். கடவுள் எம்முள்வந்துவிட்டால் நம் துன்பமெல்லாம்ஒளியைக்கண்டகிருமிகளைப்போல ஓடிவிடுமே. அதனுல்தான் நாங்களெல்லாரும் தினமும் அதிகாலையில் கோவிலுக்குப் போய்ச் சற்பிரசாதம் பெற்ருேம். அதே போல ஒவ்வொரு நாளும் பொழுது விடிவதைப்போல எங்கள் வாழ்வும் விடியுமாவெனப் பார்த்துக்கொண்டிருந்தோம். ஆனுல்?......சாத்தான் தேவனைக் கண்டவுடன் ஓடிவிடுமாம்; வறுமையோ சாத்தானைவிடக் கொடியதுபோலிருக்கிறது.

சுவாமியாரின் சிபார்சினுல் அப்பாவுக்கு டாக்டர் பெஞ்சமின் கிளினிக்கில் அட்டென்டன் வேலை கிடைத்தது. மாதம் எழுபத்தைந்து ரூபாய் தந்தார்கள். அப்பா மீண்டும் கடுமையாக உழைக்கத் தொடங்கினுர். லில்லி அக்கா தையல் படிக்கப்போகிறேனென்றதற்கும் அப்பா சம்மதிக்கவில்லை. தான் இருக்கும்போது தன் பெண்கள் வேலைக்குப் போகக் கூடாதாம். அவர்களிருவரின் திருமணத்திற்கென்று மிகமிகக் கஷ்டத்தோடும் கட்டுப்பாட்டோடும் சிறிதாவது பணம் சேர்க்க முயற்சித்தார். ஞாயிற்றுக்கிழமை கட்டாயம் கோவிலுக்குப் போய்ப் பூசை காணவேண்டும் என்ற சட்டத்தையும் மறந்து அப்பா எறும்பாக உழைத்தார். முன்னரைப்போலவே வேறு வேலைகளையும் செய்யத்தொடங்கினுர். அதனுல் தன் உடல் நலத்தையும் அவர் கவனிக்கவில்லை ஒரு நாள் சோர்வோடுவந்தார். அடுத்த நாள் எழும்பவும் முடியாதபடி காய்ச்சல் காய்ந்தது. நாலைந்து தினங்களின்பின் குணமாகி வேலைக்குப் போனுர். இருமல்மட்டும் சாடையாக இருந்தது.

பிறகு சோகமே உருவாக வந்து படுத்துவிட்டார். மாலையில் வந்த அம்மா, அப்பாவின் நிலைகண்டு குலைந்து போனு. 'என்ன இப்படி இருக்கின்றீர்களே' என்றதற்கு 'இனி எனக்கு வேலை தர முடியாதாம்' என்ருர். அம்மா பதறிப்போய் 'ஏன்; ஏனும்' எனக் கேட்டா. அப்பா இருமினுர். அந்த இருமல் சில நிமிடங்கள் வரை நிற்கவில்லை. சளியைக் காறித் துப்பினுர். அந்தச் சளியில் இரத்தத்துளிகள் காணப்பட்டன. அதைக் கண்ட அம்மா இடிந்துவிழும் தன் மனக்கோட்டையைப் பிடித்துக்கொள்வதைப் போல அப்பாவை அணைத்து மார்பைத் தடவிவிட்டா.

(அடுத்தவாரம் முற்றும்)

## மீனின் வயது

ஒரு மீனுக்கு எவ்வளவு வயது ஆயிற்று என்று கணக்கிடமுடியுமா?

முடியும்! மீனின் கண்களைச்சுற்றியிருக்கும் ஒவ்வொருவட்ட வடிவமான கோடுகளும் ஒரு வயதைக் குறிக்கிறது என்று ரஷ்யநாட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

# வெற்றிலை..

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

புப் புதினமெல்லாம் ஆசையுடனே விசாரிப்பார். அவர்கள் அப்பால் போனபின் மீண்டும் தன் வேலையில் ஆழ்ந்துவிடுவார். மகாஜன கல்லூரி கந்தையாமாஸ்டர். அதே பள்ளியில் மாணவனுகப் படித்த நாட்களிலும், பிறகு ஆசிரியராகச் சேவைபுரிந்தமுழுக் காலமும் அதற்கும் பிறகு ஓய்வுபெற்று கல்லூரிக் கிளார்க்கராக அங்கேயே வேலைபார்த்த அறுபத்திநாலாவது வயதிலும்கூட, காலையில் தோட்டத்துக்குப் போய்வந்துதான்தன்பழைய 'குளோன் கோட்டை' எடுத்துமாட்டுவார்.

இன்றெல்லாம் படித்த வாலிபர்கள் அரசாங்க விவசாய சேனையில் சேர்ந்து படைதிரண்டு நவீன இயந்திர சாதனங்களுடன் கமம் செய்து அதில் பெரும் வெற்றியும் கண்டுவருவதைப் பார்க்கிருேம். அவர்கள் கூட்டுசாதனை பற்றி நிறையகேள்விப்படுகிருேம். நாடெங்கிலும்பெருகிவரும் படித்தவாலிபர்களின் பெருந்தொகையான எண்ணிக்கை அதனுல் தோன்றியுள்ள வேலையில்லாத்திண்டாட்டம், வருங்காலம் பற்றிய நம்பிக்கையின்மை என்பன தோற்றுவித்த நெருக்கடியான நிலைமையும் காலமாறுதலுமே நவயுகவாலிபரிடம் இந்த புதிய மனப்பாங்கு ஏற்படக்காரணமாயின. அல்லாமல் வேறு இலட்சியம்கிச்சியமோ சுதந்திர சீவனப்பற்ருேஎன்றெல்லாம் ஒரு பொல்லாப்பும் வில்லங்கமும் அறியமாட்டாத பரமசாதுக்கள் இவர்கள். கமத்தொழிலின் மாண்பையும் பூமித்தாயின் அரவணைப்பையும் இன்னும் பூகர்ப்ப இரகசியங்கள் பலவற்றையும் இனிமேல் ஒரு வேளை அநுபவத்தில் அவர்கள் தெரிந்துகொள்ளக் கூடும்; அத்தொழிலிலே புதியலயிப்பும் ஏற்படலாம். சென்ற ஒன்றரை இரண்டு நூற்ருண்டு காலமாக நமது தேச வாலிபர்களைக் கப்பல்காரர்கள் அல்லவோ குழல் ஊதி வசப்படுத்தித் தங்கள் கோணிப்பைக்குள்ளே கட்டிப்போட்டிருந்தார்கள்.

## எத்தனை பொருத்தம்

உலகத்திலேயே முதன் முதலாக ஒரு பெண்ணைப் பிரதம மந்திரியாக்கியது இலங்கைதான். அதன்பின் பாரதப் பிரதமராக திருமதி இந்திராகாந்தி பதவி ஏற்ருர். அண்மையில் இஸ்ரேல் நாட்டில் கோல்டா மெயர்' என்ற பெண்மணி பிரதம மந்திரியாகியிருக்கிருர். இலங்கை, இந்தியா, இஸ்ரேல் மூன்று பெயர்களும் 'இ' என்ற எழுத்தில்தான் ஆரம்பமாகின்றன. மூன்றும்நான்கெழுத்துப் பெயர்கள். மூன்று பிரதம மந்திரிகளும் கணவர்களை இழந்தவர்கள். என்ன பொருத்தம்! எவ்வளவு ஒற்றுமை!

## சிறந்த உலக வாழ்க்கை

பிறப்பது வாழ்வது- இறப்பது இதுமட்டுமல்ல உலக வாழ்க்கை, உலக வரலாற்றில் ஒரு முன்னேற்ற வரிசையாவது எழுதிவிட்டுச் செல்வதுதான் சிறந்த உலக வாழ்க்கை.

ஒவ்வொரு சம்பவத்திலிருந்தும் மனிதன் ஏதாவதொரு பாடத்தைக் கற்றுக் கொள்ளத் தெரியவேண்டும் அல்லாவிட்டால் நாம் பிறந்த நோக்கில் நின்றும் தவறியவர்களாகிவிடுவோம்

## பேசும் மீன்கள்

மீன்கள் தங்களுக்குள்ளாகவே பேசவும், கேட்கவும் செய்கின்றன. மத்தியதரைக்கடல் பகுதியில் வசிக்கும் சைரன் என்றவகை மீன் பலவிதமான ஓசைகளை எழுப்புகின்றது. விசில் சத்தத்தைக்கூட எழுப்புகிறது.

மீன்களில் அரட்டையடிக்கும் ரகங்கள், கட்கியன், ரக்ப், வெர்ச் ஆகியவை ஆகும். கடலின் ஆழத்தை அறிவதற்காக விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளும்போது இந்த மீன்கள் எழுப்பும் ஒலிகள் ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிய தொல்லையாகின்றன.

மங்கையர் அங்கங்களுக்கு

அதீத அழகைக் கொடுப்பது

நவநாகரிக அமைப்பு வாய்ந்தது.
உத்தரவாதமுள்ளது
தெய்வா நகைமாளிகையின்
தங்க வைர நகைகள்...
இன்றே விஜயஞ்செய்யுங்கள்.




தெய்வா நகை மாளிகை

173, காங்கேசன்துறை வீதி,
யாழ்பாணம்.

அழுக்கேறிய ஆடைகளை

''பளிச்''சென வெண்மையாக்க

தூய சலவைக்கு பெயர்பெற்றது




டே வைட் சோப்புக்கள்!

கேட்டுவாங்குங்கள்

டே வைட் என்றே!

உரிமையாளர்:

க. விநாயகமூர்த்தி

கரணவாய் தெற்கு :: கரவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பிரதேசங்களில்

# கைத் தொழிற் பேட்டைகள் மலர வேண்டும்

**சாவகச்சேரியிலுள்ள இலங்கை விவசாய, கைத்தொழில் அபிவிருத்தி ஸ்தாபன காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் வடகிழக்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்தி சாத்தியங்களைப்பற்றி மேற்படி ஸ்தாபனத்தலைவர் திரு. நடராஜா தெரிவித்த கருத்துக்களின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது-**

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குக், கைத்தொழிற்பேட்டைகள் இன்றியமையாதன. எமது வட கிழக்குப் பிரதேசங்களில் கைத்தொழில் பேட்டைகள் பல மலர வேண்டும். அப்பொழுது தான் சகல துறைகளிலும் முன்னேற்றம் காணலாம். சிறுகைத்தொழில்கள் தங்கு தடையின்றித் துரிதமாக வளருவதற்கு, கைத்தொழில் பேட்டைகள் உறுதுணை புரிய முடியும். பல இடங்களில் சிதறிக்கிடக்கும் பல்வேறு தொழில்களை, ஒரே இடத்தில் இருக்கச் செய்தால் ஒன்றுக்கு மற்றொன்று உறுதுணையாக இருக்கமுடியும்.

### கைத்தொழில் பேட்டை

கைத்தொழில் பேட்டையில் உள்ள ஒரு தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் அதே பேட்டையிலுள்ள மற்றொரு தொழிற்சாலையை பயன்படுத்திக் கொள்ளமுடியும். இதனால் ஒவ்வொரு தொழிற்சாலையும் தனக்கு வேண்டிய மூலப்பொருட்களை அதே பேட்டையில் பெறக்கூடிய நிலையேற்படும். ஒருவர் புதிய கைத்தொழில் ஒன்றை ஆரம்பிப்பதாயின் அவர் அதற்கான கட்டிடம் காணி, வீதி, தெருக்களுக்கு வெளிச்சம், வடிநீர், வாய்க்கால், மின்சாரம், தண்ணீர் தபாற்கந்தோர் தொலைபேசி, தீ அணைப்புப் படை, வங்கி ஆகிய வசதிகளைச் செய்வதாயின் அவருக்குப் பெருமளவில் மூலதனம் தேவைப்படும்.

சிறியதொகை முதலீடு செய்யும் தனியார் துறையினருக்கு மேற்கூறிய வசதிகளை அரசாங்கம் முதலீடு செய்து குறைந்த வாடகைக்குக் கொடுப்பதே அரசாங்க கைத்தொழில் பேட்டையின் முக்கிய குறிக்கோளாகும். நகரப்புறங்களில் தேங்கிக் கிடக்கும் கைத்தொழில்களை கிராமப்புறங்களிற்கு அப்புறப்படுத்துவதும், இதனால் அப்பகுதி விருத்தியடைய முடியும். வேலையில்லாப் பிரச்னையையும் ஓரளவு ஒழிக்க முடியும். குறைந்த மூலதனம் உள்ள தனியார் துறையினருக்குச் சிறு கைத்தொழில்களைத் தொடங்குவோருக்கு உற்சாகத்தையும் ஏற்படுத்துகிறது. அடுத்து சுகாதார வசதியுடன் திட்டமிடப்பட்ட கைத்தொழில் பிராந்தியமாக்கப்படுகிறது.

கைத்தொழில் பேட்டைகள் 3 வகைப்படும். அவை யாவன-

1 அரசினர் கைத்தொழிற் பேட்டை

2 கூட்டுறவுகைத்தொழிற் பேட்டை

3 தனியார் கைத்தொழிற் பேட்டை

கூட்டுறவுக் கைத்தொழிற் பேட்டை கூட்டுறவுச் சங்கங்களினால் அமைக்கப்படுவது. இவற்றுக்கான சிறு தொகை முதலீடு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாலும், பெரியதொகை முதலீடு அரசினர் கடன் உதவியாலும் அளிக்கப்படும்.

தனியார் கைத்தொழில் பேட்டைகளுக்கு முதலீட்டின் சிறியதொகை தனியாராலும், பெரிய தொகை அரசினர் கடன் உதவியாலும் அளிப்பதேயாகும்.

அரசினர் கைத்தொழிற் பேட்டைகள் அரசினர்களால் பெரிய தொகையோ சிறிய தொகையோ முதலீடு செய்யப்பட்டு நிறுவப்படுவதாகும். வடக்கில் அச்சுவேலி என்னும் இடத்தில் 90 இலட்சம் ரூபாய் செலவில் சகல வசதிகளுடன் 35 கட்டிடங்கள் அடங்கிய கைத்தொழிற்பேட்டை ஒன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

எமது வட கிழக்குப் பிரதேசங்களில் அரசினர் இத்தகைய கைத்தொழில் பேட்டைகளை நிறுவியுள்ளார்களா என்று பலர் கேட்கக் கூடும். மேற்கூறிய பேட்டைகள் என்ற இலக்கணத்துக்கமைய அமைக்கப்படா விட்டாலும் அரசாங்கம் சில பெரியகாரியங்களைஅமைத்துத்தொழில் படுத்தத் தவறவில்லை. வட பகுதியில் பிரதானமாகவுள்ள தொழில்கள் சிமெந்துத் தொழில், உப்பு உற்பத்தித்தொழில், பரந்தன் இரசாயனத் தொழில் ஆகியன.

### கிழக்கின் தொழில்வளம்

வடபகுதியிலும் பார்க்கக் கிழக்குப்பகுதியில் அதிகமான கைத்தொழில்களை அரசாங்கம் நிறுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடதாசித் தொழிற்சாலை, சீனித் தொழிற்சாலை, மதுவடிச்சாலை, ஓட்டுத்தொழிற்சாலை, அரிசி ஆலை, தச்சுத்தொழிற்சாலை முதலியவை அரசாங்கத்தால் நிறுவப்பட்டு சிறந்தமுறையில் தொழில் படுத்தப்படுகின்றன.

இத்தொழிற்சாலைகள் யாவும் அவற்றுக்கானமூலப் பொருட்கள் கிடைக்கும் இடங்களிலேயே நிறுவப்பட்டுள்ளன. இவைகளிற் சில வற்றைப்பற்றித் தெரிந்து கொள்வது நன்மை பயப்பதாகும்.

### கடதாசித் தொழிற்சாலை

கடதாசி உற்பத்திக்குத் தேவையான முக்கிய மூலப்பொருள் வைக்கோல். இதை பொலநறுவை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலுள்ள 165,000 ஏக்கர் நெற்காணியிலிருந்து பெறக்கூடிய சாத்தியமிருத்தலால் இவ்விடங்களுக்கு மத்தியான வாழைச்சேனையில்கடதாசித்தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை நிறுவப்பட்டபின்னர், விவசாயிகள் முன் எரிக்கப்பட்டு வந்த வைக்கோலை விற்றுப் பணம் சம்பாதிக்கக்கூடிய அதிர்ஷ்டத்தைப் பெற்றுள்ளனர்.


1967-ம் ஆண்டுக்குரிய புள்ளிவிபரப்படி 2,6300,000 ரூபாய் பெறுமதியான 9000 தொன் கடதாசியும் 9000 தொன் அட்டையும் கடதாசித் தொழிற்சாலையில் உற்பத்திசெய்யப்பட்டன. 865 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கப்பட்டது. இதனால், 1 கோடி 80 லட்சம் ரூபா அன்னிய செலாவணி மீதப் படுத்தப்பட்டது. இங்கு நகல் எடுக்கும் வேலைக்குரிய கடதாசி, கிராவ்ட்கடதாசி, தட்டச்சுப்பொறிக்குரிய கடதாசி, அச்சுவேலைக்குரியகடதாசி ஆகியவை இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன

### சீனித்தொழிற்சாலை

கந்தளாய், கல்லோயா ஆகிய இரு இடங்களிலும் சீனித் தொழிற்சாலைகள் நிறு

(14-ம் பக்கம் பார்க்க)

# பி. வி. எம். ஓறென்ஜ் பீடிகள்



தரமான மூலப்பொருட்களைக் கொண்டும், கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டும் தமது சொந்த மேற்பார்வையிலேயே தயாரிப்பதால்தான் தமதுபீடிகள் புகைப்போர் மனதில் என்றும் நிலைபெற்று நிற்பதற்கும், குன்றுத புகையின்பம் தருவதற்கும் முக்கிய காரணமாகும் என்று பி.வி. எம். ஒறென்ஜ் பீடிக்கம்பனி அதிபர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தமதுபீடி உற்பத்தி பற்றித் தெரிவிக்கையில்- எனது வாழ்க்கையில் கடந்த 15 வருடங்களாகப் பீடி தொழிலாளரின் நன்மைக்காகவே பாடுபட்டு வருகிறேன். அரசாங்கம் எங்களுக்குப் பீடி இலைகளுக்கான கோட்டா வைப் போதியளவு தருவதில்லை. இருப்பினும் எவ்வளவோ சிரமத்திற்கூடாக எமது தொழிற்சாலை இயங்கி வருகிறது. யாழ் நகரின் மத்தியில் அமையப்பெற்ற எமது தொழிற்சாலை உழைப்பது மாத்திரம் நோக்கமாகக் கொள்ளாது இந்தக்குடாநாட்டில்வாழும் வேலையற்ற பெண்பிள்ளைகள் பலருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கிறது.


எமது ஸ்தாபனத்தில் இன்னும் பல நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க எம்மிடம் திட்டமுண்டு. அரசாங்கமும் பொதுமக்களும் எங்களுடன் ஒத்துழைத்தால் எமது திட்டம் நிறைவேறுவதுடன் ஓரளவு வேலையில்லாத் திண்டாட்டமும் நீங்கும் எனக் குறிப்பிட்டார்.

—அமிர்தி



ஈழவள நாட்டில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்து பீடிப் பிரியர்களின் மனதில் வெற்றிக் கொடி நாட்டி வருவது

"பி. வி. எம். ஒறென்ஜ் பீடிகளே"

எங்கும் கிடைப்பது பி.வி.எம்.ஓிரன்ஜ் பீடிகளே!




எல்லோரும் விரும்புவது பி.வி.எம்.ஓிரன்ஜ் பீடிகளே!




காரம், மணம், குணம் ஒருங்கே அமையப் பெற்று தரத்தில் தலை சிறந்து விளங்குவது

"பி. வி. எம். ஒறேன்ஜ் பீடிகளே"

இன்றே கேட்டு வாங்கிப் புகைத்து இன்புறுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

பி. வி. எம். ஒறென்ஜ் பீடி கம்பனி,

நவாலி றோட், ஆனைக்கோட்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொழிற்பேட்டை

[13-ம் பக்கத் தொடர்ச்சி]

வப்பட்டுள்ளன. 1963-ம் ஆண்டு புள்ளிவிபரக்கணக்கின்படி கல்லோயாவில் 2195 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட 46,770 தொன் கரும்பிலிருந்து 2 லட்சம்ரூபாவுக்குமேலான பெறுமதியுள்ள 3306தொன் சீனியும், 1602.82 தொன் பாகும் கல்லோயா சீனித் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யம்பட்டன.

கந்தளாய் பகுதியில் 2563 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. 1965-ம் ஆண்டு புள்ளிவிபரப்படி 3658.4 தொன் சீனி உற்பத்திசெய்யப்பட்டது.

## மதுவடிச்சாலை

கந்தளாயிலும் கல்லோயாவிலும் ம வடிச்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன கந்தளாய் மதுவடிச்சாலை கல்லோயாவிலிருந்து கிடைக்கும் பாணியையும் சீனி ஆலையிலிருந்து கிடைக்கும் சுத்தப் படுத்தப்படாத சீனியையும் பயன்படுத்தி குடிவகைகள் தயாரிக்கப்படுகின்றன இம் மதுவடிச்சாலையானது இலங்கையின்சாராயத்தேவையில் 25 வீதத்தைப் பூர்த்திசெய்வதாகக் கூறப்படுகிறது.

கல்லோயா மதுவடிச்சாலையும் நாட்டின் தேவையை ஓரளவு பூர்த்திசெய்யத்தக்க வகையில் பிரண்டி, றம், ஜின், ஆகிய மதுபானங்கள் தயாரிக்கப்படுகின்றன.


## ஓட்டுத்தொழிற்சாலை

200 வருடங்களுக்கு மேலாக ஒடு உற்பத்திசெய்யத்தக்க அளவு களிமண் கல்லோயாவில் உள்ளதையிட்டுஅங்கு ஓட்டுத்தொழிற்சாலை நிறுவபபட்டது. இங்கு தட்டை ஓடுகளும் முகட்டு ஓடுகளும் உற்பத்திசெய்யப்படுகின்றன. 1963-ம் ஆண்டு புள்ளிவீபரப்படி 3,25,321 ரூபா பெறுமதியானஓடுகள் இங்குஉற்பத்தி செய்யப்பட்டது.

## அரிசிஆலை

இலங்கையிலுள்ள மிகப் பெரிய அரிசியாலை கல்லோயாவிலேயே உள்ளது. அரசாங்கம் 25 லட்ச ரூபாய் மூலதனத்துடன் இத் தொழிற்சாலையை நிறுவியுள்ளது. மேற்கூறிய தொழிற்சாலை

[19ம் பக்கம் பார்க்க]



டாக்டர் விசாகேசனுக்கும் தியாகராஜா தம்பதிகளின் புதல்வி செல்வி ரமணிக்கும் திருமணம் கொழும்பில் சிறப்பாக நடைபெற்றது.

# தொழில் வளர்ச்சி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)


த்தியடையச் செய்ய வேண்டும்.

## பெற்றோர்கள் உணரவேண்டும்

அடுத்து இப்பகுதியிலுள்ள பெற்றோர்கள்தொழிற்கல்வியின் அவசியத்தை நன்கு உணரவேண்டும் இங்குள்ள பெற்றோர்களில் பெரும் பான்மையினோர் தம்பிள்ளைகளுக்குப் பட்டப் படிப்பே அவசியம் எனக் கருதுகிறார்கள். பட்டம் பெற்றவர்கள் பதினாலாயிரம்பேர் இன்று வேலையின்றிப் படும் கஷ்டத்தைக் கண்ணுற்ற பின்னாவது பெற்றோர்கள் தங்களின் கல்வி முறையை இளமையிலேயே நாட்டுக்கும் பிள்ளைக்கும் பயன் படத்தக்கவகையில் மாற்றியமைக்க வேண்டும் சுருங்கக் கூறின் உத்தியோகத்துக்காகப் படிக்கும் மனப் பான்மை மாறவேண்டும். அப்பொழுதுதான் எமது பகுதி துரிதமாக கைத் தொழிற்துறையில் அபிவிருத்தியடைய முடியும்.

# மெக்ஸ்வெல்—1

[ரேடியோ, டெலிவிஷன், எக்ஸ்ரே, ரடார் போன்ற எண்ணற்ற விஞ்ஞான அற்புதங்களின் கண்டுபிடிப்புக்கு அடிப்படையாக அமைந்த பேருண்மையை உலகுக்கு அறிவித்த ஒப்பற்ற விஞ்ஞானி மெக்ஸ்வெல் பற்றிய கதை இது. இதன் இறுதிப்பகுதி (இரண்டாம் பகுதி) அடுத்த 'ஈழநாடு' வாரமலரில் வெளிவரும்]




மெக்ஸ்வெல் சின்னஞ் சிறுவனாக இருந்தபோது வயலின் கச்சேரி ஒன்றுக்குச் சென்றிருந்தான். வயலினிலிருந்து ஒலி எப்படி வருகிறது என்பதைக்கண்டறியத்தான் இளம் மெக்ஸ்வெல்லின் மனம் துடித்தது. இப்படி ஆரம்பத்திலேயே எதனையும் துருவித் துருவி ஆராய்ந்து கண்டறியும் நாட்டம் கொண்ட மெக்ஸ்வெல்தான் பிற்காலத்தில் மின்சாரம், ரேடியோ மெக்னடிசம் போன்ற துறைகளில் ஆராய்ச்சி செய்து பெரும் பேரும்புகழும் பெற்ருர்.

1831-ம் ஆண்டிலிருந்து 1879ம் ஆண்டுவரை வாழ்ந்த ஜேம்ஸ் கிளார்க் மெக்ஸ்வெல் சிறுவனாக இருக்கும்போது அவனை மகிழ்வூட்டுவதற்கு அவனதுமாமி சவர்க்கார நுரைகளை ஊதி விளையாட்டுக் காட்டினாள். சவர்க்காரக் குமிழ்களினூடாக பல வண்ணங்கள் தெரிந்தது, சிறுவன் மெக்ஸ்வெல்லை வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியது. சவர்க்காரக் குமிழ்களினூடாகப் பல வண்ணங்கள் எப்படித் தெரிகின்றன? ஏன் தெரிகின்றன என்றறிய அவனது இளம் மனது துடித்தது.

மெக்ஸ்வெல்லின் அறிவுக் கூர்மைக்கு அத்தாட்சியாக 15 ம் வயதிலேயே அவனால் எழுதப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை, இங்கிலாந்தின் தலைசிறந்த விஞ்ஞான ஆராய்ச்சி நிலையமான 'ரோயல்' சொஸைட்டியால் ஏற்கப்பட்டது. வளைவுகளைப் பற்றி மிக நுணுக்கமான ஆராய்ச்சிக் கட்டுரையொன்றை மெக்ஸ்வெல் எழுதியிருந்தான். 15 வயது இளைஞனாக இருந்த மெக்ஸ்வெல், தனது கட்டுரையைப் பெரியவர் ஒருவர் வாசிக்கப் பார்த்துப் பரவசமடைந்தான்.

எடின்பரோ பல்கலைக்கழகத்தில் மெக்ஸ்வெல் பயின்றபோது உணவு மேசையிலிருந்துகொண்டு முன்னுக்கும் பின்னுக்கும் அங்குமிங்குமாகத் தலையை ஆட்டிக் கொண்டிருப்பது பார்க்க வேடிக்கையாக இருந்தது, மற்ற மாணவர்களுக்கு. மெக்ஸ்வெல் இப்படி விசித்திரமாகத் தலையை ஆட்டிக் கொண்டிருந்தது வெறும் வேடிக்கைக்காகவல்ல, தண்ணீரில் உள்ள கிளாஸின் ஊடாக பொருள்களை வெவ்வேறு கோணங்களிலிருந்து பார்க்கும்போது, அப் பொருள்களின் தோற்றம் வெவ்வேறு விதமாகத் தெரிகின்றதைத்தான் மெக்ஸ்வெல் இப்படிச் சாப்பாட்டு மேசையிலிருந்துகொண்டே அவதானித்தான்.



கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் மெக்ஸ்வெல் படித்துக்கொண்டிருக்கும் போது படுப்பதற்கும் படிப்பதற்கும், உடற்பயிற்சி செய்வதற்கும் உகந்தநேரம் எது என்பதுபற்றி ஆராயத் தொடங்கினார். அதிகாலை 2 மணிக்கு எழுந்துவிடுதித் தாழ்வாரத்தினூடாக ஓடி "உடற்பயிற்சி" யில் மெக்ஸ்வெல் ஈடுபட்டதைக் கண்ட சக மாணவர்கள் நித்திரை கெட்ட கோபத்தில் சப்பாத்துகளாலும், வேறு பொருட்களாலும் மெக்ஸ்வெலைத் தாக்கினர் மெக்ஸ்வெல் தனது இந்த விசித்திர ஆராய்ச்சியை விட்டுவிட்டார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானத்திலும் கணிதத்திலும் வியத்தகு ஆராய்ச்சிகளைச் செய்து பெரும்புகழ் பெற்ருர். கண்களைப் பற்றிய தொரு தீவிர ஆராய்ச்சிக்காக நாயொன்றைப் பயன்படுத்தினர். மெழுகுவர்த்தி, முகம் பார்க்கும் கண்ணாடி, [illegible] வைத்துக்கொண்டே, நாய்களின் கண்களை முன்னாலும் கண்களுக்குப் பின்னாலும் ஆராய்ச்சி செய்தார் மெக்ஸ்வெல்.

தனது சொந்த நாடான ஸ்காட்லாந்தில், அபர்டீன் என்னுமிடத்தில் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்ட மெக்ஸ்வெல், சனிக்கிரகத்தைச் சுற்றிவரும் எண்ணற்ற துணைக் கிரகங்களைப்பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்[illegible] 68 பக்கங்கள் கொண்ட ஆராய்ச்சிக் கட்டுரையொன்றை எழுதினார்.

1871-ம் ஆண்டில், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் முதலாவது பௌதிகப் பேராசிரியராகப் பதவி பெற்ருர். மெக்ஸ்வெல் மைக்கல் பரடேயின் 'எலெக்ட்ரிக் டைனமோ' சித்தாந்தத்தைக் கணித ரீதியாக ஒப்புவிக்க மெக்ஸ்வெல் பெருமுயற்சி எடுத்தார். இவரது இந்த ஆராய்ச்சி ஆற்றலைப் பாராட்டி, பிரபல விஞ்ஞானி மைக்கல் பிரடேயேகடிதம்எழுதினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி

# தொழில் முன்னேற்றம்

## வளர்ச்சிக்கான வழிமுறைகள்

இயற்கை வளங்கள் நிறையவுள்ள ஒருநாடு அவற்றை அதன் மக்களின் நலனுக்குப் பயன்படுத்த வேண்டுமென்பது அகில உலகமும் ஏற்றுக்கொண்ட உண்மை. ஒரு நாட்டின் இயற்கை வளங்களை இரண்டு விதங்களில் பயன்படுத்தலாம்.

1. மூலவளங்களை நேரடியாக ஏற்றுமதி செய்வது.

2. உள்நாட்டிலேயே அவற்றை செய்முறைப்படுத்துவது அல்லது அவற்றை உற்பத்திப் பொருள்களாக்குவது. இலங்கையிலும் குறிப்பாக வட இலங்கையில் உள்ள மூலவளங்களை பயன்படுத்திக் கைத்தொழிலை விருத்தி செய்வதில் உள்ள செயல் முறைகள், கஷ்டங்கள் ஆகியவை பற்றிச் சுட்டிக்காட்ட முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உற்பத்தி செய்யும் கைத்தொழில் நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. அவை ஆரம்ப காலத்தில் பரம்பரைக் கைத்தொழில்களாகவே இருந்துவந்தன. மரங்களிலும் தேங்காய் சிரட்டைகளிலும் கடற் சிப்பிகளிலும் நுட்பமான அழகுமிளிரும் வேலைப்பாடுகள் செதுக்கப்பட்டுவந்தன. இயந்திர சாதனங்கள் பற்றியோ இயந்திரக் கருவிகள் பற்றியோ எதுவும் அறியாத அந்தக்காலத்தில் அவை முழுக்க முழுக்க குடிசைக் கைத்தொழில்களாக இருந்தன.

வடபகுதியிற் பலகிராமங்களில் ஆடைகள் நெய்வதும் சேலைகளுக்கும் வேட்டிகளுக்கும் சாயம்போடுவதும் அந்தக் காலத்தில் பிரபலமான தொழில்களாக விளங்கின. சீவல் தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும்

இ, யோகராசா

பனங்கட்டி தயாரித்துவந்தனர். பனங்கிழங்கி லிருந்து பனங்கட்டி தயாரித்து வந்தனர். பனங்கிழங்கிலிருந்து ஒடியல்மா தயாரிப்பது மற்றும் பனை ஓலை, நார் ஆகியவைகளிலிருந்து கூடை, பெட்டி, சுளகு. பாய் ஆதியன முடைவது, தென்னந் தும்பிலிருந்தும் கயிற்றுப் பாய், வாசல்களில் கால் துடைக்கும் கால்மிதி தயாரிப்பது, எள்ளிலிருந்து எண்ணெய் வடிப்பது முதலியவை பரம்பரைக் குடிசைக் கைத்தொழில்களிற் சிலவாகும். பெரிய அளவிலோ அல்லது நடுத்தரமானதாகவோ தொழில் நிறுவனங்கள் எதுவும் இப்பகுதியில் 19-ம் நூற்றாண்டில் இருக்கவில்லை. இலங்கையின் நீண்டகால கைத்தொழில் விருத்தியைக் கருத்திற் கொண்டு என்னவிதமான கைத்தொழில்கள் அதிக பயன்தரக்கூடியவை என்பது பற்றியும் உற்பத்திக்கு எவ்வித நுட்பமுறைகளைப் பயன்படுத்தி ஊக்கமளிக்க வேண்டும் என்பது பற்றியும் 1920-ம் ஆண்டுமுதல் விவாதிக்கப்பட்டுவருகிறது.

பரம்பரைக் கைத்தொழில், செய்முறைத்தொழில் ஆகியவைகளிலிருந்து நவீன தயாரிப்புக் கைத்தொழில் வரை சுமார் மூவாயிரம் கைத்தொழில் நிறுவனங்கள் இங்கு இருக்கின்றன. இவற்றில் நூற்றுக்கணக்கானவை செய்முறைக் கைத்தொழில்களும் பரம்பரைக் கைத்தொழில்களுமாகும். பத்துச் சதவீதமானவையே நவீன தயாரிப்புக் கைத்தொழில்கள் என்று வகுக்கக்கூடியவை. இவற்றுள் பெரும்பாலானவை இலேசுரக, சிறியரக கைத்தொழிற் பிரிவுக்குள்ளேயே அடங்கும்.

தொழில்நிலையம் அமைய வேண்டிய இடத்தைத் தெரிவுசெய்வது பொருளாதார விருத்திக்கு முக்கியமானதாகும். இதற்குக் கணிசமான அளவுதிட்டமும், கட்டுப்பாடும் தேவை. ஒரு தொழிலைத் தொடங்கு

[16ம் பக்கம் பார்க்க]

## மாப்பியன் மில்

## வளர்ந்த கதை

1950-ம்ஆண்டு ஜனவரி மாதம் 6-ம் திகதி யாழ்ப்பாணத்தின் வடமேற்கேயுள்ள மானிப்பாய் என்னும் இடத்தில் ஒரு சிறிய மோட்டர் உடனும் ஒரு நெல்லுக்குத்தும் 'கல்வருடனும்' மாம்பியன் மில் ஸ்தாபனத்தை திரு. ம கயிலாசபிள்ளை ஸ்தாபித்தார் முதல் இரண்டு வருஷமும் கல்லுள்ள அரிசியே இங்கு தயாரிக்கப்பட்டது அதன்பின் எல்லோரும் ஒருமாதிரியாகக் கல்லுள்ள அரிசி தயாரிப்பதை அவர் விரும்பவில்லை. முன்மாதிரியாக நடக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் பெண்கூலியாட்கள் இங்கு கடமையாற்ற நியமிக்கப்பட்டார்கள். அரிசி கல், மண் தூசி இல்லாமல் துப்புரவு செய்ய நாளொன்றுக்கு இவர்களுக்கு 1 ரூபா 50 சதம் சம்பளமாக வழங்கப்பட்டது. நீறு குறையாமல் நல்லரக அரிசியாக அளவுகுறையாமல் விற்று தனது அரிசியை இவர் அறிமுகப்படுத்தினர்.

இதனால் பொதுமக்கள் மத்தியில் மாப்பியன் அரிசிக்கு மதிப்புக் கூடியது, இதனால் அரிசி உற்பத்தி மக்கள் தேவைக்கு காணமல் போனது. இது திரு கயிலாசபிள்ளைக்கு பெரும் பிரச்னையைக் கொடுத்து. தனது அயராத முயற்சியின் பயனாகவும் இரவுபகலாக உழைத்து தனது மதிநுட்பத்தால் கல்லு, மண், தூசி இல்லாமல் அரிசியைத் துப்புரவு செய்யும் இயந்திரமொன்றை 1969-ம்ஆண்டு (Paddy Cleaner) கண்டுபிடித்தார். இதனால் துப்புரவான நல்லரக அரிசியை ஏராளமாகத் தயாரித்து மாப்பியன் கல்லு இல்லாத அரிசி என்ற பெருமையையும் இவரே பெற்றார்.

''புதியன கண்ட பாது விடுவாரோ புதுமை பார்ப்போர்'' என்று பாரதி சொன்னது போல் இதே மாதிரி இயந்திரத்தை தயாரித்து சுமார் 25 க்கும் மேற்பட்ட மில் உரிமையாளர்கள் தங்கள் அரிசி மில்களில் இன்றுபொருத்தியுள்ளனர். புதியன செய்த திரு கயிலாசபிள்ளை தமது பெயருக்கு ஏற்றவாறு பொறுமையும் நல்லகுணமும் உடைய மனிதராக விளங்குகின்றார்.

இன்று பொதுவான சகல அரிசி மில்களிலும் சீமெந்துத் தொட்டிகளில் நெல்லை இரண்டு மூன்று நாட்களுக்கு

[17ம் பக்கம் பார்க்க]

முன் நிற்பது

மாப்பியன் அரிசி ஸ்பெசல்

★ எங்கும் புகழ் பெற்றது மாப்பியன் அரிசி ஸ்பெசல்
★ எல்லோரும் உபயோகிப்பது மாப்பியன் அரிசி ஸ்பெசல்
★ வாய்க்கு ருசி தருவது மாப்பியன் அரிசி ஸ்பெசல்
★ பெருமைதரும் விவாக வைபவத்துக்கு மாப்பியன் அரிசி ஸ்பெசல்
★ தேக ஆரோக்கியத்திற்கு உகந்தது மாப்பியன் அரிசி ஸ்பெசல்

எங்கும், எல்லா வைபவங்களிலும் முன்னணியில் நின்று சிறப்பிப்பது

மாப்பியன் ஸ்பெசல் அரிசி ஒன்றே!

மாப்பியன் அரிசியை நீங்களும் இன்றே வாங்கி உபயோகித்து பயனடையுங்கள்

முக்கிய கவனிப்பு:- ஒவ்வொரு மூடை அரிசியிலும் உள்ள லேபிளைக் கவனித்து வாங்கத் தவறிவிடாதீர்கள்.

தயாரிப்பாளர்:

மாப்பியன் இன்டஸ்றியல் வேக்ஸ்

மானிப்பாய் — சுதுமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொழில் விருத்தியில் பொதுமக்களின் ஆர்வம்

[15ம் பக்கத் தொடர்ச்சி]

வதற்கான இடத்தைத் தெரிவுசெய்வதிற் சில சமயங்களில் இயற்கையும், பூகோள சாத்திரமும் முக்கிய பங்கு பெறுகின்றன. தொழில் நுட்ப பொருளாதார, சமூக அம்சங்களே பெரும்பாலும் தொழிலுக்கான ஓர்இடத்தைத்தெரிவு செய்வதில் நடைமுறையில் கணிக்கப்படுகின்றன. கைத்தொழிற்றுறையில் இணைந்து வாழும் மனப்பான்மையை இது விருத்தி செய்ய உதவுமாதலால் அது சிக்கனத்துக்கு வழிவகுப்பதும் இயல்பே. ஓர் இடத்திற் குறிப்பிடத்தக்க அளவில் தொழில்கள் அமைந்துவிட்டால், விருத்தியடையாத இடங்களைவிட விருத்தியடைந்த இடமே மேலும் தொழில்களைக் கவரக்கூடிய தகுதியைப்பெறும்.

1961-ம் ஆண்டிலிருந்து கைத்தொழில்துறையில் ஈடுபடவேண்டுமென்னும் ஆர்வம் பொதுமக்கள் மத்தியில் அதிகரித்துவருகிறது. இதன் பயனாக கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் கோரிப் பெருந்தொகையான விண்ணப்பங்கள்வந்து குவிந்துள்ளன. இப்போது கைத்தொழில் துறைகள் பெரும்பாலும் நிறைந்துவிட்டன. என்றாலும் உள்நாட்டிலும் கிராக்கியுள்ள சில பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய சிறிய வாய்ப்புஇருக்கிறது. நம்பிக்கையுடன் முதலீடுசெய்யக்கூடியவர்கள் மீண்டும் சந்தர்ப்பத்தை இழந்துவிடமாட்டார்களென்ற நம்பிக்கையுடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கிராக்கியுள்ள, உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய சில பொருள்கள் பற்றிய விபரங்கள் பின்னால் தரப்படும்.

ஒன்றன்பின் ஒன்றாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் கைத்தொழில் மயமாக்குவதில் கவனம் செலுத்தியதன் மூலம் இந்த நாட்டில் கைத்தொழில் துரிதவளர்ச்சி பெறுவதற்குப் பெரும்பணியாற்றியிருக்கின்றன. கைத்தொழில் அமைப்புமுறை மாறிவிட்டது. முக்கியத்துவமளிக்கும் முறையின்மூலம் புதிய உருவ அமைப்பில் கைத்தொழில் அபிவிருத்தி திட்டமிடப்படுகிறது. புதிய அமைப்பின் கீழ் பின்வரும் புதிய கைத்தொழில்களுக்கு அங்கீகாரமளிக்கப்படுகிறது.

1. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான சாதனங்களைத் தயாரிக்கும் தொழில்கள்.

2. உள்நாட்டு மூலவளங்களைக் கொண்டு உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கும் கைத்தொழில்கள்.

3. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான கீழைத்தேயப் பொருள்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்.

4. வெளிநாட்டுமூலதனத்துடன் இங்கு ஆரம்பிப்பதற்கான கைத்தொழில்கள்.

முழுக்முழுக்க விவசாயத்தையே நம்பியிருக்கும் ஒரு சமுதாய அமைப்பில் விவசாய இரசாயனம், இயந்திரங்க்ள் மற்றும் சாதனங்களுக்குக் கிராக்கி மிக அதிகம். விவசாயத் துறையில் விஞ்ஞான நுட்பங்கள் அதிக அளவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால், பூச்சி, கிருமிநாசினி களைகொல்லி, பாவனையும் முன்னேற்றமான முறையில் அதிகரித்திருக்கிறது, எழுபது இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சுமார் மூவாயிரம் தொன் இரசாயனப் பொருட்கள் இந்தவகையில் இறக்குமதி செய்யப்படுகின்றன. எனவே இத்துறையில் புதிய தொழில்களுக்கு நிறைய வாய்ப்பிருக்கின்றன.

இரண்டுகோடியே ஐம்பது லட்சம் ரூபாய்க்கதிகமான மதிப்புள்ள விவசாய இயந்திர சாதனங்களும், விவசாய உபகரணங்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. விவசாய அபிவிருத்தியில் பயன்படுத்தப்படும் பலதரப்பட்ட உபகரணங்களையும் ஒருபிரிவு மட்டும் தயாரிப்பது என்பது கஷ்டமான காரியம். சிறுகைத்தொழில் துறையினர் பலர் பின்வரும் உபகரணங்களை வெற்றிகரமாகத் தயாரிக்க முன்வரலாம்.

அலவாங்குகள், கோடரிகள், கிண்டும் முள்ளுகள் ரப்பர் வெட்டுக் கத்திகள், சீவற் கத்திகள், விதைப்புக் கருவிகள், நீர்க்குழாய்கள், சிறிய உழவு இயந்திரங்கள் அல்லது கிண்டும் இயந்திரங்கள்.

இந்த உபகரணங்களை உற்பத்தி செய்வதற்கான தொழில் நிறுவனங்கள் எதையும் அமைப்பதற்கு முன்னர் முயற்சியுள்ள எவரும் அரசாங்கத்துக்குச் சொந்தமான உலோகப் பொருள் கூட்டுத்தாபனத்தினதும் எஃகு கூட்டுத்தாபனத்தினதும் உற்பத்தித் திட்டங்கள் பற்றி அறிந்து கொள்வது விவேகமாகும்.

## கண்ணாடிப் பொருட்கள்

உள்நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களைக் கொண்டு புதிய கைத்தொழில் துறைகளில் ஈடுபடுவதற்கு நிறைய வாய்ப்பு இருக்கின்றது பல்வேறு வடிவங்களிலும் உருவங்களிலும் பலவிதமான அளவுகளிலும் பல்வேறு உபயோகத்திற்கும் அவசியமாகின்றன. இக் கண்ணாடிப் பொருள்கள் யாவும் இப்பொழுது இறக்குமதி செய்யப்படுகின்றன.

ஜாம் பழரசம், எண்ணெய் மதுபானம் ஆகியவைகளை அடைப்பதற்கான கண்ணாடிப்புட்டிகளை (போத்தல்கள்) உற்பத்தி செய்ய முடியும். இதுதவிர மருத்துவத் தொழிலுக்குத் தேவையான பல்வேறு அளவுகளையுடைய போத்தல்கள் வருங்காலத்தில் அதிக அளவில் தேவைப்படும். இப்பொழுது இலங்கையில் கண்ணாடித் தொழிற்சாலைகள் இரண்டு இருக்கின்றன. அவை போத்தல்கள், தம்ளர்கள், சிமினிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதுடன் நின்று விடுகின்றன. வேயன்றி இந்நாட்டுக்குத் தேவையான பலதரப்பட்ட கண்ணாடிப்பொருட்களை உற்பத்தி செய்யும் திறன் பெற்றிருக்கவில்லை. கண்ணாடித் தகடுகளும் கட்டிடத் தொழிலுக்கு வேண்டிய கதவு, யன்னற் கண்ணாடிகளையும் இங்குள்ள கண்ணாத் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யவில்லை. வட இலங்கையிலுள்ள ஒருரக மணணிலிருந்து கண்ணாடிப்பொருள் தயாரிக்கமுடியுமா என்பது பற்றிப் பல தடவைகள் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. இலண்டன் இப்பீரியல் கழகம் நடத்திய ஆய்வுகளின்படி வட இலங்கையின் வடக்குப் பகுதியில் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்திக்கு உபயோகமான ஒரு ரகமணல் பெருமளவில் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது என்று ஏகத்தொழில் விசாரணைக் குழுவின் அறிக்கை கூறுகிறது. இது 1922-ம் ஆண்டில் அரசாங்க அறிக்கை என வெளியிடப்பட்டது. பருத்தித்துறையில் காணப்படும் மணல் அதிகம் கலப்பில்லாதது; கண்ணாடி தயாரிப்பதற்குத் தகுதியானது. அந்த மணலின் ரசாயன, யந்திரக் கலவைகள் நடுத்தர ரக கண்ணாடிப் பொருள்கள் தயாரிப்பதற்குத் திருப்திகரமானது.

சில வருடங்களுக்கு முன்னர் ஹங்கேரியைச் சேர்ந்த நிபுணர்கள் நடத்திய ஆராய்ச்சியும் கண்ணாடிப்பொருள் தயாரிப்பதற்கான மணல், வட இலங்கையில் பெருமளவில் உள்ளது என்பதை உறுதிப்படுத்தியது? ஓர் அடி ஆழமுள்ள ஓர் ஏக்கர் பரப்பிலிருந்து மூவாயிரத்து இருநூறு தொன் மணல் எடுக்கலாம். கண்ணாடித் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான முதலீடு மூன்று லட்சம் ரூபாய் வரையில் தானிருக்கும்.

## மரவள்ளி

மரவள்ளிக்கிழங்கிலிருந்து மாவுச் சத்துப்பொருள் தயாரிக்கலாம். இதற்கு நல்ல சந்தர்ப்பமிருக்கிறது. இத்தொழிலைத் தொடங்குவதற்குப் பத்தாயிரம் அதிகமான மூலனம் தேவைப்படமாட்டாது.

## பனம் சீனி

50 வருடங்களுக்கு முன்னர் வடபிரதேசத்தில் செழிப்புள்ள சீனித்தொழிற்சாலையொன்று இருந்தது. இதை ஜெர்மனியர் ஒருவர் ஆரம்பித்தார். முதலாம் உலக யுத்தம் காரணமாக தொழிர்சாலை மூடவேண்டியதாயிற்று. சிறிய அளவில் இப்பொழுது பனம் சீனி வடபகுதியில் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது. புளிக்காத புதுக் கள்ளும் இயந்திர சாதனங்களுந்தான் தேவை. இதற்குத் தேவையான பணம் பத்தாயிரத்துக்கு அதிகமாகாது.

## சர்க்கரை

கரும்புச் சாற்றிலிருந்தும் புதுக்கள்ளிலிருந்தும் இலாபகரமாக சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடிய பிரிவுகள் அமைக்கலாம். ஐயாயிரம் ரூபாய்க்கு அதிகமாகாமல் பத்துக்கலன் கொள்ளக் கூடிய, இயந்திரசாதனங்களை வாங்கலாம். இவற்றுடன் ஒரு சீவல் தொழிலாளியின் குடும்பம் பத்துக் கலன் கொள்ளக்கூடிய கருப்பஞ் சாற்றிலிருந்தோ புதிய கள்ளிலிருந்தோ சர்க்கரை உற்பத்தி செய்யமுடியும்.

[17ம் பக்கம் பார்க்க]


# புத்துணர்ச்சிக்கும், உற்சாகத்திற்கும் பாவியுங்கள்

அண்ணா கோப்பியின்

1 / 4றுத்தல்

ஐந்து பிளாஸ்ரிக் வெற்றுக் கப்புகளுக்கும் ஒரு பிளாஸ்ரிக் கப் அண்ணா கோப்பி இலவசமாக வழங்கப்படும். அண்ணா கோப்பி வேண்டி பணத்தை மிச்சப் படுத்துவதற்காக இன்று முதல் அண்ணா அடையாளமுள்ள பிளாஸ்ரிக் கப்புகளை சேகரிக்க ஆரம்பியுங்கள்!

அருந்துங்கள்!
அண்ணா
கோப்பி
அண்ணா தொழிற்சாலை
இணுவில்




தரமான
அண்ணா
தயாரிப்புகளை
பாவித்து
உள்ளூர் உற்பத்தியை
ஆதரியுங்கள்.

# அண்ணா தொழிற்சாலை
இணுவில்


## சுறுசுறுப்புடன் இயங்க ‘அண்ணா கோப்பி’

இன்று ‘‘அண்ணா கோப்பித் தொழிற்சாலை’’ யென்றால் இலங்கையில் தெரியாதவர்கள் இருக்கலாம். ஆனால் ‘‘அண்ணா’’ கோப்பி’’யை அருந்தாதவர்கள் எவருமே இருக்கமுடியாதென்ற ஓர் அசைக்கமுடியாதநம்பிக்கை எம் உள்ளத்தே தோன்றிவிட்டது.

ஈழவளநாட்டில், யாழ். நகரில் சிற்றூராயினும் சிறப்புமலிந்து விளங்கும் இணுவிலில், இற்றைக்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் அதாவது 1957-ம் ஆண்டு சிறிய முதலோடு தொடங்கப்பட்டு, 1958-ல் பதிவு செய்யப்பட்டதுதான் எமது ‘‘அண்ணா கோப்பித் தொழிற்சாலை.’’

ஆரம்பத்தில் யாழ்ப்பாணப் பகுதிக்கு மட்டும் சைக்கிளில் கொண்டு சென்று விநியோகம் செய்யப்பட்ட எங்கள் கோப்பியின் மதிப்பு, எந்த அளவுக்கு மக்களுடைய அபிப்பிராயத்தைப் பெற்றிருக்கின்றது என்று அறிந்த நான் மேலும் வியாபாரத்தை விருத்தி செய்து வியாபாரத்துறையில் ஓர் உயர்ந்த இடத்தைப் பெறவேண்டும் என்பதற்காக முயற்சிஎடுத்தேன். அதன் பயனாக காரிலும், வானிலும் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று கோப்பி விநியோகம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது.

கைமெஷினில் ஆரம்பித்த கோப்பி தயாரிப்பு, இன்று கோப்பி றோஸ்ரர்களும் (Roasters) மசலும் இயங்கக் கூடிய மின்சார இயந்திரங்களின் உதவியோடு, கைபடாத முறையில் அரைத்துத் தயாரித்து அளிக்கக்கூடியதாக இருக்கின்றது.

குடிசையில் ஆரம்பித்த நம் தொழில் காலம்செல்லச் செல்லசிறியதொரு தொழிற்சாலையை உருவாக்கி, இன்று சுமார் ஐம்பது பேர் வேலை செய்யக்கூடிய அளவில் இயங்கிவருகின்றது.

‘‘அண்ணா கோப்பி’’யை அருந்திச் சுறுசுறுப்புடன் திளைக்கச்செய்து, பலம் வாய்ந்த சமுதாயத்தை உருவாக்கச் செய்வதுதான் எங்கள் தொழிற்சாலையின் முக்கிய நோக்கமாகும்.

— எஸ். பி. என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொழிலுடன் சமூகசேவை பலசெய்யும்

## 'மில்க் வைற்' ஸ்தாபனம்

கைத்தொழில் நிலையங்களைத் தாபிப்பது ஒருபொருளாதாரத் தேவையாகஇருக்கின்றபோதிலும், அதனை எங்கே தாபிப்பது என்பது அரசியல் நெருக்கடியாகவும் இன்று மாறிவிட்ட நிலையிலே, ஈழத்தின் வடபாகத்திலே தோன்றி அப்பாக மக்களுக்கு அதிக சேவை அளித்து வருகிறது மில்க்வைற்சோப் தொழிற்சாலை.

கடந்த 43 வருடங்களுக்குமுன் எனது தந்தையார் திரு. வி. மு. கந்தையா அவர்களால் நிறுவப்பெற்ற வடமாகாணத்தின் முதலாவது சோப் தொழிற்சாலை எங்களுடையதாகும். முதன் முதலாக இலங்கை மக்களுக்கு நீலசோப்பை அறிமுகம்செய்து வைத்தவர்களும்நாங்களே சென்னையில் 1968-ம் ஆண்டு நடைபெற்ற அகில உலக கைத்தொழிற்பொருட்காட்சியில் எமது சவுக்காரம் காட்சிக்கு இடம்பெற்றது. எங்கள் விடாமுயற்சியாலும், திறமையாலும் திருப்தியளிக்கும் சதவிகிதத்தில் ஆண்டுதோறும் தயார்செய்கிறோம். விற்பனை வளமும் கூடிக்கொண்டே வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். எமதுவிநியோகஸ்தர்களின்ஒத்துழைப்புக்கும் தொடர்ந்து பாவித்துவரும் பொதுமக்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக. எமது சவுக்கார சுற்றுகளை போன்றவற்றிலே தமது சவுக்காரங்களைச் சுற்றி விற்பனை செய்யும் சிலருக்கு எதிராக நாம் அடிக்கடி நடவடிக்கை எடுக்கவேண்டியிருப்பது எமது சவுக்காரப் பிரசித்திக்குச் சான்ருகும்.

நாங்கள் பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் சிறந்த சவுக்காரத்தைத் தயாரித்து அளிப்பதுடன்; அன்பளிப்பாகப் பல இடங்களில் பஸ் பிரயாணிகள் தங்கும் ஆறுதல் நிலையங்களும் அமைத்துக் கொடுத்திருக்கிறோம் செவிடர், குருடர் பாடசாலை, அனாதை இல்லங்கள், வயோதிபர் இல்லங்கள், ஆச்சிரமங்கள் மற்றும் பல பொதுக் காரியங்களுக்கும் நாங்கள் அவ்வப்போது போதிய உதவிகளைச் செய்துவருகிறோம். மக்களைப் பக்தி மார்க்கத்தில் செல்வதற்கு பெரியார்களை வரவழைத்து பக்திப்பாடல் நிகழ்ச்சிகளைப் பொது இடங்களில் ஏற்பாடு செய்து பொதுமக்களுக்கு செவிக்கின்பமவிக்கிறோம். பல பெரியார்களைக்கொண்டு அறிவுரைகளை அச்சேற்றி இலவசமாக வெளியிடுகிறோம். பாடசாலை மாணவர்களின் நலன்கருதி வாய்பாடு, அரிச்சுவடு, நேரசூசிகை முதலியவற்றைத் தயாரித்து இலவசமாக வழங்குகின்றோம்.

மேலுறைகளைச் சேகரித்து அனுப்பும் பாவனையாளர்களுக்கு அவர்கள் விரும்பும் படங்கள், துவாய்கள், முகம் பார்க்கும் கண்ணாடிகள், கூப்பன்புஸ்தகங்களைப் பாதுகாக்கும் பிளாஸ்டிக் கவர், டொக்கிமென் பாக்குகள், பிளாஸ்டிக், சாக்குப் பைகள், திருக்குறட்புஸ்தகம் இன்னும் பல பொருள்களை வழங்குகிறோம்.

—க. கனகராஜா

### மாப்பியன்...

15- பக்கத் தொடர்ச்சி

ஊறவிட்டு அதன் பின் ''பொய்லர்களில்'' அவித்து அரிசி தயாரிக்கிருர்கள். இதனுல் அரிசியில் துர்நாற்றம் வீசும் இந்தத் துர்நாற்றத்தை நீக்குவதற்கு திரு. கயிலாசபிள்ளை ஒரு புது முறையைக் கண்டுபிடித்துள்ளார்.

இந்த முறையில் தயாரிக்கப்படும் அரிசி துர்நாற்றம் இல்லாமலும், பழுப்பு, நெருங்கல் இல்லாமலும், முழுமுழுஅரிசியாகவும், கண்ணுக்குக் கவர்ச்சியாகவும் நறுமணத்தோடும் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி பொதுமக்களுக்குக் கிடைக்கும் என்று மாப்பியன் மில் அதிபர் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்ருர்.

இந்த அரிசி பத்துமணித் தியாலத்தில் தயாரித்து பொதுமக்களுக்கு வழங்கப்படும்.

—கொ. க, ஆ. க. நடராசா

# பழவகை அடைக்கும் தொழிற்சாலை

[16ம் பக்கத் தொட ...

### விநாகிரி, ஊறுகாய்

விநாகிரி தயாரிப்பது, வெங்காயம், மிளகாய் ஊறுகாய் தயாரிப்பது. தேவையான பொருள்கள்: புளித்த கள்ளு, வெங்காயம், மிளகாய். தேவையான உபகரணங்கள்: தொட்டி, கொதிதண்ணீரை உறையவைக்கும் கருவி, இவற்றுக்கு ஏற்படக்கூடிய செலவு சுமார் 5000 ரூபாய்.

### துடைப்பமும் பிரஷ்களும்

துடைப்பங்களும் தூசிதட்டும் நிலங்கழுவும் பிரஷ்களும் தும்புக்கயிறு, தென்னந்தும்பு ,ஈக்கில், கங்கு மட்டை ஆதிய மூலப் பொருள்களிலிருந்து தயாரிக்கலாம். இதற்கான உபகரணங்கள் சுமார் ஐயாயிரம் ரூபாய்க்கு வாங்கலாம்.

### மணிலா சுருட்டுகள்

சிகரெட் குடிப்பதால் ஆரோக்கியத்துக்குக் கெடுதி என அமெரிக்காவில் டாக்டர்கள் குழு ஒன்று அறிவித்ததைத் தொடர்ந்து முன்னேற்றமடைந்த நாடுகள் பலவற்றில் மணிலா சுருட்டுக்குப்பெருமளவில் கிராக்கி அதிகரித்திருக்கின்றது. மணிலா ரக சுருட்டுகள், வெளிநாட்டாரின் சுவைக்கு ஏற்பத் தயாரிக்கப்பட்டால் அந்நியசெலாவணியைச் சம்பாதிப்பதற்கு ஒரு சிறந்த சாதனமாக விளங்கும்.

டப்பாக்களில் அடைக்கப்பட்ட பழங்கள், காய்கறிகள். ஜாம், நெல்லி, சட்னி, ஊறுகாய் ஆகியவைகளுக்கு உள்நாட்டில் கிராக்கியிருப்பதுடன் வெளிநாட்டிலும் அவைகளுக்குக் கிராக்கி அதிகரித்துவருகிறது. டப்பாக்களில் அடைக்கும் தொழில் இலங்கையில் பெருமளவில் விஸ்தரிக்கப்படலாமென்றும், இவற்றுக்கு உள்நாட்டில் கிராக்கியிருப்பதுமட்டுமல்லாமல் விசேஷமான ஏற்றுமதிகளுக்குக் குறிப்பாகப் பலதரப்பட்ட சட்னிகள், டாலர் பகுதிகளில் அதிக சந்தர்ப்பம் இருப்பதாக உலக வங்கிக்குழு ஒன்று தெரிவித்திருந்தது.

### கடல் உணவுகள்

மீன்பிடிக் கூட்டுத்தாபனம் சில திட்டங்களை உருவாக்கியிருப்பதால் மீன்கள் மற்றும் கடல் உணவுகளைக் கெடாமல் வைப்பதற்கும் பதனிடுவதற்கும் பெரிய அளவிலான கைத்தொழில் பிரிவுகள்அமைப்பது விவேகமானதல்ல என்ருலும்ஊறல் மீன்கள் இருல் ஆகியவைகளை டப்பாக்களில் அடைக்கும் தொழில் அபிவிருத்திக்குசந்தர்ப்பங்கள்உண்டு.

[18ம் பக்கம் பார்க்க]

43 வருட காலமாக அகில இலங்கை மக்களின்
அபிமானத்தைப் பெற்ற மில்க்வைற் தயாரிப்புகளையே
வாங்கிப் பாவியுங்கள்.

★ மில்க்வைற் நீல சோப்
★ மில்க்வைற் பார் சோப்
★ மில்க்வைற் சலவைப் ப்வுடர்




மேலுறைகளைச் சேகரித்து அனுப்பி நாம் இனமாக வழங்கும் பொருட்களையும் புது வருடக் கலண்டர்களையும் பெற்றுகொள்ளுங்கள்

உங்கள் வாடிக்கைக் கடைகளில் நீலசோப் வாங்கும்பொழுது மில்க்வைற்
மேலுறைகளைக் கவனித்து வாங்குங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

527, காங்கேசன்துறை வீதி, (போன்: 7233) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசதியற்ற சூழ்நிலையில் வளமான தயாரிப்பு

## ஊர்காவற்றுறையில்

## உருவாகிறது தரமான அணிகள்

தண்ணீர் வசதியோ, மின்சார வசதியோ இல்லாத ஊர்காவற்றுறையில் ஒரு தொழிற்சாலை. அங்கு உற்பத்தியாகும் பொருள்களுக்கு நாட்டில் கிராக்கி.

இத் தொழிற்சாலையைப் பார்வையிடச் சென்றிருந்தேன். 'ஐடியல் - ஐலன்ட் நிற்றிங் இன்டஸ்றீஸ்' தான் அந்த அபூர்வமான கைத்தொழில் நிலையம்.

அமைதி தவழும் முகத்துடன் காட்சி தந்த பழகுவதற்கு நல்லவரான ஐடியல்—ஐலன்ட் நிற்றிங் இன்டஸ்றீஸ் உரிமையாளர் திரு. யோசேப் அவர்கள் என்னைக் கண்டதும் ''வாருங்கள் வாருங்கள்'' என்று அன்புடன் வரவேற்ருர்.

சிறிது நேரத்தில் அவருடைய தொழிற்சாலையைச் சுற்றிக் காட்டுவதற்கு ஆரம்பித்தார். பெண்கள் வேலையில் சுறுசுறுப்பாகக் காணப்பட்டார்கள். ''பண்டிகை நாட்களில் இங்கு வேலை அதிகம். அதனுல் இரவிலும் இங்கு ஆண்கள் வேலை செய்கிருர்கள்'' என்று திரு. யோசேப் அவர்கள் என்னிடம் கூறினுர்கள்.

''தீவுப்பகுதியில்- அதுவும் தண்ணீர் மற்றும் வசதிகள் குறைந்த ஊர்காவற்றுறையில் துணிச்சலுடன் இத் தொழிற்சாலையை ஆரம்பித்துள்ளீர்களே; முன்னேற்றத்திற்கு வழி இருக்கிறதா?'' என்று நான் கேட்டபோது '1964-ல் நான் இங்கு தொழிற்சாலையை சுமார் 2 பெண்களுடன் ஆரம்பித்தேன். இப்போது 40 இளம் பெண்களுக்குமேல் வேலை செய்கிருர்கள். இரவில் ஆண்கள் வேலை செய்கிருர்கள். மின்சாரவசதி வெகு விரைவில் கிடைக்கவிருக்கிறது. அப்போது ஆரம்பத்தில் சுமார் 300 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் முயற்சியில் ஈடுபட்டு தொழிற்சாலையை விரிவுபடுத்துவேன்'' என்று பெருமையுடன் கூறினுர்.

''இத் தொழிலில் உங்களுக்கு எப்படி ஈடுபாடு வந்தது'' என்று வினவியதற்கு '1942ம் ஆண்டு தொடக்கம் 1944ம் ஆண்டுவரை நான் சென்னை அரசினர் ஜவுளி தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற்று இலங்கை திரும்பி நான் இலங்கையில் அரசாங்க கைத்தொழில் இலாகாவில் சேர்ந்து, ஜவுளித் தொழிலில் பணியாற்றினேன். அப்போது இலங்கையின் முதல் கால்மேஸ் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. அதில் நான் இலங்கையின் முதலாளாகப் பணியாற்றினேன். வெளிநாட்டிலிருந்து பொருட்கள் இறக்குமதியாவதால் அந்தப் பொருட்களுடன் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் போட்டியிட முடியவில்லை. அப்போதைய பிரிட்டிஷ் அரசாங்கம் உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கம் அளிக்காமல் வெளிநாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்ததால் நாளடைவில் கைத்தொழில் நிலையங்கள் எல்லாவற்றையும் மூடிவிடவேண்டிய நிலையேற்பட்டது.

தனிப்பட்ட முறையில் நான் இத்தொழிலை 1950ம் ஆண்டில் கொழும்பில் ஆரம்பித்தேன். அப்போதும் எனது தயாரிப்புகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியான பொருட்களுடன் போட்டி போடவேண்டிய நிலையேற்பட்டதால் நான் அரசாங்க உதவியை நாடினேன். அரசாங்கமும் எனது தயாரிப்புகளை எடுத்துத் தனது பல்வேறு இலாகா உத்தியோகத்தர்களுக்கும் விநியோகம் செய்தது. இதனுல் ஓரளவு இலாபத்துடன் தொழிலை நடத்த முடிந்தது. 8 வருடங்களின் பின் மீண்டும் இத்தொழிலுக்கு இடையூறு ஏற்பட்டது. 1958-ம் ஆண்டு ஏற்பட்ட வகுப்புக் கலவரம் காரணமாக நான் தொழிற்சாலையை மூடிவிட்டு யாழ்ப்பாணம் திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது'' என்று கூறினுர்.

இடையில் கைத்தொழில் நிலைய மேற்பார்வையாளர் செல்வி ராணி சவரிமுத்து அவ்விடம் வந்தார்.

''துணிகளின் தரத்திலும் மற்றும் வேலையின் ஒழுங்கிலும் நீங்கள் அதிக கவனம் செலுத்தவேண்டுமே, அதனுல் உங்களுக்கு ஏதேனும் சிரமம் ஏற்படுகிறதா?'' என்று அவரிடம் கேட்டேன். ''அபபடி ஒனறும் இல்லை; வேலை செய்யும் பிள்ளைகளுக்குப்போதிய சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. காலை மாலை எல்லாம் இலவசமாக தேநீர், சிற்றுண்டி வழங்குகிருேம். வருடத்தில் ஒருமுறை அவர்களுடைய வேலையைப் பாராட்டி இனும் கொடுக்கப்படுகிறது. அவர்கள் உற்சாகமாக வேலைசெய்கிருர்கள்'' என்ருர்.

''சமீபத்தில்தொழிற்சாலையைப் பார்வையிட்டஅமைச்சர் பிலிப் குணவர்த்தனவிடம் சில கோரிக்கைகளைக் கொடுத்தேன். அவர் நிறைவேற்றுவதாக வாக்குறுதி தந்தார்'' என்று கூறினுர். அதிபர் யோசேப். தற்போது நாங்கள் நைலோன் கால் மேஸ், நைலோன் ரீ சேட், நைலோன்ஸ்போட்ஸ் சேட், நைலோன் ஸ்கேட், நைலோன் சுவெற்றேர்ஸ் ஆகிய பொருட்களை உற்பத்தி செய்கிருேம். இலங்கையின் பலபாகங்களிலும், குறிப்பாக தென்மாகாணத்தில் எமது பொருள்களுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது என்றும் அவர் சொன்னுர். மின்சாரவசதி கிடைக்கும் பட்சத்தில் தீவுப்பகுதியில் வடமாகாணத்திலேயே பெரியதொரு தொழிற்சாலையை நான் உண்டாக்குவேன் என்றும் அவர் நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

— சிந்தனைச்செல்வன்

### பழவகை...

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னரே குறிப்பிட்டது போலக் கைத்தொழில் முக்கியத்துவத்துக்கு ஏற்ப அரசாங்கம் அங்கீகாரமளிப்பதும் தொழில் தொடங்கிய முதல் ஐந்துவருட காலத்துக்கு வரிவிலக்கு அளிப்பதுபோன்ற கவர்ச்சிகரமான வரிச்சலுகைகளும் தனியார்களும், தொழிலதிபர்களும் ஆயிரக் கணக்கில் புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்குக் கைத்தொழில் அமைச்சிடம் அங்கீகாரம் பெறுவதற்கு வந்து நிற்கச் செய்திருக்கிறது. வடபகுதியில் 38 உட்பட ஆயிரக் கணக்கான புதிய தொழில்களுக்கு அரசாங்கத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது.

தற்போதைய சூழ்நிலையில் வடபிரதேசத்துக்கு மட்டும் தனிப்பட்ட எந்த ஒரு நபராலும் ஒரு கைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்வது சாத்தியமான காரியமல்ல. இது அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய காரியம். எப்படியிருந்த போதிலும்கொழும்புப் பகுதியில் கைத்தொழில்கள் தொடங்கும் யோசனைக்கு அரசாங்கம் ஆதரவு அளிப்பதாய் இல்லை. முக்கியமான மாகாணங்களில் கைத்தொழிற் பேட்டைகளை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடமாகாணத்தில் ஏற்கனவே இருந்து வரும் கைத்தொழில்களை ஆரம்பிக்க விரும்புகிறவர்களுக்கும் நன்மையளிக்கும்

[நன்றி அ. இ. தமிழ்க் காங்கிரஸ் 22-வது மகாநாடு மலர்]


கொஞ்சம் நில்லுங்களேன்!

வெற்றி வேண்டுமானுல்?
எதிர்நீச்சல் வேண்டுமே!

ஐடியல்- ஐலன்ட்
நிற்றிங் இன்டஸ்றீஸ்

Ideal-Island Knitting Industries

குறைந்த விலையில்
சிறந்த பொருட்களை வழங்குவோர்

தீவுப்பகுதியில்
துணிச்சலுடன் ஆரம்பிக்கப்பட்ட
ஸ்தாபனம்

உற்பத்தியாகும் சில பொருட்கள்

★ நைலோன் கால் மேசுகள் ★★ நைலோன் ரீ சேட்ஸ்
★★★ நைலோன் ஸ்போட்ஸ் சேட்ஸ் ★★★★ நைலோன்சுவற்றேஸ்
★★★★★ நைலோன் ஸ்கேட்ஸ் & சேட்ஸ்

உரிமையாளர்: நீக்கிலாஸ் யோசேப்
பிரதான வீதி
(அர்ச். அந்தோனியார் தேவாலயம் முன்பாக)
ஊர்காவற்றுறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருட்டுக்கைத்தொழில் வளர அரசாங்கம் உதவ வேண்டும்!

சுருட்டு உற்பத்தித் தொழில் யாழ். குடா நாட்டில் இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு மேலாகவே குடிசைக்கைத்தொழிலாக வளர்ந்து வந்திருக்கிறது. வேறெந்தக் கைத்தொழிலுமில்லாத நாள் தொட்டு இது கிராமப்புறங்களிலும் பரவலாகிப் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்புத் தேடிக் கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறது.

இத் தொழிலைச் சிலர் முழுநேர வேலையாகவும் சிலர் கமத்தொழிலுக்குப் பின் செய்யும் பகுதிநேர வேலையாகவும் மேற்கொண்டு வருவாயைப் பெருக்கிக் கொள்கிறார்கள். சமீபகாலமாகச் சுருட்டுக்குப் பதிலாக பீடி, சிகரெட் புகைப்போர் அதிகரித்து வருவதால் இத் தொழிலில் போதியளவு வேலைவாய்ப்பு தொழிலாளிகளுக்குக் கிடைப்பது குன்றிக்கொண்டே வருகிறது.



சி. முதலியார்

(காரியதரிசி,
இ. சு. தொ. சங்கம்)

இந்நிலையில் அரசாங்கம் இத்தொழிலை ஊக்குவித்து கூடிய வருவாய் கிடைக்கக் கூடியதாக ஆவன செய்ய முடியுமென தொழிலாளர்களும், உற்பத்தியாளர்களும் எதிர்பார்க்கிறார்கள். உற்பத்தியாக்கும் புகையிலை, சுருட்டுக்களைப் பேணி கெட்டுப்போகாமல் பாதுகாக்கக் கூடிய ஆராய்ச்சிகளை அரசாங்கம் நடாத்தி உதவி செய்தால் வெளிநாடுகளுக்கே சுருட்டுக்களை அனுப்பி அன்னிய செலாவணியைத் தேட முடியும். இதனால் அரசாங்கத்திற்கும் கூடியளவு வருமானம் வருமென்பதில் ஐயமில்லை.

சுருட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட பத்தாயிரத்திற்கு மேலான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்களென்றால் எத்தனை குடும்பங்கள் இத் தொழிலையிட்டு ஜீவனம் நடத்துகிறார்களென்பது தெளிவாகிறது. ஆகவே அரசாங்கம் இத்தொழிலின் முன்னேற்றத்திற்கு ஆவன செய்யவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் சுருட்டுகள் கண்டி, மாத்தளை, கலேடுவலை தம்மங்கடவை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உண்டுபண்ணும் புகையிலையைக்கொண்டே தயாரிக்கப்பட்டுவருகிறது. இதனால் அப்பகுதிகளிலிருக்கும் விவசாயிகளுக்கும் போதியளவு வருவாய் இவ்வுற்பத்தித் தொழிலால் கிடைக்கிறது ஆகவே ஏறத்தாழ ஐம்பதினாயிரம் மக்களுக்கு மேல் சுருட்டுக்கைத்தொழிலால் நன்மையடைந்துவருகிறார்களென்பதை யாராலும் மறுக்கமுடியாது. இத் தொழில் இன்னும் ஓங்கி வளர அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்கவேண்டும்.

## கைத்தொழில்...

[14ம் பக்கத் தொடர்ச்சி]

களை அரசாங்கம் மேலும் விருத்திசெய்வதோடு இத் தொழிற்சாலைகளோடு இணைந்த வேறுபல இணைத் தொழிற்சாலைகளைக் கிராமப் புறங்களிலும் நிறுவினால் கைத்தொழிற் பேட்டைகள் உருவாகுவதோடு நாட்டின் உற்பத்திப் பொருட்களின் தேவையையும் பூர்த்திசெய்யலாம்.

## கனகலிங்கம்......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரடிக் கவனிப்பிலேயே நடைபெறுகிறது. இதைவிட இவர்கள் சுருட்டுகளுக்குத் தெளிக்கவெனத் தயாரிக்கும் கோடாவில்கூட ஒரு தனித்தன்மை உண்டு.

### தயாராகும் சுருட்டுவகைகள்

கனகலிங்கம் சுருட்டுகள் அதன் அளவு, பருமன் ஆகியவைகளைப் பொறுத்தும் புகையிலையின் வகைகளைக் கொண்டும் நீட்டு டைமன், சின்ன டைமன், சுவிற், கிவ் கொறணேசன், கட்டை கொறணேசன், சிந்தாமணி, டீசல், நீட்டு சிகப்பு எனப் பல வகைகளில் தயாரிக்கப் படுகிறது: இதைவிட 'கோடாவில் நனைத்த சுருட்டைக் குடிப்பது நாகரிகமாகாது. அதெல்லாம் கௌரவக் குறைவு' எனச் சொல்லுபவர்களுக்கும் இருக்கவே இருக்கிறது. 'கோல்டின் லையிற் சிகார்!' இது கண்டிப் புகையிலையில் சிகரெட் போன்றவடிவில் தயாரிக்கப் பட்டு வாசனையூட்டப்பட்டு அழகான அட்டைப் பெட்டிகளில் அடைத்து விநியோகிக்கப்படுகிறது.

### சுருட்டுத் தொழிலாளர்கள்

கனகலிங்கம் சுருட்டுத் தொழிற்சாலையில் சுருட்டுவோர், கட்டுவோர், வெட்டுவோர், அடுக்குவோர், கோடா காய்ச்சுவோர், எழுதுவினைஞர் இவ்வாறு நூற்றுக்கும திகமானவர்கள் வேலை செய்கிறார்கள் இவர்களுக்கெல்லாம் சகல வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டிருக்கிறது. மாதம் தோறும் அநேகமாக இருபத்தைந்து நாட்களுக்குக் குறையாமல் வேலை வழங்கப் பட்டுவருகிறது. இரண்டு வாரத்துக்கு ஒரு முறை சம்பளம் வழங்கப்படுகிறது வேண்டுமானால் இடையில் முற்பணமும் பெற்றுக் கொள்ளலாம். வேலை செய்தவாறே பத்திரிகைச் செய்திகளையும் பெரிய புராணக் கதையையும் கேட்கலாம். ஆமாம் அதற்கெனவும் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அது முடிந்தால் அல்லது அதில் சலிப்பு ஏற்பட்டால் வானொலிப் பெட்டியை முடுக்கிவிடலாம்.

மானிப்பாயில் தயாராகும் இக்கனகலிங்கம் சுருட்டுகள் கொழும்பு, 17, சென்ஜோன் வீதியில் அமைந்திருக்கும் வே. கனகலிங்கம் பிள்ளை அன் சன் தாபனத்தின்மூலம் நாடெங்கும் விநியோகிக்கப் படுகிறது.

பொ. சண்முகநாதன்

# இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்காக உழைத்தவர் குருநானக்

புதுடில்லி, நவ. 29

இந்தியாவிலுள்ள சீக்கியர்கள் வழிபடும் சீக்கிய சமயத்தைத் தோற்றுவித்தவரான குரு நானக்கின் ஐந்நூறு ஆண்டு நிறைவு விழா இவ்வாண்டு இந்தியாவில் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இந்து-முஸ்லிம் ஒற்றுமையை நிலைநாட்ட அயராது உழைத்தவர் இம்மகான். பஞ்சாவில் நடைபெற்ற இந்த விழாவில் தமிழ்நாடு முதல்வர் திரு. கருணாநிதியும் கலந்து கொண்டார்.

பஞ்சாவின் ஷேத்புர மாவட்டத்திலுள்ள தல்வாண்டி கிராமத்தில் வசித்து வந்த மேத்தா காளு என்பவரின் மனைவி திரிப்பா, 1469-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் திகதி நானக்சாந் பிறந்தார்.

வாழ்க்கையின் 'உண்மையை' அறிந்துகொள்ள அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது. இத்தாகத்தை அவரால் தணிக்க முடியவில்லை. எனவே 'உண்மையை' அறியும் பொருட்டு, இல்லற வாழ்க்கையைத் துறந்து நாடோடியானார்.

இந்து, முஸ்லிம் மக்களுக்கிடையில் பல நூற்றாண்டுகளாக இருந்துவந்த பகைமையை நினைத்து மனம் வருந்தினார் நானக். ஜாதி, மத வேற்றுமைகளை அகற்றுவதற்கு தனதுவாழ்க்கையை அர்ப்பணித்தார். ''கடவுள் ஒருவனே. அன்பே கடவுள்; சத்தியமே கடவுள்; இந்துக்கள், முஸ்லிம்கள் அனைவருமே கடவுளின் குழந்தைகள்'' என்பதுதான் குரு நானக்கின் தத்துவம். மர்தனா என்ற முஸ்லிமையும் பாலா என்ற இந்துவையும் சேர்த்துக்கொண்டு பஞ்சாபிலுள்ள கிராமங்களுக்கெல்லாம் சென்று தனது தத்துவங்களைப் போதித்து வந்தார்.

குரு நானக் இந்தியாவின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்து தனது கருத்துக்களைப் பரப்பினார். பின்னர் இலங்கை அராபியா

(20-ம் பக்கம் பார்க்க)


REGAL JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p.m.
Poya, Pre-poya 4 Shows
Phil Silvers,
Kenneth Williams
in
FOLLOW THAT CAMEL

ராக்ரர் விற்பனைக்கு

25 ஸ்ரீ 6000 தொடர் இலக்க ''போட் 4000'' ராக்ரர் உடன் விற்பனைக்கு உண்டு. பார்வை இட்டு விலை கோரவும்.

ராஜா கோப்பரேஷன்,
கண்டி றோட்,
[illegible]

1839

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
பாகப்பிரிவினை

4-30 p.m Only
Prepoya & Poya 10-30 a.m.
Georges Riviere,
Diana Martin
in
MINNESOTA CLAY
(English)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்-விஜயகுமாரி
முத்துராமன்-வாணிஸ்ரீ
நடித்த
லட்சரம்மா
முக்கிய கவனிப்பு
மாதர்கள் எல்லா வகுப்புகளுக்கும் அரைக்கட்டணத்துடன் அனுமதிக்கப்படுவர்

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
BOB
&
SALLY
(Strictly for Adults)

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தென்னகத் திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
எதிர் நீச்சல்

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் றோட்டில் பள்ளிக்கூடங்கள், தபால் கந்தோர், பஸ் நிற்குமிடங்களுக்குக்கிட்ட (4) நாலு பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு க. மயில்வாகனம், மின்சார நிலையம், சுன்னாகம். 1570

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு. 1969 டிசம்பர் பரீட்சை G. C. E. (O/L) சரித்திர பாட வழிகாட்டி வினா-விடை இரண்டாம் பகுதி: விலை 3 ரூபா. ஸ்ரீ காந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1573

காணி

181-ம் கட்டை கண்டி றோட் மிருசுவிலில் 24 பரப்பு பிரயோசனந்தரும், தென்னைகளுடன் A. S. சங்கரப்பிள்ளை கடைக்குச் சமீபமாக கந்தையா சரவணமுத்து வீட்டுக்குப் பக்கத்தில். தொடர்புகொள்ளவும் திருமதி சி. ஆறுமுகம், தில்லைவாசா, பிள்ளையார் கோவிலடி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை. 1575

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி 2-30 6-30, 9-30.
நம்பியார் - ஆனந்தன்
பத்மினி
நடித்த
நீயா நானா?

மனோகரா
யாழ்ப்பாணம்
காமினி பொன்சேகா
ருக்மணி தேவி, ஜயகாந்த்
நடிக்கும்
பாராவலலு
(சிறந்த சிங்களச் சித்திரம்)

ராணி (யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெமினி - சரோஜாதேவி
எஸ்.எஸ்.ஆர்.-ராஜசுலோசனா
நடித்த
குலவிளக்கு

இப்பொழுது நடைபெறுகிறது
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
★ ரவிச்சந்திரன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ்
★ சோ
★ ஆனந்தன்
★ குமாரி சச்சு
★ மனோரமா
★ தேவகி
நடித்த
முக்தா பிலிம்ஸாரின்
நினைவில் நின்றவள்
இசை வி குமார் | கதைவசனம் சோ | டைரக்ஷன் வி சீனிவாசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாத்மா மணிமொழிகள்!

உலகிலிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் தகுதி பெறுவது, பூரண சுதந்திரத்துடன் தனது வாழ்க்கையை வாழக் கற்றுக்கொள்ளும் திறமைபெறுவது ஆகியவையே சுயராஜ்யத்திற்குத் தேவையான பயிற்சியாகும்.

0 0 0

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன்களை நல்ல முறையிற் தொழிற்படச் செய்வதே அறிவுக்கு உண்மையான அபிவிருத்தி என்பது என் கருத்து.

0 0

அறிவும் உடலும் நன்ருக வளர்ச்சியடையும் போது இதயதத்துவமும் விழிப்படைய வேண்டுவது அவசியமாகும்.





## மில்க் வைற் சோப்

பாவிப்பாளர்களுக்கு
ஓர் அன்பான வேண்டுகோள்
பாவித்த 50 மில்க் வைற் சோப்
மேலுறைகளை சேகரித்து
அனுப்பி
ஓர் அழகான படத்தை
இனமாகப்
பெற்றுக்கொள்ளுங்கள்.


## உடும்பைக் கொன்ற நாகமும் மாண்டது

பருத்தித்துறை. ஞாயிறு

ஆறடி நீளமான நாகபாம்பொன்று உடும்பு ஒன்றைத் துரத்தித்துரத்திக் கடித்துக் கொன்ற சம்பவமொன்று நேற்று முன்தினம் புத்தூர் மேற்கைச்சேர்ந்த ஒருவரின் வீட்டில் நடைபெற்றது. அயலவர்கள் சேர்ந்து நாகபாம்பை அடித்துக்கொன்றதுடன் உடும்பையும், நாகத்தையும் பொதுமக்கள் பார்வைக்கு வீதியோரத்திற் கட்டித்தூக்கியிருந்தனர்.

# பருத்தித்துறை நகரசபை தேர்தல் முடிவுகள்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை நகர சபைக்குப் புதிய அங்கத்தவர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் இன்று நடைபெற்றது அமைதியாக நடைபெற்ற வாக்களிப்பின் பின் மாலையில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. மொத்தம் ஒன்பது வட்டாரங்களில் 8-ம் வட்டாரத்துக்கு திரு வி தர்மலிங்கம் ஏற்கனவே போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டிருந்தார் தற்போதைய தலைவரான திரு என் நடராஜா அதிகப்படியானவாக்குகள் பெற்று மீண்டும் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் இதர அபேட்சகர்களைவிட மிகக் கூடுதலான வாக்குகள் பெற்றவர் திரு நடராஜாதான் அவருக்குக் கிடைத்த மேலதிக வாக்குகள் 297 இத் தேர்தலில் மிகக்குறைந்த வாக்குகளாக மூன்று வாக்குகளால் வெற்றியீட்டியவர் 5-ம் வட்டார அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு வின்சென்ட் டி போல் ஆவர். தேர்தலில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு:

1-ம் வட்டாரம்:
எஸ் முருகேசு

2-ம் வட்டாரம்:
எம் ஏரம்பமூர்த்தி

3-ம் வட்டாரம்:
என் நடராஜா

4-ம் வட்டாரம்:
எஸ் விவேகானந்தராஜா

5-ம் வட்டாரம்:
வின்சென்ட் டி போல்

6-ம் வட்டாரம்:
வி கமலநாதன்

7-ம் வட்டாரம்:
கே குமாரசாமி

8-ம் வட்டாரம்:
வி தர்மலிங்கம் (போட்டியில்லை)

9-ம் வட்டாரம்:
கே சேனாதிராஜா

நான்குபேர் தமிழ்க்காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்தவர்களாவர்


ஈழநாடு

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் கார்த்திகை மாதம் 16-ந் திகதி [1-12-69]


## நாவலர் குருபூசை

இம்மாதம் வெளியான ''நல்லை நாவலர்'' சஞ்சிகையிலே, நாவலர் பெருமானின் தினசரி வாழ்க்கைத் திட்டம் எப்படி அமைந்ததென்பது பற்றிய நல்ல விபரங்கள் வெளியாகியுள்ளன. அத்துடன் நமது தினசரி வாழ்க்கையை நாம் எப்படி நடத்துகிறோமென்பதை சிந்தித்து ஒப்பிட்டுப்பார்ப்பது பயனுள்ளதாக இருக்கும்.

அதிகாலை 3 மணிக்கே எழுந்து விடுவாராம் அவர். 4 மணிவரை சிவத்தியானமும், சிவ மூலமந்திரஜபமும், தோத்திரமும். 4 முதல் 5 மணிவரை திருவள்ளுவர் பரிமேலழகர் உரையும் திருக்கோவையாரும் படிப்பது. 5 முதல் 6 மணிவரை காலைக்கடன் அனுட்டானம், சிவாலயதரிசனம்.

பின்னர் காலை 6 முதல் 8 மணிவரை, அச்சு 'புரூப்' பரிசோதித்தல். 8 மணி முதல் 10 மணிவரை சிவபூஜையும் போசனமும். 10 மணி முதல் 12 மணிவரை சைவ சித்தாந்தப்படிப்பு. 12 மணி முதல் 2 மணிவரை புத்தக பரிசோதனை. 2 மணி முதல் 4 மணிவரை உரை செய்வது. 4 மணி முதல் 5 1/2 மணிவரை சமஸ்கிருதப் படிப்பு. 5 1/2 மணி முதல் 6 மணிவரை உலாவுதல்.

அடுத்தபடி இரவு 6 மணி முதல் 6 1/2 மணி வரை அனுட்டானம் சிவாலய தரிசனம். 6 1/2 மணி முதல் 9 மணிவரை புத்தக பரிசோதனை. 9 மணி முதல் 10 மணி வரை புராணம் வசனம் எழுதுதல். 10 மணி முதல் 3 மணிவரை நித்திரை. விசேஷ நாட்களில் வேறு விசேஷதிட்டம்.

ஒழுக்கத்தால் உயர்ந்த நாவலர் பெருமானை இன்று தமிழ்கூறும் நல்லுலகம் நன்றியுடன் அதிகம் போற்றுகிறதென்றால், அவர் மேற்குறித்தபடி திட்டமிட்டு, தமது நித்தியவாழ்க்கையை ஒவ்வொருகணமும் தமக்கென வாழாது பிறர்க்காகவே வாழ்ந்து தம்மையே மக்கள் தொண்டுக்கு ஒப்புவித்த காரணத்தால்தான். தொண்டு, தொண்டு, தொண்டு. இதுவே அவரது வாழ்க்கையின் குறிக்கோள்.

நம்மில் பலரது வாழ்க்கைக் குறிக்கோளும் என்ன? இதைப்பற்றி சிறிது சிந்தித்தோமானுல், வாழ்க்கையின் நோக்கம் பணம், பணம், அதிகப்பணம் என்றே தெரிய வரும். கூடுமானவரை அதிக வருமானம் பெற என்ன வழி என்பதையே சிந்தனை செய்து, வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் அதற்காகவே செலவழிக்கிறோமென்பதை உணர்வோம். 'ஆக்கைக்கே இரைதேடி அலமந்து' முடிவில் 'காக்கைக்கே இரையாகிக் கழிக்கின்றோம்'. இதனுல் இன்பமோ திருப்தியோ ஏற்படுகின்றது.

கிடைத்தற்கரிய இம்மானிட வாழ்க்கையின் குறிக்கோள், இன்பமே எந்நாளும் துன்பமில்லாத நிலைபெறுவதுதான். அதற்குத் தமது வாழ்க்கை மூலமும், எழுதியுள்ள பல அரிய நூல்கள்வாயிலாகவும் நமக்கு உய்யும் வழிகாட்டியுள்ளார்கள் நாவலர் பெருந்தகை.

அந்த மேலானவழியைக் கூடுமானவரை பின்பற்றி, நமது நித்திய நைமித்தியத்தையும் தக்கபடி அமைத்து அதன்படி நடப்பதே நாவலர் பெருமானுக்கு நாம் செய்யும்உண்மையான குருபூசையாகும்.

## அம்பாளுக்கு தங்கப் பதக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

அரியாலை கலைமகள் வீதியிலுள்ள சரஸ்வதி அம்பாள் ஆலயத்தில் இன்று தங்கப் பதக்கம் சூட்டுவிழா நடைபெறவிருக்கிறது.

கவிஞர் வி. கந்தவனம் தலைமையில் நடைபெறும் கவியரங்கில், கவிஞர்களான இ. நாகராசன், வே. குமாரசாமி, மு. செ. விவேகானந்தன், த. தணிகாசலம், த. பரமலிங்கம், செ. சுந்தரம்பிள்ளை, வே. ஐயாத்துரை ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

நாடக கலாமணி பரமானந்தன் தலைமையில் நடைபெறும் உரையரங்கில் திருவாளர்கள் ஆசிரியர் வீ. ஐயாத்துரை, இ. கே. குமரையா, பண்டிதர் இரா. சுப்பிரமணியம், க. சொக்கலிங்கம், க. கணேசலிங்கம், எம். பி. செல்வரத்தினம், செல்வன் கே. தங்கராசா ஆகியோர் கலந்துகொள்வர். திரு. வி.சி. குஞ்சிதபாதம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

## குருநானக்

19-ம் பக்கத் தொடர்ச்சி)
'மெக்கா மதினு) ஈரான் ஆகியநாடுகளுக்கும் விஜயம் செய்தார்.

குரு நானக் தனது அந்திய காலத்தை கர்த்தாபூரில் கழித்தார். இந்துக்களும் முஸ்லிம்களும் அவர்மீது அளப்பரிய அன்புவைத்திருந்தனர். 1539-ம் ஆண்டு குரு நானக் அமரரானுர். அவரின் பூத உடலைப்புதைப்பதா அல்லது தகனம்செய்வதா என்ற சர்ச்சை இந்து முஸ்லிம்களுக்கிடையில் ... அவர்கள் அவ்வளவு அன்பு வைத்துள்ளனர்.

## 15 தமிழ் மாணவர்களுக்கு அனுமதிமறுப்பு

உடுப்பிட்டி, திங்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடவசதியின்மையால் 15 தமிழ் மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. கனிஷ்ட பல்கலைக்கழகங்களில்' உள்ள 1000 இடங்களுக்கும் 15.000 மாணவர்கள் விண்ணப்பம் செய்திருப்பதால் இங்கும், இவர்களுக்கு இடம் கிடைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இவர்கள் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில் 4 பாடங்களில் சித்தியடைந்தபோதிலும் தராதரம் இருந்தும், இடமில்லை என்ற ஒரே காரணத்திற்காக அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

தேசிய உயர் கல்விச் சபைத் தலைவர் திரு. ஜி. பி. மலலசேகரா பல்கலைக்கழகத்தில் இத்தமிழ் மாணவர்களுக்கு அனுமதி வழங்குமாறு சிபார்சு செய்திருந்த போதிலும் பல்கலைக்கழக 'செனட்' இதுபற்றி எவ்வித முடிவும் எடுக்காமலிருக்கிறது.

இவ்விஷயமாக, உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரத்தை மாணவர்குழு ஒன்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபோது இவ்விஷயமாக கூடிய விரைவில் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்காத 15 தமிழ் மாணவர்களுக்கும் பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் எவ்வித போட்டி பரீட்சையும் இல்லாமல் இடம் கொடுக்க முயற்சி எடுக்குமாறு மாணவர்குழு உபசபாநாயகரிடம் கேட்டுக்கொண்டது.

## கருத்தரங்கு

சுன்னுகம் கிறிஸ்தவ ஆச்சிரமத்தில் இன்று நடைபெறவிருந்த கருத்தரங்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## அல்பேனிய நிறைவு தினம்

யாழ்ப்பாணம், திங்கள்

அல்பேனிய தேசிய விடுதலையின் 25-ம் ஆண்டுநிறைவுதினக் கூட்டம் இன்று யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. திரு. என். சண்முகதாசன், திரு. வி ஏ. கந்தசாமி உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்துவர்.

## திருமண அழைப்பு

நல்லூர் ஏ. ஆர். செல்லத்துரை தம்பதிகளின் புதல்வன் செல்வன் சிவப்பிரகாசத்திற்கும் வண்ணர் பண்ணை பி. ஏ தம்பிலேன், காலஞ்சென்ற இராமலிங்கம் I. C. S., திருமதி P இராமலிங்கம் தம்பதிகளின் புதல்வி செல்வி சாந்திக்கும் டிசம்பர் 6-ந் திகதி மாலை 6 மணிக்கு வண்ணை சிவன் கோவிலில் நடைபெறும் திருமணத்துக்கு நண்பர்கள் உறவினர் அனைவரையும் அழைக்கின்றோம்.

## தேவை

மதவாச்சி ஸ்டேசன் அருகாமையில் கிறசர் வேலைக்கு உடனடியாக 6 தொழிலாளிகள் தேவை. தொடர்ந்து வேலையுண்டு. சகல வசதிகளுடன் சம்பளம் 6/. கு. விவேகானந்தன், வல்வெட்டித் துறை- 1583

## விற்பனைக்கு

தொண்டமனுற்றில் ஆற்றோரமாக 4 பரப்புக்காணி (திரிவியாகொல்லை) விற்பனவுக்கு உண்டு கு. விவேகானந்தன், வல்வெட்டித் துறை 1582

இப்பத்திரிகை 'ஈழநாடு லிமிட்டெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம்சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org